தமிழரசு
டிசம்பர் 1-31, 2001







சுற்றுலாத்துறை நடத்திய
மாமல்லபுரம் நாட்டிய விழா





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2032
கார்த்திகை – மார்கழி
டிசம்பர் 1–31, 2001
மலர் : 33 இதழ் : 11 & 12
விலை ரூ.10

## இந்த இதழில்...


- நிதிச்சீரமைப்பு .......... 2
- எச்சில் (கவிதை) .......... 8
- இசைப்பற்றி டாக்டர் எம்.ஜி.ஆர். .......... 9
- சித்த மருத்துவ முகாம் .......... 12
- பெண் குழந்தைகள் பாதுகாப்பு .......... 13
- வீட்டுக்கடன் வட்டி தள்ளுபடி .......... 15
- கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு .......... 16
- அண்ணா பல்கலைக்கழகம் .......... 17
- கணினி பொறியியல் .......... 18
- சிறுதொழில் வளர .......... 21
- போலியோ ஒழிப்பு .......... 22
- அடிப்படை சுகாதார வசதி .......... 24
- இலவச மிதி வண்டி .......... 25
- மதுரை - தேனி மாவட்டங்களுக்கு குடிநீர் திட்டம் .......... 26
- டேனிடா குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம் .......... 27
- அனைத்து மக்களுக்கும் வீட்டுவசதி .......... 33
- ஆற்றங்கரைப் பிள்ளையார் .......... 34
- தமிழக அரசின் விருது வழங்கும் விழா .......... 37
- இஞ்சிச் சாகுபடி .......... 45
- சுதந்திர போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் .......... 49
- மருத்துவக் கட்டுரை .......... 50
- தமிழிசை வளர்த்த அண்ணாமலை அரசர் .......... 54
- விண்வெளி .......... 57
- தூய பரத நாடு (கவிதை) .......... 65
- அம்பு எய்தவனும் - அன்பு பெய்தவனும் .......... 66
- பணியாளர் சீராய்வு .......... 71
- பீடி தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி .......... 72
- மக்கள் கவிஞர் .......... 73


முதல் பக்க அட்டையில்...

டாக்டர் எம்.ஜி.ஆர். (நினைவு நாள் டிசம்பர் 24)

கடைசிப்பக்க அட்டையில்...

மகாகவி பாரதியார் (பிறந்த நாள் டிசம்பர் 11)

# நிதிச் சீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டணம் குறைப்பு



மாண்புமிகு முதலமைச்சர்
திரு. **ஓ.பன்னீர்செல்வம்** அறிக்கை

நிதி நிர்வாகத்தில் முந்தைய அரசு காட்டிய மெத்தனப் போக்கினால், தமிழ்நாட்டின் நிதி நிலைமை நெருக்கடியான கட்டத்திற்கு தள்ளப்பட்டதை, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் வெளியிட்ட வெள்ளை அறிக்கை வாயிலாக, தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். தமிழ்நாட்டில் தற்போது நிலவி வரும் கடுமையான நிதிப் பற்றாக்குறையைப் போக்கிடவும், நிதி நிர்வாக சீர்கேட்டினைக் களையவும், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்கிடவும், தமிழக அரசு கடந்த 28.11.2001 அன்று கட்டண உயர்வு உட்பட பல்வேறு நிதிச் சீர்த்திருத்த நடவடிக்கைகளை அறிவித்திருக்கிறது.

இவ்வாறு அறிவிக்கப்பட்ட விலை மற்றும் கட்டண உயர்வுகள் மற்றும் நிதி நிர்வாகச் சீர்த்திருத்த நடவடிக்கைகள் ஆகியவற்றை தமிழக அரசு, கனத்த இதயத்தோடும், தமிழகத்தின் எதிர்காலம், குறிப்பாக நிதி ஆதாரங்களைப் பொறுத்தவரையில், ஆரோக்கியமான நிலையில் அமைந்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு மட்டுமே எடுத்தது. மேலும் இத்தகைய நிதிச் சீர்த்திருத்த நடவடிக்கைகளைத் தற்போது எடுக்காவிட்டால், தமிழகத்தின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படும் என்பதையும் நன்கு உணர்ந்தே, ஏழை எளியவர்கள், குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருப்பவர்கள் இந்த கட்டண உயர்வு போன்ற நடவடிக்கைகளால் பாதிப்புக்கு உள்ளாகாத வகையில், தமிழக அரசு இவற்றை அறிவித்து, 1.12.2001 முதல் அமலுக்கு கொண்டு வர உத்தரவிட்டது.

இருப்பினும் 1.12.2001 முதல் அமலபடுத்தப்பட்டுள்ள அரசு பேருந்துகளுக்கான கட்டண உயர்வால் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் சிரமத்துக்கு உள்ளாகியிருக்கின்றார்கள் என்ற செய்தியும், அதே போன்று பொது விநியோகத் திட்டத்தில் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் என வகைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு அரிசியின் விலை உயர்த்தப்பட்டதால் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்ற செய்தியும் பல்வேறு தரப்பு பொது மக்களிடமிருந்தும், சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் மற்றும் தொண்டர்களிடமிருந்தும் அரசுக்கு கிடைத்தது. அதனைத் தொடர்ந்து அரசு அறிவித்த கட்டண உயர்வு மற்றும் நிதிச் சீர்த்திருத்த நடவடிக்கைகள் எங்ஙனம் ஏழை, எளியோரை பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் அரசு பேருந்துகளுக்கான கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு மற்றும் பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை ஆகியவை சீரமைக்கப்பட தக்க ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கப்பட்டது. ஆலோசனைகளின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட பல்வேறு கட்டண உயர்வு விகிதங்களை ஏழை எளியோருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பின்வருமாறு சீரமைத்திட 5.12.2001 கூடிய தமிழக அமைச்சரவை முடிவு செய்தது.

## பேருந்துக் கட்டண குறைப்பு

அரசு பேருந்துகளுக்கான கட்டண உயர்வைப் பொறுத்த வரையில் அதில் பல்வேறு தரப்பு மக்களால் சுட்டிக்காட்டப்பட்ட கட்டண உயர்வில் உள்ள முரண்பாடுகள் களையப்பட்டும், உயர்த்தப்பட்ட கட்டண விகிதம் குறைக்கப்பட்டும், அதன் வாயிலாக ஏழை எளியோர் மற்றும் நடுத்தர வர்க்க மக்கள் பயனடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்த புதிய கட்டண விகிதங்கள் பின்வருமாறு அமையும்.

### புதிய பேருந்துக் கட்டண விகிதங்கள்

| கி.மீ. | ஸ்டேஜ் | கட்டணம் 1-12-2001 முன்பு | கட்டணம் 1-12-2001லிருந்து | மாற்றப்பட்ட கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2. | 1 | 1.50 | 2.00 | 2.00 |
| 3. | | | | |
| 4. | 2 | 1.75 | 2.50 | 2.00 |
| 5. | | | | |
| 6. | 3 | 2.00 | 3.00 | 3.00 |
| 7. | | | | |
| 8. | 4 | 2.25 | 3.50 | 3.00 |
| 9. | | | | |
| 10. | 5 | 2.50 | 4.00 | 3.50 |
| 11. | | | | |
| 12. | 6 | 2.75 | 4.50 | 4.00 |
| 13. | | | | |
| 14. | 7 | 3.00 | 5.00 | 4.00 |
| 15. | | | | |
| 16. | 8 | 3.25 | 5.50 | 4.50 |
| 17. | | | | |
| 18. | 9 | 3.25 | 5.50 | 4.50 |
| 19. | | | | |
| 20. | 10 | 3.50 | 6.00 | 5.00 |
| 21. | | | | |
| 22. | 11 | 3.75 | 6.50 | 5.00 |
| 23. | | | | |
| 24. | 12 | 4.00 | 6.50 | 5.50 |
| 25. | | | | |
| 26. | 13 | 4.00 | 7.00 | 6.00 |
| 27. | | | | |
| 28. | 14 | 4.00 | 7.00 | 6.00 |
| 29. | | | | |
| 30. | 15 | 4.25 | 7.50 | 6.00 |
| 31. | | | | |
| 32. | 16 | 4.25 | 7.50 | 6.00 |
| 33. | | | | |
| 34. | 17 | 4.25 | 8.00 | 6.00 |
| 35. | | | | |
| 36 | 18 | 4.50 | 8.00 | 6.50 |

| கி.மீ. | ஸ்டேஜ் | கட்டணம் 1-12-2001 முன்பு | கட்டணம் 1-12-2001லிருந்து | மாற்றப்பட்ட கட்டணம் |
|---|---|---|---|---|
| 37. | | | | |
| 38. | 19 | 4.50 | 8.50 | 6.50 |
| 39. | | | | |
| 40. | 20 | 4.50 | 8.50 | 6.50 |
| 41. | | | | |
| 42. | 21 | 4.75 | 9.00 | 7.00 |
| 43. | | | | |
| 44. | 22 | 5.00 | 10.00 | 7.00 |
| 45. | | | | |
| 46. | 23 | 5.00 | 10.00 | 7.00 |

## 10 கி.மீ.லிருந்து 20 கி.மீ. தூரத்துக்கான கிராம மற்றும் நகர பேருந்துக் கட்டண விகிதம்

| | 1.12.2001க்கு முன்பு | | 1.12.2001லிருந்து | | மாற்றப்பட்டக் கட்டணம் | |
|---|---|---|---|---|---|---|
| கி.மீ. | நகரம் | கிராமம் | நகரம் | கிராமம் | நகரம் | கிராமம் |
| 10 | 2.25 | 2.25 | 4.00 | 4.00 | 3.50 | 3.50 |
| 11 | 2.75 | 2.50 | 4.50 | 6.00 | 4.00 | 4.00 |
| 12 | 2.75 | 2.75 | 4.50 | 6.00 | 4.00 | 4.00 |
| 13 | 3.00 | 2.75 | 5.00 | 6.00 | 4.00 | 4.00 |
| 14 | 3.00 | 3.00 | 5.00 | 6.00 | 4.00 | 4.00 |
| 15 | 3.25 | 3.25 | 5.50 | 6.00 | 4.00 | 4.50 |
| 16 | 3.25 | 3.50 | 5.50 | 6.00 | 4.50 | 4.50 |
| 17 | 3.25 | 3.75 | 6.00 | 6.00 | 4.50 | 5.00 |
| 18 | 3.25 | 4.00 | 6.00 | 6.00 | 4.50 | 5.50 |
| 19 | 3.50 | 4.25 | 6.00 | 6.00 | 5.00 | 5.50 |
| 20 | 3.50 | 4.50 | 6.00 | 6.00 | 5.00 | 6.00 |

## கிராம, மலைப்பிரதேசம், விரைவுப் பேருந்துக் கட்டணம் விகிதம்

| | கிலோமீட்டர் | | | |
|---|---|---|---|---|
| | 1.12.2001க்கு முன்பு | 1.12.2001லிருந்து | மாற்றப்பட்ட கட்டணம் | கட்டண வித்தியாசம் |
| கிராமப்புறம் சாதாரண பேருந்து | 22 | 30 | 28 | 6 |
| மலைப் பிரதேசம் சாதாரண பேருந்து | 23 | 38 | 31 | 8 |
| மலைப் பிரதேசம் விரைவு பேருந்து | 30 | 43 | 37 | 7 |
| மலைப் பிரதேசம் சூப்பர் டீலக்ஸ் | 35 | 48 | 42 | 7 |
| விரைவு பேருந்து | 25 | 37 | 32 | 7 |
| விரைவு பேருந்து சூப்பர் டீலக்ஸ் | 30 | 43 | 38 | 8 |

## பொது விநியோகத் திட்டத்தில் ஏழைகளுக்குப் பாதுகாப்பு

பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரை 1.12.2001 முதல் அமலுக்கு வந்துள்ள விலை உயர்வினால் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு (Below Poverty Line Families) எத்தகைய பாதிப்பும் ஏற்படக் கூடாது என்ற நோக்கத்தில் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசியின் விலை முன்பு இருந்ததைப் போலவே 1 கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற அளவிலேயே தற்போதும் இருக்க வேண்டும் என இந்த அரசு உத்தரவிட்டது. ஆயினும் கடந்த ஆட்சியின்போது குடும்ப அட்டைகளை வழங்குவதற்காக நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் ஏராளமான குளறுபடிகளும் முறைகேடுகளும் நடந்து, உண்மையிலேயே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பல இலட்சக்கணக்கானவர்கள் அவர்களுக்குரிய குடும்ப அட்டை பெறாமல் உள்ளார்கள் என்றும், அதனால் உண்மையிலே வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிய வந்துள்ளது. மேலும், உண்மையிலேயே வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு 'P' வரிசை அட்டைகள் வழங்கப்படாமல் உள்ளது என்றும், அதே சமயத்தில் அதற்குத் தகுதி இல்லாத பலரும் இந்த குடும்ப அட்டைகளை வைத்துள்ளார்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

ஆகவே முந்தைய ஆட்சியில் பொது விநியோக திட்டத்தில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களைச் சரியாக இனம் கண்டு பிடிப்பதில் பல குழப்பங்களும், முறைகேடுகளும் நடந்துள்ளன என்பதும், அதனால் ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் தற்போது தெரிய வந்துள்ளது. ஏற்கெனவே கடந்த ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொது விநியோகத் திட்டத்தில் பல குழப்பங்களும், குளறுபடிகளும் உள்ளதால், 1.12.2001 முதல் அமலுக்கு வந்துள்ள புதிய நடைமுறையில் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. இவற்றையெல்லாம் பரிசீலித்து தமிழக அமைச்சரவை கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்துள்ளது.

**வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு (Below Poverty Line Families) எத்தகைய பாதிப்பும் ஏற்படக் கூடாது என்ற நோக்கத்தில் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசியின் விலை முன்பு இருந்ததைப் போலவே 1 கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற அளவிலேயே தற்போதும் இருக்க வேண்டும் என இந்த அரசு உத்தரவிட்டது.**

1. இனிமேல் தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு (BPL) ஒருவகை அட்டையும், வறுமைக் கோட்டிற்குக் மேல் வாழும் குடும்பங்களுக்கு (APL) ஒருவகை அட்டையும் என இரண்டு வகை குடும்ப அட்டைகள் மட்டுமே நடைமுறையில் இருக்கும்.

2. இந்த இரண்டு வகை குடும்ப அட்டைகளை விநியோகிப்பதற்கு முன்பு தமிழகம் முழுவதும் இத்தகைய குடும்பங்களை இனம் கண்டு பிரிப்பதற்கு புதிய கணக்கெடுப்பு தமிழக அரசால் 1.1.2002 முதல் தொடங்கப்பட்டு 28.2.2002க்குள் முடிக்கப்படும்.

3. இந்த கணக்கெடுப்பின் அடிப்படையிலும் மத்திய அரசின் வழிகாட்டுதல்களின் அடிப்படையிலும், ஆண்டு வருமானம் ரூ.24,000 வரை பெறுகின்ற குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் (Below Poverty Line Families) என்று வகைப்படுத்தப்படும். ஆண்டு வருமானம் ரூ.24,000-க்கு மேல் பெறுகின்ற குடும்பங்கள்

**இனிமேல் தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு (BPL) ஒருவகை அட்டையும், வறுமைக் கோட்டிற்குக் மேல் வாழும் குடும்பங்களுக்கு (APL) ஒருவகை அட்டையும் என இரண்டு வகை குடும்ப அட்டைகள் மட்டுமே நடைமுறையில் இருக்கும்.**

வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்கள் (Above Poverty Line Families) என்று வகைப்படுத்தப்படும்.

**குடிசைகளில் வாழும் மக்களுக்கு இலவச மின்சாரம் என்றும், விவசாயத்திற்கு இலவச மின்சாரம் என்றும் உள்ள நடைமுறையில் எந்த விதமான மாற்றமும் இல்லை.**

4. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு பச்சை (Green) நிறம் கொண்ட குடும்ப அட்டைகளும், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு நீல (Blue) நிறம் கொண்ட குடும்ப அட்டைகளும் வழங்கப்படும்.

5. புதிய குடும்ப அட்டைகள் விநியோகம் செய்யப்படும் பணி வருகின்ற 1.3.2002 அன்று தொடங்கி 30.4.2002க்குள் நிறைவு பெறும்.

6. இந்த புதிய நடைமுறை 2002, மே 1ஆம் தேதி முதல் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

7. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு, அதாவது, தற்போது ரக குடும்ப அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.9 என்பது அதிகம் என்றும், அது குறைக்கப்பட வேண்டும் என்றும் பல்வேறு தரப்பு மக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வறுமைக் கோட்டிற்கு மேலே வாழும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையும் குறைக்கப்படும்.

8. இதற்கிடையில் புதிதாக கணக்கெடுப்பு நடத்தி புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும் வரையில், அதாவது 1.5.2002 வரையில், தற்போது பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற அரிசியின் விலை அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1.12.2001க்கு முன்பு இருந்த பழைய விலைக்கே, அதாவது, கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலைக்கே வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. மேலும், சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியனவும் 1.12.2001க்கு முன்பு இருந்த பழைய விலைகளிலேயே வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

### மின் கட்டண உயர்வில் மாறுதல்

மின் கட்டண உயர்வை பொறுத்தவரையில், வீட்டு உபயோகத்திற்கு மின்சாரத்தை பயன்படுத்துவோருக்கு ஏற்கெனவே யூனிட் ஒன்றுக்கு 75 பைசா என்று இருந்தது 1 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இந்த கட்டண உயர்வைப் பொறுத்தவரை குடிசைகளில் வாழும் மக்களுக்கு இலவச மின்சாரம் என்றும், விவசாயத்திற்கு இலவச மின்சாரம் என்றும் உள்ள நடைமுறையில் எந்த விதமான மாற்றமும் இல்லை. அதே சமயத்தில் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் 25 முதல் 50 யூனிட் அளவுக்கு மட்டுமே மின்சாரத்தை பயன்படுத்துவதால் அவர்களுக்கு விதிக்கப்படும் மின்சார கட்டணத்தில் எந்தவித பாதிப்பும் வராமல் இருக்குமாறு கட்டண விகிதத்தை திருத்தி அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் மின் கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு குறைத்து திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

**ஒரு மாதத்திற்கு 50 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் குடும்பங்களுக்கும் எவ்வித பாதிப்பும் வராமல் இந்த கட்டண குறைப்பால் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், 51 முதல் 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்துபவர்களுக்கும் சலுகைகள்**

திருத்தப்பட்ட கட்டணம் 1.12.2001 முதல் முன்தேதியிட்டு (Retrospective) அமல்படுத்தப்படும்.

ஒரு மாதத்திற்கு 50 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் குடும்பங்களுக்கும் எவ்வித பாதிப்பும் வராமல் இந்த கட்டண குறைப்பால் உறுதி

செய்யப்பட்டுள்ளது. மேலும், 51 முதல் 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்துபவர்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

### அரசு ஊழியருக்கு சலுகை

தமிழக அரசு ஊழியர்களுக்கு தமது வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன் பணம் பெறுவதற்கான கால இடைவெளி 6 மாதங்கள் என்றிருந்தது 12 மாதங்களாக அதிகரிக்கப்பட்டது. இதனால் அரசு ஊழியர்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்ற விவரத்தை அறிந்தவுடன், அவர்களது நியாயமான கோரிக்கையையும் ஏற்று இந்தச் சலுகை மீண்டும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், அதாவது வருங்கால வைப்பு நிதியிலிருந்து அரசு ஊழியர்கள் 6 மாத இடைவெளியிலேயே முன் பணம் பெறுகின்ற வகையில் ஆணையை வெளியிட தமிழக அமைச்சரவை கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு மீண்டும் பழைய முறையிலேயே 6 மாத இடைவெளியில் இருப்பில் உள்ள தொகையில் 50 விழுக்காட்டிற்கு மிகாமல் முன் பணம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

**தமிழக அரசு கொண்டு வந்துள்ள நிதிச் சீர்த்திருத்த நடவடிக்கைகள் மற்றும் கட்டண உயர்வு ஆகியவை எல்லாம் அடித்தளத்து, ஏழை எளியோர் மற்றும் நலிவுற்ற பிரிவினர், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரை எத்தகைய சிரமத்திற்கும் ஆளாக்கக் கூடாது என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.**

### விஷச்சாராயம் - கள்ளச்சாராயம் - ஏழைகள் உயிரிழப்பு - குறைந்த விலை புதிய ரக மது

தமிழ்நாட்டில் கடந்த சில வருடங்களாக விஷச் சாராயம் மற்றும் கள்ளச் சாராய சாவுகள் அதிகரித்து வருவது தமிழக அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. சமுதாயத்தின் அடித்தளத்து ஏழை மக்கள் கள்ளச் சாராயத்தால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி பலர் உயிர் இழக்கின்ற வேதனையான நிலை நிலவுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து அமைச்சரவை பரிசீலனை செய்த போது, தற்போது விநியோகத்தில் இருக்கும் இந்திய தயாரிப்பு அயல் நாட்டு மது வகைகளின் (IMFL) விலை ஏழை எளியவர்கள் வாங்க முடியாத அளவிற்கு மிகவும் அதிகமாக உள்ளது என அறியப்பட்டது. ஆகவே ஏழை எளிய மக்களின் வாங்கும் சக்திக்கு ஏற்ப மிகக் குறைந்த விலையில் புதிய ரக மது வகை ஒன்றை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளது. இந்தப் புதிய ரக மதுவகையின் அறிமுகம் ஏழைகளின் உயிரைக் குடிக்கும் விஷச்சாராய மற்றும் கள்ளச் சாராய சம்பவங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் புதிய ரக மது வகை ஏழை எளிய மக்கள் சிரமமின்றி வாங்கக் கூடிய அளவிற்கு 100 மி.லி. அளவு ரூ.15க்கு மட்டுமே விற்கப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

இந்தச் சீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டண குறைப்பு 6.12.2001 முதல் அமலுக்கு வரும்.

தமிழக அரசு கொண்டு வந்துள்ள நிதிச் சீர்த்திருத்த நடவடிக்கைகள் மற்றும் கட்டண உயர்வு ஆகியவை எல்லாம் அடித்தளத்து, ஏழை எளியோர் மற்றும் நலிவுற்ற பிரிவினர், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரை எத்தகைய சிரமத்திற்கும் ஆளாக்கக் கூடாது என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. எனவே, தமிழக அரசு எடுக்கின்ற அனைத்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்கும் தமிழகத்து பெருமக்கள் தங்களுடைய மேலான ஆதரவை தொடர்ந்து தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

★ ★ ★

# எச்சில்!

நின்றுசெல்லும் பேருந்து வண்டி தன்னில்,
நடமாடும் நடத்துனர்க்கு கையில் எச்சில்!
ஒன்றிரண்டு எண்ணுகின்ற மழலை யர்க்கு,
ஒளியாத வாய்மொழியில் தெறிக்கும் எச்சில்!
கன்றுகாலி மேய்க்கின்ற காட்டு மக்கள்,
கஞ்சிதனைக் குடித்தபின்னே கலயம் எச்சில்!
மன்றுகளில் வாணிகத்தைச் செய்து வாழும்,
மனவாசை வணிகர்க்கு எண்ணம் எச்சில்!

தேன் அடையில் சேர்த்துவைத்த தேனின் மிச்சம்,
தேன்மலரில் எடுத்துவந்த ஈயின் எச்சில்!
மான்விழியாள் மணநாளில் உடுத்தும் பட்டு,
முசுக்கொட்டை புழுக்கூட்டம் தந்த எச்சில்!
ஆன்ஈன்ற பசுமடியில் முட்டி வைத்த
அறிவுணவு பால்சுவைத்த கன்றின் எச்சில்!
நான்என்னும் அறியாமை தந்த தோல்வி,
நாள்முழுக்க நம்நினைவில் நிற்கும் எச்சில்!

இழையோடி பாவோடி நெசவு செய்யும்
இளநங்கை நூல்முடிச்சில் ஒளிரும் எச்சில்!
குழலூதும் கலைஞரெலாம் விரலைக் கோட்டி,
குரலெழுப்பும் கலைக்கருவி மூச்சில் எச்சில்!
மழைமேக இடிமின்னல் கேட்டுப் பாடும்
மழைநீரில் தவளைநா தொட்ட எச்சில்!
பிழையென்று விஞ்ஞானி ஒன்றைக் கண்டு
பிடிக்கின்ற பொருளெல்லாம் அறிவின் எச்சில்!

வெண்ணிலவின் ஒளியிடையில் மேகக் கூட்டம்,
வெயில்மறைந்து இரவுதரும் பனிநீர் எச்சில்!
பெண் அணங்காம் நிலத்தாயை வணங்கி வாழும்,
பெயர்விளங்க உழவர்தரும் உணவு எச்சில்!
கண் அசைவில் இருவுள்ளம் இணைந்த பின்னே,
கடையிதழின் பால்தேனாம் அமுதம் எச்சில்!
மண்ணின்மேல் வாழ்கின்ற உயிர்கள் எல்லாம்,
மறந்துவிட்ட 'காலதேவன்!' தந்த எச்சில்!

☐ கு. உலகானந்தா



சென்னையில் டிசம்பர் மாதத்தில்
இசைவிழா நடைபெற்றுவருகிறது.
இந்த ஆண்டு 30க்கும் மேற்பட்ட அமைப்புகள்
இசை விழாவை நடத்துகின்றன.
ஒரு மாதத்தில்
2500 இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.
இந்த நேரத்தில் 21–11–1983 அன்று,
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியின்
பட்டமளிப்பு விழாவில்
**டாக்டர் எம்.ஜி.ஆர்.** அவர்கள் ஆற்றிய
உரையினை வெளியிடுகின்றோம்.

# இசையை உண்மையாக விரும்புபவர்கள் நல்லவர்களாகத்தான் இருப்பார்கள்

"இதுவரை நான் அரசு இசைக்கல்லூரிக்கு வரவில்லை என்பதை இக்கல்லூரி முதல்வர் தமது வரவேற்புரையில் மிக நாகரிகமான முறையில் சுட்டிக்காண்பித்தார்.

இங்கே பல கலைஞர்களை எனக்கு அறிமுகம் செய்வித்தார்கள். சிலர் பாடினார்கள் - சிலர் ஆடினார்கள் - சிலர் இசைக்கருவிகளை வாசித்தார்கள் - இவர்களை எல்லாம் எனக்கு அறிமுகப்படுத்தினார்கள். இவர்களது கலை நிகழ்ச்சிகளை ரசிகர்களில் பலர் மிகவும் ரசித்துக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன்.

மனிதர்களுக்குச் சில குணங்கள் உண்டு. அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்தி வாழ்ந்தால் - சரியான முறையில் தங்களது சந்ததியினரை வழிநடத்திச் சென்றால், ஆகா என்ன அழகான குடும்பம் என்று பாராட்டுகிறோமல்லவா? அதுபோலவே இசைக்கும் நல்ல குணங்கள் உண்டு. 11 குணங்கள் உண்டு என்று பெரியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கோபதாபம் மனிதர்களுக்கு மட்டுமல்ல இசைக்கும் உண்டு. இசையின் மூலம் அமைதியைக் காட்ட முடியும் - கோபதாபத்தைக் காட்ட முடியும்.

இங்கே ஆடிய கலைஞர்கள் எல்லாம் சிறப்பாக ஆடினார்கள். கைவழி நயனம் செல்ல, கண்போன இடத்திற்கு மனம்போக வேண்டும். அதே அளவில் கால்போக வேண்டும். இப்படிப்பட்ட கட்டுப்பாடு இசையில் இருக்கும் போது, இதைக் கற்றுக்கொண்டிருக்கிற மனிதனிடத்தில் இந்தக் கட்டுப்பாடு இல்லாமல் போய் விடுகிறதே என்பதுதான் வேதனையாக இருக்கிறது.

கடவுளை 2 வழிகளில் அணுகமுடியும். ஒன்று இசையால் - மற்றொன்று கடுமையான தவத்தால்! மந்திரங்கள் ஓதுவது மட்டும் தவமாகாது. தவம், மனத்தை ஐக்கியப்படுத்துவதன் மூலம் கிடைக்கும்! இசைக்கும்போதும் மனம் ஐக்கியமாகத்தான் வேண்டும்.

பாடல் முதலில் தனக்காகப் பாடப்பட வேண்டும். தான் ரசிப்பதற்காகவே பாடவேண்டும். பிறர் ரசிப்பதற்காக அல்ல! ஆடலும் அதுபோலத்தான்! ஆடுபவர்கள் தமக்காகத்தான் ஆடவேண்டும், பிறர் மகிழ்வதற்காக அல்ல!

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் அமைதியில்தான் ஆரம்பமாகிறது. பிறகு இறுதியில் உச்சக்கட்டம் ஏற்பட்டு, முடிகிறது. இசையும் அப்படித்தான். துவக்கத்தில் ஆரவாரம் இன்றி ஆரம்பிக்கப்படும் தாள

நிலை, இறுதியில் உச்சக்கட்டம் பெற்று, உயர்த்தப்படும்போது, துரிதகதி அடைகிறது. மனிதனும் அதுபோலத்தான். 'தீர்மானம்' என்று வைக்கிறார்களே அது முடிவு! அதுதான் வாழ்க்கையின் நிலையும்.

குழந்தை எந்தத் தொழிலைக் கற்றுக்கொள்ள விரும்புகிறதோ, அதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இங்கே நாம் பார்த்த நடனக் கலையானாலும் சரி, இசைக்கலையானாலும் சரி, எதனைக் கற்றுக் கொள்ள விரும்பினாலும் சரி - அதனைக் கற்றுத்தர வேண்டும். பள்ளியை - கல்லூரியை விட்டு வெளியே வரும்போது அந்தக் குழந்தைக்கு வேலைகொடுக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குவது எனது கடமை எனக் கருதுகிறேன்.

இப்படிப்பட்ட கலை உணர்வைப் பெற்றால் நல்ல குணத்தை நாம் பெற முடியும். இசையை உண்மையாகக் காதலிக்கிறவர்கள் நல்லவர்களாகத்தான் இருப்பார்கள்.

சாதகம் செய்வதற்கு வசதியாக விடுதிகள் கட்டப்பட வேண்டும் என்று சொன்னார்கள். சாதகம் செய்வதற்குக் கடற்கரை இருக்கிறதே! நாங்கள் எல்லாம் நாடகத்தில் நடித்த காலத்தில் கடல் நீரில் - ஆற்றில் அதிகாலை 4 மணிக்கே நின்று சாதகம் செய்வோம். என்றாலும், இந்த நவீன காலத்தை எண்ணி, விடுதி கட்டித்தருவது பற்றி ஆலோசிப்பதற்குச் சித்தமாக இருக்கிறேன்.

பாடம் படிப்பது போன்றதல்ல சங்கீதம். பிறரைப் பாராட்டி, மதித்திடும் குணம் எல்லோருக்கும் வரவேண்டும். சகோதரி எம்.எஸ்.சுப்புலட்சுமி அம்மையார் அவர்களின் முன்பு, பாடத் தெரியாத ஒருவர் சென்று பாடினால் அவர் கேலி செய்யமாட்டார். அவரைத் தட்டிக் கொடுத்து ஆதரவு தருவார். இன்னும் முயற்சி செய்து பாடவேண்டும் - அவ்வாறு பாடினால் வெற்றி கிடைக்கும் என்று வாழ்த்தி அனுப்புவார்.

இங்கே ஒரு மாணவர் - சிவபாலன் என்பவர் - இலங்கையைச் சேர்ந்தவர் - நான் நிகழ்ச்சிக்கு வந்தவுடனே எனக்கு ஒரு நூலைக் கொடுத்தார். அது குறித்துச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இந்த உலகத்தில் தான் நாம் இருக்கிறோம். வேறு எங்கேயும் இல்லை. முதல்வராயினும், அமைச்சராயினும், கவிஞர்களாயினும், பாடகர்களாயினும் இந்த உலகத்தில்தான் இருக்கிறார்கள்.

அந்த நண்பர் தமது நூலில் ஒரு தவறைச் செய்திருக்கிறார். அது குறித்து அவரிடமே நான் சுட்டிக் கேட்டேன். அவர் எழுதுகிறார்.





“உலகம் என்ற மாற்றாந்தாய் கலைஞனைக் கொடுமைப்படுத்திக் கண்ணீர் முத்துக்களை அதிக அளவில் வரவழைக்கிறது” என்று குறிப்பிட்டுள்ளார். உலகம் நமது தாய். அது எப்படி மாற்றாந்தாய் ஆகும்?

வாழ்வு சிறிது - வளர்கலை பெரிது என்பார்கள். கலை நித்தமும் வளர்கிறது என்று குறிப்பிட்டுக் காட்டுவார்கள்.

கலை எப்போதும் இருக்கும். ஆனால் கலைஞர்கள் இருக்க மாட்டார்கள். பாகவதர் எங்கே? பி.யு.சின்னப்பா எங்கே? கலைவாணர் எங்கே? அவர்கள் எல்லாம் மறைந்து விட்டார்கள். அவர்கள் கையாண்ட கலை இன்னும் இருக்கிறது. தற்போது வேறு கலைஞர்கள் வந்திருக்கிறார்கள். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பார்களே அது இதுதான்.

பிறப்பு இருக்கிறது என்றால் இறப்பு இருக்கிறது.

இளமை இருக்கிறது என்றால் முதுமையும் இருக்கிறது.

இயற்கை கலைஞனைக் கண்ணீர்விடச் செய்கிறது.

பிறக்கும்போதும் மனிதன் அழுகிறான்; இறக்கும்போதும் அழுகிறான். அதற்கு இடையிலே இயற்கை எத்தனை விளையாட்டுக் காண்பிக்கிறது?

இன்றைக்கு வாழ்கின்ற நாம் நமது கடமையைச் சரியாகச் செய்தால்தான் எதிர்காலத்தில் வரும் நமது சந்ததியினர் நல்வாழ்வு வாழ முடியும்.

இந்தக் கல்லூரியில் தமிழ் இசைக்காக ஒரு பிரிவு வரவேண்டும். சரிகமபதநி என்று சொல்லித்தருகிறார்கள். அதற்குரிய தமிழ் வார்த்தைகள் என்ன என்பது இங்குள்ள ஆசிரியர்களுக்குத் தெரியாததல்ல!

தெலுங்குப் பாடலைப் பாடுங்கள்! அதற்காகத் தமிழிசையைப் புறக்கணிக்கக்கூடாது. அதையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பழைய கால வைத்தியர்கள் போல - எவருக்கும் எதுவும் சொல்லித்தராமல் மறைந்து போனது போல கலையை ஆக்கக்கூடாது. அதை ஒரு பொக்கிஷமாக வைத்துவிடக் கூடாது. மக்களுக்குப் பயன்படும்படி செய்யவேண்டும். கலைஞர்கள் தமது கலைத்திறமையால் மக்களைச் சொந்தக்காரர்களாக்கிக் கொள்ளவேண்டும்.

இன்று பட்டம் பெற்றுவிட்டீர்கள். இதுதான் உங்கள் காலடியின் முதற்படி. இன்னும் 99 படிகள் உள்ளன. அதனை உணர்ந்து செயல்பட்டு வெற்றியடைய வாழ்த்துகிறேன்”.

# குடும்ப நலவாழ்வு விழிப்புணர்வு
# சிறப்பு சித்த மருத்துவ முகாம்
# "மண்ணின் மருத்துவம் பெறுவோம் வளமான வாழ்வு பெறுவோம்"

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதிலும் கூன், குருடு, செவிடாய் பிறவாமல் பிறப்பது அரிது" என்பது தமிழ் மூத்தோர் மொழி.

அப்படி பெற்ற வளமான வாழ்வை ஒரு சில மணித்துளிகளில் கவர்ச்சி என்னும் மாயையில் வீழ்ந்து பாதுகாப்பற்ற உடல் உறவினால் இன்று உலகை உலுக்கும் எச்.ஐ.வி./எய்ட்சு நோய்க்கு இளம் தளிர்களான இளைஞர்களையும், வீட்டிற்கும், நாட்டிற்கும் உரம் சேர்க்கும் நடுத்தர வயதினரும் ஆளாகக் கூடாது.

வெள்ளப் பெருக்கு, வறட்சி, கொள்ளை நோய் முதலியவைகளுக்குப் போர்க்கால அடிப்படையில் ஒவ்வொரு நாடும் முயன்று வெற்றி கண்டுள்ளதை மக்கள் யாவரும் அறிவர். ஆனால் இதற்கும் மேலாக எய்ட்சு நோயினால் மக்கள் வேரோடு சாய்ந்த மரங்களெனச் சாவது இன்னும் வேதனை அளிக்கிறது. போரில் இறப்பவரைவிட எய்ட்சு நோயினால் இறப்பவர்களின் எண்ணிக்கை மிகுதி என ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. அதனால், பெற்றோரும், உற்றாரும், சமுதாயமும், நாடும் பல அறிவு சார்ந்த வேலைத் திறமைமிக்க மக்களை இழந்து நிற்கின்றன.

பால்வினை நோய் உள்ளவர்களுக்கு எச்.ஐ.வி தொற்றும் வாய்ப்பு மிகமிக அதிகம். கடந்த ஆண்டு திருச்சியில் நடந்த ஆய்வின் படி பால்வினை நோய் உள்ளோரில் 48% எச்.ஐ.வி. இருப்பது கண்டறியப் பட்டுள்ளது. ஆகுவே எச்.ஐ.வி. பரவாமல் தடுப்பது, பால்வினை நோய் வராமல் தடுப்பதும், அந்நோய் வந்தவுடன் குணப்படுத்துவதும் மிக இன்றியமையாதனவாகும். பால்வினை நோய் குணப்படுத்தக்கூடியதே. இந்நோய் கண்டவர் மூடி மறைக்காமல் உடனே மருத்துவரை அணுகுதல் வேண்டும். அவர் மட்டும் அல்லாது அவரது மனைவி அல்லது கணவரும் கூட உடனடியாக மருத்துவம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த பால்வினை நோயைக் குணப்படுத்துவதற்கு சித்த மருத்துவத்தில் சிறப்பான மருந்துகள் உண்டு. இந்த சித்த மருந்துகளைப் பால்வினை நோய் உள்ளவர்களுக்கு அவரவரது ஊரிலேயே கொடுக்கும் வகையாக குடும்பநல விழிப்புணர்வு சிறப்பு சித்த மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட உள்ளது. 19.12.2001 அன்று 50 முகாம்களும், 20.12.2001 அன்று 50 முகாம்களும் ஆக 100 முகாம்கள் காஞ்சிபுரம், திருவள்ளூர், திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், சேலம், நாமக்கல், மதுரை, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய 12 மாவட்டங்களில் நடக்க உள்ளது.

ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் மருத்துவம் பார்க்கப்படும். ஆண் சித்த மருத்துவர் ஒருவரும், பெண் சித்த மருத்துவர் ஒருவரும் முகாமை நடத்துவர். இந்த இலவச முகாமில் பத்து நாட்களுக்கு உரிய மருந்துகளும் வழங்கப்படும்.

1. குக்கில் பற்பம் 2. சிலாசத்து பற்பம் 3. பறங்கிப்பட்டைச் சூரணம் 4. கந்தக இரசாயனம் 5. இரசகந்தி மெழுகு 6. தேற்றான் கொட்டை இளகம் 7. வங்க பற்பம் 8. படிக இலிங்கத்துவர் 9. கரப்பான் தைலம் 10. மயனத் தைலம் 11. படிகார நீர்

ஆகிய சிறப்பான சித்த மருந்துகள் வழங்கப்பட உள்ளன.

இந்த முகாம் ஊர் மக்களின் வசதிக்கேற்ப மாலை 3 மணியில் இருந்து இரவு 8 மணி வரை நடத்தப்படும். பால்வினை நோயில் இருந்து விடுபடுபவர்கள் தம்மை மட்டும் எச்.ஐ.வி.–யிலிருந்து காத்து கொள்வது மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் பரவாமலும் தடுத்தவர்களாவர்.

இந்த முகாமை மக்கள் நலமுற பயன்படுத்த வேண்டும்.

★ ★ ★

# பெண் குழந்தைகள் பாதுகாப்பு

மாநில அளவிலான தத்து திட்டம் தொடர்பான செயல்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் 20.12.2001 அன்று சிங்கார வேலர் மாளிகையில் மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக நலத்துறை செயலர், சமூக நல ஆணையர், ஆலோசனை குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தனது தலைமை உரையில் தமிழக அரசு குழந்தைகள் நலத்திற்கென 1991–96–இல் நிறைவேற்றிய தொட்டில் குழந்தைகள் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற பல நல்ல திட்டங்கள் பின்னர் ஏற்பட்ட அரசின் காலத்தில் சரியாக நடைமுறைப்படுத்தப் படாமல் இருந்ததை எடுத்துரைத்து தேர்தலுக்குப் பின் மீண்டும் பொறுப்பேற்ற அரசு இத்திட்டங்களுக்கு புத்துயிர் அளித்து விரிவு படுத்தி செயல்படுத்த ஆணையிட்டதை விளக்கிக் கூறினார். ஆதரவற்ற நலிந்த நிலையில் உள்ள குழந்தைகள் மட்டும் இன்றி தொட்டில் குழந்தைகள் திட்டத்தின் கீழ் அரசிடம் ஒப்படைக்கப்படும் குழந்தைகளையும் எடுத்து பராமரித்து தத்து திட்டத்தின் கீழ் அவற்றை தத்து எடுக்க முன் வரும் பெற்றோருக்கு கொடுக்க வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்.

இத்திட்டத்தில் பங்கு பெறும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் நடைமுறையில் தாங்கள் எதிர்கொள்ளும் நிர்வாகம் மற்றும் சட்டம் பற்றிய சிக்கல்களையும் காவல் துறையினரிடமிருந்து சான்றிதழ் பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகளையும் எடுத்துரைத்தார்கள். இத்திட்டம் சிறப்பாக செயல்பட நிர்வாகமும், காவல்துறையும் இதில் முழு ஈடுபாடு கொண்டு கால தாமதத்தை அறவே நீக்க வேண்டும். மேலும் தத்து எடுத்தல் தொடர்பான நடைமுறை இன்னும் பெருவாரியான மக்களைச் சென்று அடையவில்லை. இந்நிலையை மாற்றிட தொண்டு நிறுவனங்கள் பெரிய அளவில் முன் வரவேண்டும் என்றும் இத்திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையும் வண்ணம் அவர்கள் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அரசு சார்பாக நடைபெறும் பொருட்காட்சி அரங்குகளில் இத்திட்டம் பற்றிய விளக்கம் துண்டு பிரசுரங்களாக அச்சிட்டு அளிக்கலாம்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட காவல்துறை துணைத் தலைவர் தனது துறையில் ஏற்படும் கால தாமதத்தையும், நடைமுறை சிக்கல்களையும் போக்கும் வண்ணம் உடனடியாக மீண்டும் ஒரு முறை தக்க அறிவுரை மாவட்ட காவல்துறை கண்காணிப் பாளர்களுக்கு வழங்கப்படும் என தெரிவித்தார். மாவட்டங்களில் மாதந்தோறும் நடைபெறும் குற்ற புலனாய்வுத் தணிக்கை கூட்டங்களில் தத்து எடுத்தல் தொடர்பான மனுக்களின் தீர்வும் ஒரு பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்கப்படும் என தெரிவித்தார்.

இறுதியாக சமூக நலத்துறை செயலர் அவர்கள் தத்து எடுத்தல் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளையும் போக்கும் வண்ணம் தத்து திட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களின் அடிப்படையில் அரசு தக்க ஆணையினை விரைவில் வெளியிடும் என தெரிவித்தார்.

★ ★ ★

## மாதிரி நார்த்தீவன பண்ணை நிறுவுதல்

புதிய தொழில்நுட்பத்துடன் நார்த்தீவன உற்பத்தி முறைப்படுத்தப்படவும், மண் மற்றும் நீர்வளத்தை பாதுகாக்கவும், தீவன விநியோகத்தை முறைப்படுத்தவும், வேளாண் காடுகள் மாதிரி உருவாக்கவும் பண்ணையாளர்களுக்கு பயிற்சி அளிக்க வசதி ஏற்படுத்தவும் நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், உழவியல் துறை மூலம் மாதிரி நார்த்தீவன பண்ணை நிறுவுவதற்காக மொத்த இறுதி செலவான ரூ.10.70 இலட்சத்தில் இவ்வாண்டிற்கு ரூ.3.15 இலட்சங்கள் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் கல்லூரி பண்ணை மற்றும் அருகிலுள்ள கால்நடைகளுக்கு தேவையான நார்த்தீவனங்களை நியாயமான விலையில் வழங்க இயலும். மேலும் விவசாயிகளுக்குத் தேவையான நார்த்தீவன விதைப்பொருட்களை முறையாக விநியோகிக்க இயலும். பண்ணையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் மேம்படுத்தப்பட்ட புல்வகைகள் உற்பத்தி செய்ய ஆவன செய்யப்படும். இதனால் தீவன விநியோகத்தை முறைப்படுத்தலாம். •

## கால்நடை பராமரிப்புக்காக தமிழ்நாட்டில் புதியதாக 10 கால்நடை மருந்தகங்களை துவக்குதல்

தமிழ்நாட்டில் பன்முக கால்நடை மருத்துவ மனைகள் பிரதம மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்கள் போன்ற 1006 கால்நடை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாயத்திற்கான தேசிய ஆணையத்தின் பரிந்துரைகளின்படி மட்டுமல்லாமல் கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இருக்கவேண்டிய கால்நடை நிலையங்கள் குறைவாக உள்ளதால், அந்த இடைவெளியை நேர்செய்வதற்கு ஒவ்வொரு வருடமும் தேவையான இடங்களில் கால்நடை மருந்தகங்களை துவக்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்து வருகிறது. இவ்வாண்டு புதியதாக பத்து கால்நடை மருந்தகங்களை ரூ.23.00 இலட்சம் செலவில் துவக்குவதற்காக தொடர் செலவினமாக ரூ.15.00 இலட்சமும் மற்றும் மருந்தகத்திற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகள் செலவுக்காக ரூ.8.00 இலட்சமும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## கடல் மீனவர்களுக்கு மீன்வள ஆதாரம் குறித்த தகவல் அளித்தல்

தமிழகத்தைச் சேர்ந்த கடல் மீனவர்களுக்கு வானிலைத் தகவல் காணாமல் போகும் மீனவர்களைத் தேடும் பணி தொடர்பாக உரிய நடவடிக்கை விவரம் சேகரித்தல் மற்றும் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் பகுதிகள் குறித்த தகவல்களை செயற்கைக் கோள் (சேட்டிலைட்) மூலமாக எளிதாகப் பெற ஏதுவாக, நவீன தகவல் வசதிகள் உருவாக்குவதற்கு 10 தொலையச்சு இயந்திரங்களும் 2 புதிய தொலைபேசி இணைப்புகளும் கடலோர பகுதியில் 40 இடங்களில் காப்புரை தகவல் பலகைகளும் (Laminated Notice Boards) ஆணையிட்டுள்ளது. இதன் மூலமாக, கடற்பகுதியில் மீன்கள் அதிக அளவில் கிடைக்கக் கூடிய இடங்களை அறிந்து செயல்படுவதால், மீனவர்களுக்கு எரிபொருள் சிக்கனம், செலவின சிக்கனம் மற்றும் மீன் பிடிப்புக்கான அதிக நேரத்தைத் தவிர்த்தல் ஆகிய பயன்கள் ஏற்படும்.

நமது மாநிலம் முழுவதும் சென்ற ஆண்டு முதல் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் 12,593 ஊராட்சிகள் உள்ளன. டானிடா திட்டத்தின்கீழ் ஏற்கெனவே 2,109 ஊராட்சிகளில் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது. இது தவிர சென்ற ஆண்டு 5,390 ஊராட்சிகளில் மாநில நிதி உதவியோடு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்கள் நடைபெற்று உள்ளன. இவ்வாண்டு மீதமுள்ள 5,094 ஊராட்சிகளில் இம்முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு முகாமிற்கு ரூ.5,300 வீதம் செலவிடப்படும். இதற்காக இவ்வாண்டு ரூ.2.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்முகாம்களில் கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை, செயற்கைமுறை கருவூட்டல், மலட்டுத்தன்மை சிகிச்சை, குடற்புழு நீக்கம், ஆண்மைநீக்கம், நோய் கிளர்ச்சி தடுப்பு ஆகிய கால்நடை மருத்துவப்பணிகள் இலவசமாக அளிக்கப்படும்.

## மாநிலம் முழுவதும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் நடத்துதல்

## புழக்கடை வளர்ப்பிற்காக கோழிகள் வழங்கும் திட்டம்

கிராமப்புறங்களில் உள்ள சிறு குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழை விவசாயிகள் பயனடையும் பொருட்டு குறைந்த மூலதனத்தில் புழக்கடை கோழி வளர்ப்பிற்காக கோழிகள் வழங்கும் திட்டத்தில் கிராமப்புறங்களில் ஓர் அலகிற்கு ஒரு சேவல் மற்றும் 9 கோழிகள் ஆகமொத்தம் 10 கோழிகளைக் கொண்டு சிறு மூலதனத்துடன் புழக்கடையில் கோழிகள் வளர்க்கப்பட்டு, அவற்றிலிருந்து வீட்டு உபயோகத்திற்கு இறைச்சி மற்றும் முட்டைகள் கிடைக்க, தமிழகத்தின் 29 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 15 பயனாளிகள் வீதம் 5,775 பயனாளிகளுக்கு, ஓர் அலகிற்கு செலவு ரூ.600 வீதம் ஏற்படும் செலவுத் தொகையான ரூ.34.65 இலட்சத்தை நடப்பு நிதியாண்டில் அனுமதித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. •

# வீட்டுவசதிக் கடனுக்கு வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் தள்ளுபடி!

## மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் அறிவிப்பு

வீட்டுவசதித்துறை ஆய்வுக்கூட்டத்தில் 28.06.2001 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் பொருளாதார நலிவுற்ற ஏழை, எளியவர்களுக்கு 1978–79 முதல் 1999–2000 வரை அட்கோ 1வது திட்டம் முதல் 16–வது திட்டம் வரை வழங்கப்பட்ட கடன்களுக்கு அசல் தொகை முழுவதும் செலுத்தினால் அதற்கான வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆகியனவற்றை தள்ளுபடி செய்வது குறித்து பரிசீலித்து உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

அதனடிப்படையில் ரூ.110 கோடி தள்ளுபடி செய்யப்படும் என்ற அறிவிப்பினை 13.9.2001 அன்று சட்டப்பேரவையில் வெளியிட்டார். இதன்மூலம் 5,18,500 உறுப்பினர்கள் பயனடைவார்.

இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்த தமிழக அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை தற்போது ஆணை பிறப்பித்துள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு :

ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கு அட்கோ 1வது திட்டம் முதல் 16–வது திட்டம் வரை 1978–79–ஆம் ஆண்டிலிருந்து 1999–2000 ஆண்டு வரை கிராமிய வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம் வீடுகட்ட வழங்கப்பட்ட கடன் தொகையில் 31.3.2001 வரை நிலுவையிலுள்ள அசல் தொகையை பயனாளிகள் 31.3.2002க்குள் செலுத்தினால், அப்பயனாளிகள் 31.3.2001 வரை செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள அனைத்து வட்டி, அபராதவட்டி, சேவைக்கட்டணம் ஆகியவை தள்ளுபடி செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

கிராமிய வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் கடன் பெற்ற பயனாளிகள் 31.3.2001 வரை தாங்கள் செலுத்திட வேண்டிய நிலுவையிலுள்ள அசல் தொகையினை 31.3.2002க்குள் செலுத்தி அரசின் இச்சலுகையை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு தாங்கள் கடன் பெற்ற கிராமிய வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அரசு மானியம் பெறுகின்ற நிறுவனங்கள் நிதி உதவி பெறுகின்ற முறையை ஆய்வு செய்து, அவற்றின் பணிகளை மேம்படுத்தவும், அரசு நிதி உதவியைக் குறைக்கவும் தக்க நடவடிக்கைகளைத் தெரிவித்தல்.

அரசுத் துறைகளிலும் மற்றும் அரசு சார்பான முகவர் அமைப்புகளிலும் நிருவாகச் செலவை சீரமைப்பது தொடர்பான பிற பிரச்சினைகளைக் கருதிப் பார்த்து, பொருத்தமான பரிந்துரைகளை அளித்தல்.

மேற்சொன்னவற்றைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் தங்களின் கருத்துரைகளை ஆணையத்தின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். குறிப்பாக, பொது மக்கள் தங்களது கருத்துக்களை கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் தெரிவிக்கலாம்.

தலைமையிடங்கள் மற்றும் களநிலைகளில் மாநில அரசின் நிருவாகத் திறனை மேம்படுத்துதல்.

மாநில அரசின் நிருவாகச் செலவைக் குறைத்தல்

மாநில அரசுடனான பொது மக்களின் பரஸ்பர உறவு மேலும் சுமுகமாக்குதல்

மாநில அரசால் தற்போது ஆற்றப்பட்டு வருகின்ற பணிகளில் எவ்வெவற்றை, பொதுமக்களுக்குக் கிடைக்கின்ற பயன்கள் குறையாத வகையில், தனியார் முகவரமைப்புகளிடமும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களிடமும் ஒப்படைக்கலாம்.

இவ்வாணையத்தின் ஆய்வு வரம்பு தொடர்பான பிற கருத்துக்கள்.

இக்கருத்துக்கள், பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படலாம்.

டாக்டர். கே.சத்யகோபால், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் செயலாளர்
நிதித்துறை மற்றும் செயலாளர்
பணியாளர் மற்றும் செலவு சீராய்வு ஆணையம்
தலைமைச் செயலகம், சென்னை–600 009.

• • •

# கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் அமைச்சர்

மாண்புமிகு மீன்வளம் மற்றும் கால்நடை துறை அமைச்சர் திரு.இராஜேந்திர பிரசாத் அவர்கள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தை திடீரென்று 10.12.2001 அன்று பார்வையிட்டார்.

ஆராய்ச்சி நிலையத்தின் பல்வேறு ஆராய்ச்சி பிரிவுகளைப் பார்வையிட்டார். ஆட்டின ஆராய்ச்சி திட்டம், பால் உற்பத்தி பற்றிய ஆராய்ச்சி திட்டம், நெருப்புக்கோழி ஆராய்ச்சி திட்டம், பன்றியின ஆராய்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த மீன் வளர்ப்புத் திட்டம், தீவனப்பயிர் ஆராய்ச்சித் திட்டம் ஆகியவை குறித்து பல்கலைக்கழக விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடினார். பல்கலைக்கழக ஆராய்ச்சித் திட்டங்கள் ஏழை எளிய மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும் திட்டங்களாக அமையவேண்டும். உயர் ரக கால்நடை இனங்களை உருவாக்குவதுடன் இல்லாமல், அவை மக்களுக்கும் எளிதில் கிடைக்கும்படி வழிவகை செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார். கால்நடை வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்கள் வேகமாக மக்களை சென்றடைய வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார்.

பல்கலைக்கழக கால்நடை உற்பத்தி இயக்குநர் டாக்டர் ராஜவேலு, ஆட்சிமன்ற குழு உறுப்பினர் டாக்டர் பலராமன், அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் திரு.ஜார்ஜ் முதலானோர் உடனிருந்தனர். நிலையத்தின் பணிகள், ஆராய்ச்சி திட்டங்கள் பற்றி கால்நடை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் டாக்டர் கஜேந்திரன் விளக்கினார். ●

# அண்ணா பல்கலைக்கழகம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பொறியியற் கல்லூரிகளின் தரத்தை உயர்த்தும் பொருட்டு அனைத்து பொறியியற் கல்லூரிகளிலும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைக்க ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது. கல்விசார் உள்கட்டமைப்பினை மேம்படுத்த தேவையான நிதி ஆதாரங்களை உள்ளிருந்தே உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஆய்வு செய்யும் என்றும் ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது. இவ்வறிவிப்புகளுக்கேற்ப தனி முழுமை வகையிலான (Unitary) அண்ணா பல்கலைக்கழகத்தை இணைத்துக் கொள்ளும் வகையிலான (Affiliating) பல்கலைக்கழகமாக மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

அண்ணா பல்கலைக்கழகமானது தனியொன்றான முழுமையுடன் அமைந்த (Unitary) பல்கலைக்கழகமாக 4–9–1978 அன்று தோற்றுவிக்கப்பட்டது. சமுதாயத்தின் இன்றைய மற்றும் நாளைய தேவைகளை நிறைவேற்றும் வகையில் பொறியியல், தொழில் நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த அறிவியல் பாடப்பிரிவில் உயர் கல்வியினை வழங்கி வருகிறது. அறிவியல் ஆய்வுகள் மேற்கொண்டு அதனால் கிடைக்கப் பெற்ற அறிவினை பரப்புவதுடன், கல்வியாளர்களுக்கும், தொழில் துறையினருக்கும் இடையே ஒருங்கிணைந்த செயல்பாட்டினை இப்பல்கலைக்கழகம் உருவாக்குகிறது.

எழில்மிகு சென்னையின் தென்பகுதியில் 100 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்கப்பட்ட அண்ணா பல்கலைக் கழக வளாகமானது அடையாறு ஆற்றினை வடக்காகவும், தெற்கே சர்தார் பட்டேல் சாலையினை தனது எல்லைகளாகக் கொண்டுள்ளது. 20 ஹெக்டேர் பரப்பளவில் குரோம் பேட்டையில் அமைந்துள்ள சென்னை தொழில் நுட்பக் கல்வி நிலையம் இப்பல்கலைக்கழகத்தின் இரண்டாவது வளாகமாக அமைந்துள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்தின் மூன்றாவது வளாகம் தரமணி இன்ஸ்ட்ரானிக் எஸ்டேட் அருகில் 80 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. தொழில்நுட்பக் கல்வியில் உயர்தர ஆய்வு செய்வதற்கும் தரமிகு தொழில் நுட்பக் கல்வி கற்பிப்பதற்கும் தேவையான கட்டமைப்பு வசதிகளை அண்ணா பல்கலைக்கழகம் கொண்டுள்ளது. கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளை மேற்கொண்டு அண்ணா பல்கலைக்கழகம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது.

மேதகு இந்திய குடியரசுத் தலைவர், அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்திருத்த மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார். அண்ணா பல்கலைக்கழகத் திருத்தச் சட்டம் 2001–ன் படி அரசு பொறியியற் கல்லூரிகள், அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகள் அனைத்தும் சேர்ந்த 219 பொறியியற் கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும். இதன் பயனாக, அனைத்து பொறியியற் கல்லூரிகளும் ஒரு குடையின்கீழ் அமையும். வெவ்வேறான பாடத் திட்டங்களைப் பின்பற்றி வந்த இவை இனிமேல் அண்ணா பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தை ஒரே சீராகப் பின்பற்றும். 2001–2002ஆம் கல்வியாண்டிற்கு முன்பு சேர்ந்த பொறியியல் மாணவர்கள் அவரவர் தற்போது பயின்றுவரும் அந்தந்த பல்கலைக்கழகங்களிலிருந்தே பட்டங்களை / பட்டயங்களைப் பெறுவார்கள். இதற்குத் தேவையான உதவிகளை அண்ணா பல்கலைக்கழகம் செய்யும். இந்த கல்வியாண்டில் மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் சேரும் மாணவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தின் அகப்பாட்டு எல்லையில் (purview) வருவார்கள். மாநிலத்தில் உள்ள அனைத்துப் பொறியியற் கல்லூரிகளின் கல்விச் செயல்பாடுகள் அண்ணா பல்கலைக்கழகத்தின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கும். கல்வி மேம்பாடு எய்தத் தேவையான அளவு, நிர்வாகம் மற்றும் கல்வி செயல்பாடுகளை மேற்பார்வை செய்து வழி நடத்தும் அதிகாரத்தையும் அண்ணா பல்கலைக்கழகம் பெற்றிருக்கும்.

ஆறு அரசுப் பொறியியற் கல்லூரிகள் உறுப்புக் கல்லூரிகளாக இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பட்டுள்ளன. இக்கல்லூரி வளாகங்களிலிருந்து, வட்டார மையங்கள் செயல்படும். முதற்கண் இரண்டு மாவட்டங்களில், வட்டார மையங்கள் அமைக்கப்படவுள்ளன. இப்பகுதியில் அமைந்துள்ள பொறியியற் கல்லூரிகளின் செயல்பாடுகளைச் சீராக ஒருங்கிணைக்க ஏதுவாக இம்மையங்களில் ஆராய்ச்சிப் பூங்காக்கள் நிறுவப்படும். நிர்வாகம் மற்றும் கல்வி சார்ந்த செயல்பாடுகள் விரைவாக நடந்தேறும் பொருட்டு, அனைத்துப் பொறியியற் கல்லூரிகளும் இணையம் வழியாக (INTERNET) பல்கலைக்கழகத்துடன் ஒன்றிணைக்கப்படும்.

எனினும், மையப் பல்கலைக்கழகங்கள் / நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் இச்சட்டத்தின் எல்லைக்குள் வரமாட்டா. மேலும், அனைத்திந்திய தொழில்நுட்ப கல்விக்குழு (AICTE) சட்டத்தின்படி தொழில்நுட்பக் கல்வியின் கீழ் வருகின்ற பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் அவை சார்ந்த இயல்கள் அல்லது வேறு இதுபோன்ற பாடப்பிரிவுகள் ஆகியவற்றைக் கற்பிக்கவுள்ள புதிய கல்லூரிகள் எவையும் அனைத்திந்திய தொழில்நுட்ப கல்விக் குழுவின் சான்றிதழ் பெறாமல் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படமாட்டா.

வேறெந்த பல்கலைக்கழகத்தையும் போலன்றி, அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு மற்றும் கல்விக்குழு உறுப்பினர்களுள் பெரும்பாலோரை துணைவேந்தரது பரிந்துரையின் அடிப்படையில் தான் வேந்தர் – அதாவது மாநில ஆளுநர் பெயர் குறித்து நியமனம் செய்துவருகிறார். இதுபோன்ற அதிகாரம் இருப்பதால் தான் பல்கலைக்கழகச் செயல்பாடுகளை துணை வேந்தர் ஆற்றுப்படுத்தி உயர்தரமான கல்வியினை வழங்கி தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் சிறந்ததோர் இடத்தினை அண்ணா பல்கலைக்கழகம் பெற முடிந்தது. அண்ணா பல்கலைக் கழகமும் இணைத்துக் கொள்ளும் (Affiliating) பல்கலைக் கழகமாக மாறிய பின்னரும் துணைவேந்தருக்கு இதுபோன்ற அதிகாரம் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளது. இதனால் இந்நாட்டிலேயே தலைசிறந்த தரம் கொண்ட தொழில்நுட்பக் கல்வியினை அளித்திட வழிவகை செய்யப்படும். ●

# கணினி மொழியியல் ஆய்வுக்கூடமும் தமிழும்

● டாக்டர் என்.தெய்வசுந்தரம்
இயக்குநர், தமிழ்மொழித்துறையின் மொழியியல் ஆய்வுப் பிரிவு
சென்னைப் பல்கலைக்கழகம்.

அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கணினிமொழியியல் ஆய்வுக்கூடத்தை மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் முனைவர் தம்பித்துரை அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். தமிழ்மொழித் துறையின் மொழியியல் ஆய்வுப் பிரிவின் கீழ் இந்த ஆய்வுக்கூடம் செயல்பட்டு வருகிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் இன்றைய துணைவேந்தர் முனைவர் பொன்.கோதண்டராமன் (பொற்கோ) அவர்கள் மொழியியல் ஆய்வுப்பிரிவின் இயக்குநராகப் பணியாற்றியபோது, இத்திட்டத்தை உருவாக்கினார். பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவுக்கு (University Grants Commission) இத்திட்டத்தின் வரைவை அனுப்பி, ரூபாய் பதினைந்து இலட்சம் நிதி உதவி பெற்றார். மேலும் சில இலட்சங்களைப் பல்கலைக்கழகமே அளித்து, இத்திட்டம் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

## கணினி மொழியியல் ஆய்வுக்கூடத்தின் அமைப்பு

400 சதுர அடிப்பரப்பில் ஆய்வுக்கூடம் நிறுவப்பட்டுள்ளது. குளிர்சாதன வசதி இணைக்கப் பட்டுள்ளது. மிகத் திறன் வாய்ந்த மூன்றுஐ.பி.எம். கணினி சேர்வர்களும் பன்னிரண்டு ஐ.பி.எம். பெண்டியம் கணினிகளும் நிறுவப்பட்டுள்ளன. அனைத்துக் கணினிகளும் LAN அடிப்படையில் இணைக்கப் பட்டுள்ளன.

ஆய்வாளர்களின் தேவைக்காக விண்டோவ்ஸ் 2000, லைனக்ஸ் என்ற இரண்டு வேறுபட்ட இயக்கிமென் பொருள்களும் (operating system) இங்கு நிறுவப்பட்டுள்ளன. ஆய்வாளர் களுக்குத் தேவையான வேறு பல மென்பொருட்களும் கணினிகளில் நிறுவப்பட்டுள்ளன.

ஆய்வுக்கூடத்திற்குத் தேவையான அச்சுப் பொறிகள், ஸ்கேனர், டிஜிட்டல் புகைப்படக்கருவி, சிடி ரைட்டர், யு.பி.எஸ்., எல்.சி.டி. புரொஜக்டர், ஓவர் ஹெட் புரொஜக்டர் போன்ற சாதனங்களும் இங்கு உள்ளன. சென்னைப்பல்கலைக் கழகத்தில் அண்மையில் தொடங்கப்பட்டுள்ள இணைய மையத்தின் உதவியால் கணினி மொழியியல் ஆய்வுக் கூடத்திற்கு ஐ எஸ் டி என் (ISDN) வழியே இணைய வசதியும் கிடைத்துள்ளது.

## ஆய்வுக்கூடத்தின் பணிகள்

### செயற்கை அறிவுத்திறனும் இயற்கை மொழி ஆய்வும்

கணினியியல் ஆராய்ச்சியில் இன்று கணினிக்குச் செயற்கை அறிவுத்திறன் (Artificial Intelligence - AI) கொடுக்கும் முயற்சியில் கணினித்துறை அறிவியலார்கள் ஈடுபட்டுள்ளனர். இம்முயற்சியின் முதற்படி, கணினிக்கு இயற்கைமொழி அறிவைக் கொடுப்பதாகும். மனிதனின் படைப்பாக்கத்திறன் கொண்ட அறிவுத்திறனுக்கு மிக முக்கிய அடிப்படையாக அமைவது மனிதன் படைத்து, பயன்படுத்தும் தமிழ், ஆங்கிலம் போன்ற இயற்கை மொழிகளே.

கணினியுடன் இன்று நாம் அதற்கென்று உருவாக்கப்பட்டுள்ள BASIC, C, FORTRAN போன்ற செயற்கை மொழிகள் வாயிலாகத்தான் உரையாடுகிறோம் அல்லது தொடர்பு கொள்கிறோம், இதற்குக் காரணம் இயற்கை மொழிகளின் பலவீனம் அல்ல. கணினியின் பலவீனமே ஆகும். இயற்கை மொழியை எளிதாகக் கற்று, சூழலுக்கு ஏற்றபடி பயன்படுத்தும் திறனை மனித மூளை பெற்றுள்ளது. மின்னணு இயந்திரமான கணினிக்கு இத்திறனைப் பெறுவது கடினமான செயலாக இன்று உள்ளது.



கணினித்துறை அறிவியலார் இன்று கணினிக்கு இயற்கை மொழி அறிவைக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு

மொழியியல் அறிவு மிகத் தேவை யானது. எனவே கணினித் துறையினரும் மொழியியலாரும் இணைந்து, இயற்கைமொழி ஆய்வு (Natural Language Processing - NLP) என்ற ஆய்வுத்திட்டத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர். மனிதமூளை எவ்வாறு இயற்கை மொழித் தொடர்களைப் புரிந்து கொள்கிறது, உருவாக்குகிறது என்ற இந்த ஆய்வில் வெற்றி பெற்றால், அதன் அடிப்படையில் அந்த அறிவைக் கணினிக்குக் கொடுக்க முடியும்.

கணினிமொழியியல் ஆய்வுக் கூடம் தமிழை அடிப்படையாகக் கொண்டு மேற்கூறிய ஆய்வுத் திட்டத்தை மேற்கொள்ளவிருக்கிறது.

### கணினிமொழியியலும் (Computational Linguistics) தமிழ்மென்பொருளும்

நவீன மொழியியல் அறிவியல் (Modern Linguistic Science) மொழி பற்றி, மொழி இலக்கணம் பற்றி பல கோட்பாடுகளை (Theories of Language and Grammer) உருவாக்கிவருகிறது. இக்கோட் பாடுகளைச் சோதித்து அறியவும், நிறுவவும் கணினி மிகவும் பயன் படுகிறது. கணினிமொழியியல் ஆய்வுக்கூடம் தமிழை அடிப்படை யாகக் கொண்டு, இந்த ஆய்விலும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கவிருக்கிறது. ஆங்கிலம் போன்ற மேலைநாட்டுமொழிகளைக் கணினியில் நமது பல்வேறு பணிகளுக்குப் பயன்படுத்த, பல மென்பொருட்கள் உருவாக்கப் பட்டுள்ளன. தட்டச்சு செய்து, தட்டச்சு செய்த உரைகளைத் திருத்தி, செம்மை செய்யும் சொல்லாளர்கள் (Word Processor) பல ஆங்கிலத்திற்கு உள்ளன. நாம் பயன்படுத்தும் MS WORD, WORDPERFECT, WORDSTAR போன்ற ஆங்கிலச் சொல்லாளர்களைப் போன்று முழுமையான தமிழ்ச்சொல்லாளர்கள் தமிழுக்கு உருவாக்கப்படவேண்டும். சொல்லாளர்களில் எழுத்துருக்கள் (Fonts) தட்டச்சு செய்ததைப் பதிப்பிக்க உதவும் கட்டளைகள் ஆகியவற்றோடு சொல்திருத்தி, சந்தித்திருத்தி, இலக்கணத்திருத்தி, பல்வேறு அகராதிகள் போன்ற பல மொழிச் சாதனங்களும் இருக்கவேண்டும். அப்போதுதான் அவை முழுச் சொல்லாளராக அமையும்.

தமிழில் தற்போது எழுத்துருக் களும் பதிப்பிக்கும் கட்டளைகளும் கொண்ட பல மென்பொருட்கள் உள்ளன. ஆனால், நிறைவான மொழிச் சாதனங்களைக் கொண்ட மென்பொருட்கள் இல்லை. சோதனை அளவில்தான் சில மென்பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றை



உருவாக்க, கணினிமொழியியல் அடிப்படையில் தமிழ் ஆய்வு மேற்கொள்ளப் படவேண்டும். தமிழ்ச் சொற்கள் பொதுவாக ஒன்றுக்கு மேற்பட்ட உருபன் என்று அழைக்கப்படும் பொருள் தரும் கூறுகளை – அடிச் சொல், விகுதிகள் என்பவற்றை – கொண்டு உருவாக்கப் படுகிறது. தமிழ்ச் சொல்லைப் பொருள் உள்ள பகுதிகளாகப் – பகுபத உருபன்களாக, உறுப்புகளாக – பிரிக்கும் கணினிக் கட்டளைகளைக் கொண்ட நிரல்கள் (Parsing Programmes) உருவாக்கப் படும் போதுதான் தமிழுக்குச் சொல் திருத்திகளை உருவாக்க முடியும். இதற்குக் கணினி ஒலியியனியல் (Computational Phonology)– கணினி உருபனியியல் (Computational Morphology) கணினித் தொடரியல் (Computational Syntax) என்று அழைக்கப்படும் கணினி மொழியியல் பிரிவுகளின் அடிப் படையில் தமிழ் மொழி ஆராயப்பட வேண்டும். இதுபோன்ற ஆராய்ச்சிகள் தமிழில் மேற்கொள்ளப்படாமல் தமிழில் முழுமையான சொல்லாளர்கள் உருவாக முடியாது.

கணினி புரிந்துகொள்ளும் தமிழ் அகராதி (Machine Readable Tamil Dictionary) தமிழுக்கு உருவாக்கப்பட வேண்டும். நாம் பொதுவாகப் பயன்படுத்தும் அகராதிகள் சொல்லின் பொருளை மட்டும் ஓரளவுக்குத் தரும். முழுமையான பொருளைப் புரிந்து கொள்ள நமது பின்புல அறிவு நமக்குப் பயன்படுகிறது. மேலும் ஒரு சொல்லின் பிற பண்புகள் அல்லது கூறுகள்– ஒலியன் கூறு, உருபன் கூறு, தொடர்கூறு போன்றவற்றைப் பொதுவாக அகராதிகளில் கொடுப்பது இல்லை. ஆனால், கணினிக்கு இவையெல்லாம் தேவை. இதுதான் கணினி புரிந்து கொள்ளும் அகராதி

என்று அழைக்கப்படுகிறது. இயந்திர மொழியெர்ப்பு என்றழைக்கப்படும் (Machine Translation) பணிகளுக்கு இவ்வகராதிகள்தான் பயன்படும். சொல்திருத்தி, சந்தித் திருத்தி, இலக்கணத்திருத்தி உருவாக்கு வதற்கும் இதுபோன்ற அகராதிகள் தேவைப்படுகிறது. அச்சடிக்கப்பட்ட படிவங்களையும் நூல்களையும் ஸ்கேனர் என்றழைக்கப்படும் சாதனம் வழியே பதிவு செய்து, கணினியில் அவற்றைத் திருத்தி, பதிப்பிக்கும் (OCR-Optical Character Recognizer) என்றழைக்கப்படும் ஒளியெழுத்து அறிவான் தமிழுக்கு உருவாக்கப்பட்டால் நமது பல பதிப்புப் பணிகளை மிக விரைவாக மேற்கொள்ளலாம். இவை இருந்தால் பதிப்பித்த அல்லது தட்டச்சு செய்த நூற்களைத் திருப்பித் தட்டச்சு செய்யத்தேவையில்லை. குறிப்பிட்ட பக்கத்தை ஸ்கேன் செய்து அப்பக்கத்தில் தேவையான திருத்தங் களை மட்டும் மேற்கொள்ளலாம்.

தமிழில் பேசினால் அப்பேச்சை எழுத்து வடிவில் மாற்றித் தட்டச்சு செய்து தரும் Speech Recognizer என்றழைக்கப்படும் பேச்சு–எழுத்து மாற்றி மென்பொருள் நமது தட்டச்சு வேலையை எளிமையாக்கும். மேலும் செவித்திறன் குறையுடையவர்களுக்கு மிகவும் பயன்படும். அதுபோன்று தமிழில் தட்டச்சு செய்ததைப் பேச்சாக மாற்றித் தரும் Speech Synthesizer என்றழைக்கப்படும் எழுத்து– பேச்சு மாற்றி மென்பொருளும் நமக்கும்– குறிப்பாகக் கண்பார்வை இல்லாதவர்களுக்கும், சிறப்பாகப் பயன்படும். ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கு இவை இப்போது உருவாக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற மென்பொருட்களைத் தமிழுக்கு உருவாக்க, கணினி மொழியியல் அடிப்படையில் பல தமிழ் ஆய்வுகள் தேவைப்படுகின்றன. இந்த வகை ஆய்வில் ஈடுபட மாணவர் களுக்கும் ஆய்வாளர்களுக்கும் தகுந்த பயிற்சி அளிக்க வேண்டும். இதற்குக் கணினிமொழியியல் ஆய்வுக்கூடம் மிகப் பயன்படும்.

## கணினித்தமிழ் ஆய்வு

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழித்துறையின் மொழியியல் ஆய்வுப்பிரிவு தற்போது பல கணினித் தமிழ் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. கணினித்தமிழ் இலக்கணம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. கணினிமொழிப் பாடத்தைத் தமிழ் முதுகலை மாணவர் களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. மாலைநேரப் படிப்பாகக் கணினி மொழியியல் பட்டயப் படிப்பைக் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தி வருகிறது.

கணினிமொழியியலை வளர்த் தெடுக்கும் பணிகளில் ஒன்றாக, கடந்த ஆண்டு தேசிய அளவிலான கணினிமொழியியல் கலந்தாய்– வரங்கத்தைச் சிறப்பாக நடத்தியது. வருகிற ஆண்டு பிப்ரவரி மாதத்தில் உலகக் கணினித் தமிழ் கருத்தரங்கம் ஒன்றை நடத்த உள்ளது.

மேலும், தமிழர் அல்லாதவர் களுக்குப் பன்முக ஊடகம் (Multimedia) வழியே தமிழ் கற்பிக்கும் கல்வியைச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல்வழிக்கல்வி நிறுவனம் விரைவில் தொடங்க விருக்கிறது. அதற்கான கணினி வழிப்பாடங்களை இந்தக் கணினி மொழியியல் ஆய்வுக்கூடத்தில் மொழியியல் பேராசிரியர்கள் கணினிப் பொறியாளர்களுடன் இணைந்து தயாரித்து வருகின்றனர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கணினிமொழியியல் ஆய்வுக்கூடத்தின் அடிப்படைத் தமிழ் ஆய்வுப்பணிகள், தமிழைக் கணினியில் முழுமையாகப் பயன் படுத்தத் தேவையான பல்வேறு மென் பொருட்கள் உருவாக வழிவகுக்கும். இதுபோன்ற பல ஆய்வுக்கூடங்கள் தமிழகத்தின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் நிறுவப்பட வேண்டும். அப்போதுதான் கணினித்மிழ் வளரும். தமிழ்ச் சமுதாயம் தகவல்தொடர்பு தொழில்நுட்பத்தில் தலைநிமிர்ந்து நிற்கும்.



• • •

# சிறுதொழில் வளர

கடந்த ஆட்சியில் நாட்டில் சிறுதொழில்கள் வீழ்ச்சியடைந்ததால்தான் பணப்புழக்கமே இல்லாமல் போனது. எனவே நாட்டின் பொருளாதாரத்தையும் வேலை வாய்ப்பையும் மேம்படுத்த அதிக அளவில் சிறுதொழில்கள் தொடங்கப்பட வேண்டும். அதற்கான வழிமுறைகளை தொழில் வணிகத்துறைதான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அந்த வகையில் நாம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக மாவட்ட தொழில் மைய ஆய்வுக் கூட்டம் 28.12.2001 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

முதலில் ஒவ்வொரு மாவட்ட பொது மேலாளரும் தங்கள் மாவட்டத்தில் எத்தனை சிறு, குறுந்தொழில்கள் செயல்பாட்டில் உள்ளன. அவற்றில் சிறப்பாக செயல்படக் கூடிய தொழில்கள் எவை எவை ? அத்தொழில்களில் மேலும் சில தொழில் முனைவோர்களை ஈடுபடுத்த முடியுமா என்ற முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

தொழிலை சிறப்பாக நடத்த முடியாமல் தடுமாறும் நிலையில் உள்ளவர்களுக்கு நாம் எந்த வகையில் உதவிட முடியும் என ஆராய வேண்டும்.

அந்தந்த மாவட்டங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களை மையமாக வைத்து தொழில் முனைவோரை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 200 பட்ட, பட்டய படிப்பு முடித்தவர்களை தொழில் தொடங்கி வைக்க மாவட்ட ஆட்சியருடன் கலந்து அவர் தலைமையில் ஒரு கலந்துரையாடலும் (Seminar) அதனை தொடர்ந்து அவர்களுக்கு உரிய பயிற்சியும் அளித்து தேவையான நிதியுதவிகளுக்கும் ஏற்பாடு செய்து பின் மார்க்கெட்டிங் நிலையையும் அவர்களுக்கு உருவாக்கி தந்து அவர்கள் தொழில் சிறப்பாக நடக்க மாவட்ட தொழில் மையம் முனையவேண்டும்.

அதேபோல் தொழிற்பேட்டைகள் ஏதும் தொடங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்து அறிக்கை தர வேண்டும்.

தற்போது இருக்கக்கூடிய தொழிற்பேட்டைகளில் காலியாக உள்ள இடங்களைத் தொழில் முனைவோரைக் கண்டறிந்து ஒதுக்கீடு செய்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை மாவட்ட தொழில் மையம் செய்து கொடுக்க வேண்டும்.

தொழில் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தொழில்கள் வாரியாக (Tradewise) கூட்டுறவு தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஏற்கெனவே உள்ள அனைத்து தொழிற்பேட்டைகளையும் நல்லமுறையில் பராமரிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தொழில் தொடங்க ஆர்வமாக வரும் தொழில் முனைவோர்களை நீங்கள் காட்டும் அலட்சியத்தால் சோர்ந்து போக விடக்கூடாது. எனவே அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களது தேவைகளை உடனுக்குடன் செய்து கொடுக்க மாவட்ட தொழில் மையம் முனைய வேண்டும்.

தொழில் முனைவோர்களுக்கு நிதியுதவி கிடைக்க வங்கிகளை அணுகி அவர்களுக்கு கடன் கிடைக்க உதவ வேண்டும்.

ஒவ்வொரு மாவட்ட தொ்ழில் மையத்திலும் தொழில் முனைவோர்க்குத் தேவையான விவரங்கள் கிடைக்க தகவல் மையம் சிறப்பாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறு, குறுந்தொழில்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் விற்பனையாவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்று இக்கூட்டத்தில் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு ஆர். வைத்தியலிங்கம் அவர்கள் அறிவுறுத்தினார். ★

போலியோ என்ற கொடிய இளம்பிள்ளைவாத நோய், பொதுவாக ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளை பாதிக்கப்படுவதுடன், கை, கால் ஊனமேற்பட்டு அவர்களின் வாழ்நாள் முழுவதும் துன்பத்திற்குள்ளாகின்றனர். பல்ஸ் போலியோ முகாம்கள் நடத்தி எல்லா குழந்தைகளுக்கும் கூடுதலாக போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுவதன் மூலம் இந்நோயை ஒழிக்க முடியும் என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த முறையின் மூலம் உலகத்தில் 160க்கும் மேற்பட்ட நாடுகள் போலியோவை ஒழித்து விட்டன.

தமிழ்நாட்டில் இதுவரை நடத்தப்பட்ட பல்ஸ் போலியோ முகாம்கள் நல்ல வெற்றியைத் தந்துள்ளன. போலியோ நோய் ஒழிப்பில் நாம் இறுதி கட்டத்தை அடைந்துள்ளோம். தமிழ்நாட்டில் தற்போது, போலியோ நோயினால் எந்தக் குழந்தையும் பாதிக்கப்படவில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த போலியோ அற்ற நிலையை மேலும் தொடரச் செய்ய வேண்டும். அப்போதுதான் போலியோ நோயை உண்டாக்கும் நுண்கிருமிகளை சுற்றுச் சூழலிலிருந்து அறவே ஒழித்ததாக உறுதி செய்ய முடியும். ஆகவே 2–12–2001 அன்று, முதல் சுற்றுப் போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்த திட்டமிட்டுள்ளோம். இரண்டாவது சுற்று 20–1–2002 அன்று நடைபெறவுள்ளது.

**பல்ஸ் போலியோ முகாம் எதற்காக?**

ஒரே சமயத்தில் ஒட்டுமொத்தமாக ஐந்து வயதிற்குட்பட்ட எல்லா குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுப்பது போலியோ நோய் ஒழிப்புத் திட்டத்தின் நோக்கமாகும். பாதுகாப்பான வேக்ஸின் கொடுக்கப்படும் போது, நோய் பாதிப்புக்கு ஏதுவாகும் குழந்தைகளின் குடல்களிலுள்ள போலியோவை உண்டாக்கும் கொடிய நுண்கிருமிகள் இரத்தத்திற்குள் செல்லவிடாமல், மலத்தின் வழியாக வெளியேற்றப்பட்டு, சூரிய வெப்பத்தால் அழிக்கப்படுகிறது. வழக்கமாக கொடுக்கும் தடுப்பு மருந்தின் மூலம் போலியோ நோய் பரவாமல் தடுக்கப்பட்டாலும் ஒரே சமயத்தில் அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ நுண்கிருமிகள் பரவாமல் சுற்று சூழலிலிருந்து அறவே ஒழிக்க முடியும். ஆகவே ஒரு குழந்தை கூட விடுபடாமல் அனைத்து ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

**முக்கிய அம்சங்கள் :**

1. போலியோ சொட்டு மருந்து மிகவும் பாதுகாப்பானது.

2. எத்தனை முறை வேண்டுமானாலும் கொடுக்கலாம்; அதனால் எந்த பாதிப்பும் இல்லை.

3. ஒரிரு நாட்களுக்கு முன்பு சொட்டு மருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் முகாம் நாட்களில் மீண்டும் கொடுக்க வேண்டும்.

4. முகாம் நாட்களில் கொடுக்கப்படும் சொட்டு மருந்து வழக்கமான தவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்திற்கு மாற்று அல்ல. இது ஒரு கூடுதல் தவணையாகும்.

5. வயிற்றுப் போக்கு, சளி, காய்ச்சல் மற்றும் சிறுசிறு உபாதைகள் உள்ள குழந்தைகளுக்கும் முகாம் நாட்களில் தவறாமல் சொட்டு மருந்து கொடுக்கப்படவேண்டும்.

6. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கும் முகாம் நாட்களில் சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும்.

தமிழ்நாட்டில் சுமார் 40,000 சிறப்பு மையங்கள் மூலம் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இம்மையங்கள் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் முக்கியமான பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பேருந்து நிலையம், ரயில் நிலையம் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகிய இடங்களில் நடமாடும் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு முகாம் நாட்களில் பயணம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுமார் 73 இலட்சம் குழந்தைகள் இதன் மூலம் பயன்பெறுவார்கள். இப்பணியைச் சிறப்பாகச் செய்ய பல்வேறு அரசுத்துறைகள், ரோட்டரிச் சங்கம் மற்றும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் சேர்ந்த 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இப்பணியில் ஈடுபடுகிறார்கள்.

சொட்டு மருந்து கொடுக்கப்பட்டதற்கான அடையாளம் தெரிந்து கொள்வதற்காக, குழந்தையின் இடது கை சுண்டு விரலில் "ஜென்ஷன் வயலட்" என்ற அடையாள திரவம் வைக்கப்படுகிறது. குழந்தைகள் வாய்க்குள் விரலை வைத்தாலும் இந்த திரவத்தால் எந்த ஆபத்தும் ஏற்படாது.

ஒவ்வொரு வீட்டையும் பார்வையிட்டு அந்த வீட்டில் உள்ள குழந்தைக்கு சொட்டு மருந்து தந்துள்ளதை "P" என்ற குறியீடு செய்து உறுதி செய்யப்படும்.

கடந்த ஆண்டில் பல்ஸ் போலியோ நோய் ஒழிப்புத் திட்டத்திற்கு பத்திரிக்கை, வானொலி, தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி ஆற்றிய பணிகள் பாராட்டத்தக்கதாகும். இந்த முறையும் போலியோ நோய் ஒழிப்புத் திட்டம் பற்றிய செய்திகளை வெளியிட்டு பத்திரிக்கைகள் மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது. வானொலி மற்றும் தொலைகாட்சிகள் முக்கிய பங்காற்ற வேண்டும்.

வருங்கால இளைஞர்களை ஊனமில்லாமல் காப்பது
நமது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

ஊனமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்.

★ ★ ★

# போலியோ

தமிழ்நாட்டில் 2–12–2001 அன்று பல்ஸ் போலியோ சிறப்பு முகாம்கள் பொதுமக்களின் பேராதரவுடன் பெரிய அளவில் நடத்தப்பட்டது. ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் 72 இலட்சம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளதாக முதல் தகவல் அறிக்கை தெரிவிக்கிறது. கிராமப்புறங்களில் சுமார் 53 இலட்சம் குழந்தைகளும் நகர்ப்புறங்களில் 19 இலட்சம் குழந்தைகளும் பயனடைந்துள்ளனர். குறிப்பாக, 35 இலட்சம் பெண் குழந்தைகள் முகாம்கள் மூலம் பயன்பெற்றுள்ளார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், கல்விக்கூடங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட 40,399 சிறப்பு முகாம்கள் மூலம் சொட்டு மருந்து வழங்கப்பட்டது. பேருந்து நிலையம், ரயில் மற்றும் விமான நிலையம், சுற்றுலாத்தலம் ஆகிய இடங்களில் சுமார் 700 நடமாடும் மையங்கள் அமைக்கப்பட்டு பயணம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டது. புறப்படத் தயார் நிலையிலிருந்த ரயில் மற்றும் பேருந்துகளிலுள்ள குழந்தைகளுக்குக்கூட தவறாமல் சொட்டு மருந்து வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்திட்டத்திற்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது. இப்பணியில் பொது சுகாதாரத் துறையினருடன் ஏனைய அரசு மற்றும் அரசு சாராத் துறைகளையும் சேர்ந்து சுமார் 2 இலட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். மேலும் பள்ளி மாணவர்களும் இணைந்து செயல்பட்டுள்ளார்கள். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மருத்துவ கழகங்கள் மற்றும் தனியார் மருத்துவர்கள் இத்திட்டத்தில் பெரிய அளவில் பங்காற்றியுள்ளனர். குறிப்பாக ரோட்டரி சங்கங்களின் மூலம் வழங்கப்பட்ட விளம்பர பிரசுரங்களும், தொலை தூரம் மற்றும் மலைவாழ் பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கும், சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

• • •

# தரம் வாய்ந்த அடிப்படை சுகாதார வசதி

கிராமப் பகுதிகளில் தரம் வாய்ந்த அடிப்படை சுகாதார வசதிகளை செய்து கொடுக்கப்பட வேண்டும் என்ற அரசின் நோக்கம் நிறைவேற சமுதாய பங்கேற்பு அவசியமாகும். அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் "பங்கேற்பு சமுதாய நலக்குழு" அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழு கிராம மக்களுக்கு தரம் வாய்ந்த மருத்துவ வசதிகளைக் கொடுக்கும் பொருட்டு, மருத்துவர்களுக்கும் பிற பணியாளர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கும்.

இக்குழுவில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

1. ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூத்த மருத்துவ அலுவலர் – தலைவர்
2. ஆரம்பசுகாதார நிலையம் அமைந்துள்ள கிராமம் / நகர பஞ்சாயத்து தலைவர் – உறுப்பினர்
3. கிராமத்தில் குடியிருக்கும் உள்ளூர் பள்ளியின் தலைமையாசிரியர் அல்லது மூத்த ஆசிரியர் – உறுப்பினர்
4. கிராம நிர்வாக அலுவலர் – உறுப்பினர்
5. சுய உதவிக் குழுவின் இரண்டு பெண்கள் – உறுப்பினர்
6. உள்ளூர் கொடையாளி மற்றும் அரசு சாராத தொண்டு நிறுவனம் – உறுப்பினர்
7. ஒரு அங்கன்வாடி பணியாளர் – உறுப்பினர்

இக்குழு, ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அதனுடன் அடங்கிய துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றின் பொது பராமரிப்பை பேணி காக்கும். மேலும் குடிநீர் விநியோகம், மின்சார விநியோகம் தங்குதடையின்றி கிடைப்பதை இக்குழு உறுதி செய்யும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் வசதிகள் மற்றும் அவைகளை முறையாக உபயோகப்படுத்திடவும் தேவையான விழிப்புணர்வை இக்குழு ஏற்படுத்தும். கருவுற்ற தாய்மார்கள் மற்றும் அவசர நோயாளிகளுக்கும், மேல் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்ல தேவையான வாகன வசதிகளை இக்குழு ஏற்படுத்தித்தரும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் நல்ல சேவையினை மக்களுக்கு அளிப்பதற்காக அறிவுரை வழங்குவதும் ஆதரித்தலும் இக்குழுவின் முக்கிய பணி ஆகும். மக்கள் நலனுக்காக ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிடைக்கக்கூடிய மனித வளம், உபகரணங்கள் மற்றும் இயற்கை வளங்களின் அதிகபட்ச பயன்பாட்டிற்கும் இக்குழு வகை செய்யும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கப்படும் சிகிச்சைகள்/வசதிகள் குறித்த "குடிமக்கள் தகவல் அட்டவணை" பார்க்கும்படியான இடத்தில் வைக்கப்பட வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த அட்டவணையில் கீழ்க்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள், அடிப்படை மருத்துவ பணிகளையும் நோய் தடுப்பு பணிகளையும் அனைத்து மக்களும் முக்கியமாக நலிந்த பிரிவினர் பயன்பெற பணியாற்றும்.

1. ஆரம்ப சுகாதார நிலையங்கள் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இயங்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் காலை 8 – 11 மணி வரை இயங்கும்.

2. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தகுதி வாய்ந்த மருத்துவர்கள் அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கின்றனர்.

3. தரமுள்ள மருந்துகளும், ஊசி மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும்.

4. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களிலும் 24 மணி நேரமும் இலவசமாக பிரசவம் பார்க்கப்படும்.

5. கருவுற்ற தாய்மார்கள் பரிசோதிக்கப்பட்டு இரும்பு சத்து மாத்திரை வழங்கப்படும். தடுப்பூசி போடப்படும். தகுந்த அறிவுரைகளும் வழங்கப்படும்.

6. குழந்தைகளுக்கு அனைத்து தடுப்பூசிகளும் போடப்படும்.

7. கருத்தடை சேவைகள் ஆண் பெண் இருபாலருக்கும் அளிக்கப்படும்.

8. காசநோய், தொழுநோய், மலேரியா, வயிற்றுப் போக்கு போன்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.

9. அவசர மருத்துவ தேவைகளுக்கு ஆரம்ப சுகாதார நிலைய வாகனங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

10. ஆரம்ப சுகாதார நிலைய களப் பணியாளர்கள் கிராமந்தோறும் வீடுவீடாகச் சென்று சுகாதாரப்பணிகளை மேற்கொள்வார்கள்.

• • •

# இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம் பற்றி ஒரு கருத்துக் கோவை

பெண்கள் முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறை கொண்ட தமிழக அரசு கடந்த 2000–2001 சட்டசபை நிதிநிலை அறிக்கையில் அறிவித்த சிறப்பான திட்டங்களில் ஒன்று ஆதிதிராவிட/ பழங்குடி இன மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டமாகும்.

மாணவிகள் பள்ளிக் கல்வியைத் தொடர்ந்து பெற்றிட அவர்களின் இடரினைக் களையை கொண்டு வரப்பட்ட இத்திட்டம் கோவை மாவட்டத்தில் ஒரு சைக்கிள் ரூ.1,360 வீதம் 2,441 சைக்கிள்கள் ரூ.32,20,000 மதிப்பில் 155 சைக்கிள்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தம் 2,441 மாணவிகள் இதன் மூலம் பயனடைந்து தமிழக அரசுக்கு தங்களது நன்றியினைத் தெரிவித்து மகிழ்ச்சியடைந் துள்ளனர்.



இத்திட்டம் கடந்த 15.9.2001 அன்று அண்ணா பிறந்த நாளில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. கோவை மாவட்டத்தில் 17.11.2001 அன்று மாண்புமிகு பால்வளம் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.சி.சண்முகவேலு அவர்களாலும், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.செ.ம.வேலுசாமி அவர்களாலும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இன்று மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மிதிவண்டி பெற்ற மாணவிகள் இத்திட்டம் குறித்து தங்களின் கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

புனித மரியன்னை மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி வித்யா தாரணி :

*"நான் தினமும் 3.5 கி.மீ. மிதிவண்டியில் பயணம் செய்து பள்ளி செல்கிறேன். பேருந்தில் செல்வதைவிட குறைவான நேரத்தில் மிதிவண்டியில் பள்ளிக்குச் செல்ல முடிகிறது. கூட்ட நெரிசலிலிருந்து விடுதலை கிடைத்துள்ளது.''*

அதே பள்ளியைச் சேர்ந்த டி.தீபா, கவிதா மற்றும் சோனியா :

*"நாங்கள் பள்ளி முடிந்ததும், கணினி தட்டச்சு போன்ற பாடங்களைப் படித்து தாமதமாக செல்ல நேர்ந்தாலும் மிதிவண்டி இருப்பதால் மிகவும் வசதியாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்கிறது.''*

மருதமலை தேவஸ்தான அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி கவிதா மற்றும் சரண்யா:

*"இந்த திட்டம் மிகவும் பயனுள்ளதாகவும், தொடர்ந்து கல்வி கற்க ஊக்குவிப்பதாகவும் இருக்கின்றது''.* மேலும் இந்த மிதிவண்டியை நல்லமுறையில் வைத்திருந்தால் எங்கள் வாழ்க்கைக்கு நீண்ட வருடங்களுக்கு பயன்படும்.

மாநகராட்சிப் பள்ளி மாணவி கல்பனா :

*"நான் பேருந்துகள் மாறி மாறி பள்ளி சென்று கொண்டிருந்தேன். இதனால் களைப்பும், நேர விரயமும் ஆனது. மேலும் சிறப்பு வகுப்புகள் நடைபெறும் நாட்களில் மிகவும் சிரமப்பட்டேன். தற்பொழுது எனக்கு மிதிவண்டி வழங்கப்பட்டதால் எனக்கு மிகவும் வசதியாக உள்ளது. எனக்கு சிறந்த மதிப்பெண்கள் கிடைக்கும் என்று நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது''.*



இதுபோல் பல மாணவிகளும், அவர் தம் பெற்றோர்களும் இத்திட்டம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ளனர். மாணவிகள் கல்வி பயில ஒரு தூண்டுகோலாகவும், வரப்பிரசாதமாகவும் இத்திட்டம் அமைந்துள்ளதாக அனைத்துத் தரப்பினரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இத்திட்டமானது மலைப்பகுதிகளிலும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

*– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கோவை.*

# மதுரை மற்றும் தேனி மாவட்டப் பகுதிகளுக்கு ரூ.95 கோடியில் வைகை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க தமிழக அரசு ஆணை

மதுரை மற்றும் தேனி மாவட்டங்களைச் சேர்ந்த சேடப்பட்டி, டி.கல்லுப்பட்டி, உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, ஏழுமலை மற்றும் பேரையூர் ஆகிய பகுதிகளுக்கு வைகை ஆற்றிலிருந்து ரூ.95 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மதுரை மற்றும் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த சேடப்பட்டி, டி.கல்லுப்பட்டி, உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, ஏழுமலை மற்றும் பேரையூர் ஆகிய பகுதிகள் வறட்சி மற்றும் புளோரைடினால் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டும் என்றும், இதற்கு வைகை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கலாம் என்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், அரசைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இத்திட்டத்தின் அவசியம் மற்றும் இப்பகுதி மக்களின் நலன் கருதி அரசின் தீவிர பரிசீலனைக்குப் பின்னர், ஆண்டிப்பட்டி ஒன்றியத்தில் 30 குடியிருப்புகள், உசிலம்பட்டி ஒன்றியத்தில் 78 குடியிருப்புகள், சேடப்பட்டி ஒன்றியத்தில் 127 குடியிருப்புகள், டி.கல்லுப்பட்டி ஒன்றியத்தில் 113 குடியிருப்புகள் மற்றும் ஆண்டிப்பட்டி, பேரையூர் நகரப் பேரூராட்சிகள், ஏழுமலை டி.கல்லுப்பட்டி ஊரக பேரூராட்சிகள், உசிலம்பட்டி நகராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்த 4,32,400 மக்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் அனுமதிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த நிதித்துறை ரூ.95 கோடி செலவு பிடிக்கும் சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அந்நிய நிதி உதவி கோரிப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கும்படியும் அறிவுறுத்தியுள்ளது. •

# டேனிடா குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம்

## விழுப்புரம் மாவட்டம்

**குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தில் மக்கள் பங்கேற்பு அணுகுமுறை**

தண்ணீர் நமது உயிர் நாடி. கிராம மக்களின் அத்தியாவசியத் தேவையான குடிதண்ணீர் வசதிக்கென அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இருப்பினும் பல கிராமங்களில் போதிய குடிநீர் வசதியின்றி மக்கள் மிகவும் அவதிப்படுவதை நம்மால் காண முடிகிறது. முறையான பராமரிப்பின்மை மற்றும் மக்களின் அலட்சியத்தின் காரணத்தினால் பல குடிநீர் திட்டங்கள் செயலிழந்து விடுகின்றன. நிலையான, பயனளிக்கக் கூடிய குடிநீர் திட்டங்கள் அமைவதற்கு மக்கள் பங்கேற்பு மிகவும் அவசியமானது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. டேனிடா உதவியுடன் செயல்படுத்தி வரும் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தில் மக்கள் பங்கேற்பை அதிகப் படியாக உயர்த்துவதற்கான பல்வேறு அணுகுமுறைகள் பின்பற்றப்படுகிறது. குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் பல்வேறு கட்டங்களிலும் (திட்டமிடல், அமலாக்கம், கண் காணித்தல், மேலாண்மை மற்றும் மதிப்பீடு) மக்கள் பங்கேற்பு வலியுறுத்தப் படுகிறது. மக்கள் பங்கேற்பு அம்சங்கள் கீழ்காணும் அணுகு முறைகளில் காணப் படுகிறது.



குடிநீர் மற்றும் சுகாதார வசதி தேவையென விண்ணப்பிக்கும் ஊராட்சிகளுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படுகிறது. பழமையான அணுகுமுறையில் மக்களின் தேவைகளுக்கு/ பொருத்தமற்ற திட்டங்களை திணிப்பதை நாம் காண்கிறோம்.

கிராம மக்கள் பங்கேற்பு அணுகுமுறையில் (அவர்களுடைய) குடிநீர் மற்றும் சுகாதாரம் தொடர்புடைய பிரச்சினைகளை அலுவலர்கள் ஆய்வு செய்து, அதன் விவரங்களை கிராம சபைக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டு, தங்களது தேவை மற்றும் சமூக சூழ்நிலை களுக்குகந்த பொருத்தமான குடிநீர் திட்டங்களை பெற வழிவகை செய்யப்படுகிறது.

மக்களின் தேவைக்கேற்ப கோரப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான மொத்த செலவீட்டில் மக்கள் பங்கு தொகை செலுத்தப்படுகிறது. (குடிநீர் செலவில் ஏழில் ஒரு பங்கு, பள்ளிக் கழிவறை 20% மற்றும் வீட்டுக் கழிவறை 50%)

சமுதாயத்திலுள்ள அனைத்து தர மக்கள், குறிப்பாக ஏழைகள், பெண்கள், ஆதி திராவிட பகுதியில் வசிக்கும் பிரிவினர் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டமிடல் கூட்டங்களில் கலந்து கொள்ள வாய்ப்பேற்படுகிறது.

கிராம மக்களிடையே நேரிடையாக தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் மக்களுடைய தற்போதைய குடிநீர் பிரச்சினை, அதற்கான காரணங்கள், எதிர்கால தீர்வுகள் என்னவென்பதை மக்கள் குழுவாக இணைந்து செயல்பட வழிவகை செய்யப் படுகிறது.

கிராம வரைபடம் வரையப்பட்டு, அப்படத்தில் குடிநீர் நிலைகள், கூரைவீடு, ஓட்டு வீடு, கான்கீரிட் வீடுகள், கிராமத்தில் உள்ள பள்ளிக் கூடம், சுகாதார நிலையம், அஞ்சலகம், கோவில், சத்துணவு மையம் போன்ற முக்கிய வசதிகள் குறிக்கப் படுகின்றன.

தங்களது கிராமத்திற்கு வழங்கப்படும் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை எவ்வாறு முறையான பராமரிப்பு மேற்கொள்ளப்படும் என விவாதம் செய்யப்படுகிறது.

பராமரிப்பிற்கு என பயனாளிக் குழுக்கள் மற்றும் கைப்பம்பு மற்றும் மின்விசை பம்புப் பராமரிப்பிற்கான ஆண் மற்றும் பெண் மெக்கானிக்குகள் தேர்வு செய்யப்படுகின்றது.

நீர்நிலை பராமரிப்புச் செலவிற்கான ஆகும் தொகைகளை பயனாளிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி மன்றம் ஏற்றுக்கொண்டு, மெக்கானிக்குகள் தங்களதுப் பணியை சிறப்புற அமைய ஆலோசனையும், ஆதரவும் வழங்கப்படுகிறது.

கிராம மக்கள் பங்கேற்புடன் திட்டமிடல் கூட்டங்களில் கலந்து கொண்ட ஆதிதிராவிடப் பகுதியைச் சேர்ந்த லதா தனது அனுபவத்தைக் கூறுகையில், ... ''மக்கள் குழுவாக குடிநீருக்காக திட்டமிட போடப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டது மிகவும் பயனுள்ளதாகயிருந்தது. குடிநீர் பிரச்சினையில் பெண்கள் சந்திக்கின்ற அன்றாட அவதியை பகிர்ந்து கொள்ள முடிந்தது. கடந்த காலங்களில் இதுபோன்ற கூட்டங்களில் நான் கலந்துகொண்டது கிடையாது. அனைவரையும் பாதிக்கின்ற குடிநீர் பிரச்சினைபற்றி மக்கள் குழுவாக விவாதம் செய்ததும் கிடையாது. மேலும் குடிநீர் பராமரிப்பின் முக்கியத்துவம் குறித்தும் எப்போதுமே நாங்கள் கேள்விபட்டது கிடையாது. இந்த கூட்டத்தின் மூலம் எதனை சாதிக்கப் போகிறோம் என்ற ஐயப்பாடு முதலில் எனக்கு இருந்தது. ஆனால் கூட்டம் முடியும் தருவாயில் எங்களுடைய குடிநீர் பிரச்சினைகளுக்கு பொருத்தமான, தீர்வை எங்களால் கண்டு கொள்ள முடிந்தது.''

பெண்கள் சுயஉதவிக் குழு உறுப்பினர் கௌசல்யா கூறுகையில்,... ''பொதுவாக கிராமங்களில் நடைபெறும் கூட்டங்களில், பெண்களாகிய நாங்கள் சுதந்திரமாக எங்கள் கருத்துக்களைக் கூற முடியாது. பெரும்பாலும் ஆண்களே எல்லா முடிவும் எடுத்துவிட்டு எங்களிடம் இதை செய்யவேண்டும் என்று திணிப்பார்கள். குடிநீர் என்பது நேரிடையாக பெண்களுடன் தொடர்புடைய ஒரு விஷயம் என்பதை எந்த ஆண்களும் உணர்ந்திருக்கவில்லை. மேலும் ஆண்களே பேசி, விவாதித்து எத்தகைய குடிநீர் வசதி வேண்டுமென தீர்மானிக்கின்றனர். ஆனால் டேனிடா கூட்டத்தில், பெண்கள் சுயஉதவிக் குழு உறுப்பினர்களிடம் குடிநீர் பிரச்சினையைக் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. குடிநீர் திட்டம் சம்பந்தமாக எங்கள் கருத்தும், ஆலோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று அறியும் போது பெண்களாகிய நாங்கள் பெருமிதம் அடைகின்றோம். இதேபோன்ற மாற்றம் இனிவரும் எல்லா கூட்டங்களில் வரவேண்டும் என்பதே எனது விருப்பம்.''

இவ்விதமாக டேனிடா உதவியுடன் செயல்படுத்தபடுகின்ற குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தில் மக்கள் பங்கேற்பை தீவிரமாக அதிகரிப்பதன் மூலமாக கிராம மக்கள் ''நமக்கு நாமே'' என்கிற கொள்கைவுணர்வுடன் செயல்பட்டு நிலையான குடிநீர் வசதியைப் பெறுகின்றனர்.

# மக்கள் பங்கேற்புடன் குடிநீர் மேலாண்மை

அறிமுகம்

நீர் வாழ்வின் ஆதாரம். சுத்தமான குடிநீரும், மாசற்ற காற்றும் இன்று மிகவும் அரிதாகிவிட்டது. உலகில் சுகாதாரக் கேடுகளினால் மட்டும் வருடத்திற்கு முப்பது இலட்சம் பேர் இறப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இவர்களில் பெரும்பாலோர் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக தமிழக அரசு ஒவ்வொரு குக்கிராமங்களிலும் கைப்பம்புகளை நிர்மானித்து வருகிறது. இவை தவிர பல்வேறு நீர் நிலைகளிலிருந்து குடிநீர், இயந்திர மோட்டார்கள் மூலம் கொண்டுவரப்பட்டு கூட்டுக் குடிநீர் திட்டங்களில் பல கிராமங்கள் பயன்பெறுகின்றன. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைத்து ஆழ்குழாய் கிணறுகள் மூலமும் மக்களின் குடிநீர் பற்றாக்குறை தீர்க்கப்படுகிறது.

பல்வேறு திட்டங்களின் மூலம் தமிழக அரசு கிராமக் குடிநீர் பிரச்சினையை தீர்க்க முனைந்து கொண்டிருக்கிறது என்றாலும், கிராமங்களில் குடிநீருக்காக தண்ணீர் குடத்துடன், வயல்வெளிகளில் அலையும் பெண்கள் கூட்டம் இன்னும் இருக்கின்றன. குடிநீர் வசதிகள் சிறந்த முறையில் உருவாக்கப்பட்ட கிராமங்களில் பொதுக் குழாய்களிலிருந்து குடிநீர் வீணாக தெருக்களில் ஓடிக்கொண்டிருக்கும் நிலையும் இருக்கிறது.

ஒரு ஒன்றியத்தை நாம் கணக்கில் எடுத்துக் கொண்டோமேயானால் குறைந்தது 350 முதல் அதிகபட்சமாக 600 கைப்பம்புகள் வரை இருக்கின்றன. அவற்றில் குறைந்தது 40 முதல் 75 கைப்பம்புகள் பழுதடைந்து, பராமரிப்பு வேலைகள் நடைபெறாமல் இருக்கும் நிலையும் இருக்கிறது. மின்விசைப் பம்புகளை

எடுத்துக் கொண்டால், பல இடங்களில் முறையான / பாதுகாப்பான மின்இணைப்புகளின்றி, பயிற்சியற்ற மின் விசைப்பம்பு இயக்குனர்களால் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

### மக்களின் எதிர்பார்ப்பு

பொதுவாக அரசுத் திட்டத்தாலும், பிற தன்னார்வ மற்றும் சர்வதேச வளர்ச்சி நிதி உதவி நிறுவனங்களாலும் கிராமங்களில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் குடிநீர் வசதிகள் (கைப்பம்புகள் மற்றும் மின்விசைப் பம்புகள்) பழுதாகிய நிலையில் இயங்கிக் கொண்டிருந்தாலோ, அல்லது பழுதாகி இயங்கவில்லை யென்றாலோ அவற்றை அரசு தான் சரி செய்து கொடுக்க வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பும், அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாத நிலையில் அரசு இயங்கும் விதத்தை குறை கூறும் மனோபாவமும் நமது மக்கள் மனதில் நிலவி வருகிறது. கோடிக்கணக்கில் பணம் செலவு செய்து இவ்வசதிகளை கிராம மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் அரசு மற்றும் வளர்ச்சி நிறுவனங்கள் பழுதுகளை சரி செய்து பராமரித்து கொடுக்க வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

### காரண அலசல்

இந்நிலைக்கு காரணங்கள் என்னென்ன என்று அலசிப் பார்க்கும் போது நமக்கு கிடைக்கும் விடைகள் :

★ கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகவே கிராமங்களுக்கு தேவையான பொது வசதிகள் அனைத்தையும், அரசு இலவசமாகவே செய்து வந்ததன் விளைவாக, மக்கள் தற்பொழுது பொது சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கு அரசை எதிர்பார்க்கும் நிலை.

★ கிராமத்தின் வசதிகளை ஊராட்சிகள் பெருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் மக்கள், ஊராட்சிக்கு தாங்கள் செலுத்த வேண்டிய வரிப்பணத்தை செலுத்துவது கிடையாது.

★ குடிநீர் மேலாண்மை அல்லது குடிநீர் வசதிகள் பராமரிப்பு என்பது பல கிராமங்களில் இல்லை.

★ மின் கட்டணம் வசூல் செய்யப்படுவது போல் குடிநீர்க் கட்டணம் வசூல் செய்யப்படுவது கிடையாது.

★ ஊராட்சி நிர்வாக செயல்பாட்டில் குடிநீர் வினியோக நிர்வாகம் முக்கிய இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அது ஒரு விஷயமாகவே எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.



★ குடிநீர் வசதிகளை பராமரிக்கவும், பழுதுகளை நீக்கவும் கிராம அளவில் பயிற்சி பெற்றவர்களில்லை.

### டேனிடா குடிநீர் மற்றும் சுகாதார திட்டம் – ஓர் புதிய அணுகுமுறை

கடந்த ஐந்து வருடங்களாக கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தமிழக அரசு (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக) மற்றும் டென்மார்க் நாட்டின் சர்வதேச வளர்ச்சி நிதி உதவி ஸ்தாபனமும் (DANIDA) இணைந்து குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகிறது.

### திட்டத்தின் நோக்கம்

கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு போதுமான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதி, சீராகவும், நிலையாகவும் கிடைக்க மக்கள் பங்கேற்புடன் வழிவகை செய்வது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

### திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

★ திட்டம் ஊராட்சிகளின் மூலம் செயல்படுத்தப் படுகிறது.

★ முந்தும் ஊராட்சிக்கு முன்னுரிமை

★ மக்கள் பங்கேற்புடன் திட்டம் தயாரித்தல்

★ மொத்த திட்ட மதிப்பீட்டில் 1/7 மக்கள் பங்குத் தொகையாக பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

★ குடிநீர் வினியோக மேலாண்மை மற்றும் பராமரிப்பு போன்றவற்றை ஊராட்சிகள் மேற்கொள்ளும் வகையில் திறன் வளர்க்கும் பயிற்சிகள் ஏற்பாடு செய்தல் மற்றும் பழுது நீக்கும் கருவிகள் வழங்குதல்.

**திறன் வளர்த்தல் மற்றும் உள்ளூர் அமைப்புகளை வலுப்படுத்துதல்**

நீடித்து நிலைக்கத்தக்க வகையில் குடிநீர் வசதிகளை பராமரிக்கும் திறமையை கிராம அளவில் உருவாக்கும் நோக்கத்துடன், டேனிடா திட்டம் கிராம அளவில் பல்வேறு குழுக்களை அமைப்பதுடன், திறன் வளர்க்கும் பயிற்சிகளையும் ஏற்பாடு செய்கிறது. அவை

**அ. குழுக்கள் / கிராம அமைப்புகள்**

1. குடிநீர் மற்றும் சுகாதாரக்குழு
2. குடிநீர் பயனாளிகள் குழு
3. தர உறுதிப்பாட்டுக் குழு
4. சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குழு

**ஆ. பயிற்சிகள்**

1. குடிநீர் மற்றும் சுகாதாரக்குழு உறுப்பினர்கள் பயிற்சி
2. பயனாளிகள் குழு பயிற்சி
3. மின்விசைப்பம்பு பராமரிப்பாளர் பயிற்சி
4. கைப்பம்பு பராமரிப்பாளர் பயிற்சி

**அ.1.1. குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு**

எந்த ஒரு திட்டமும் உள்ளூர் அமைப்புகள் / குழுக்களின் ஈடுபாட்டுடன் திட்டமிடப்பட்டு, குழுக்களின் மேற்பார்வையில் செயல்படுத்தப்படும் போது அதன் தரமும் பயன்பாடும் சிறந்ததாகவே இருக்கிறது. ஆகவே டேனிடா குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் மூலம் பயனடைய விண்ணப்பிக்கும் கிராமங்களில் குடிநீர் மற்றும் சுகாதாரக்குழு (VWSC) அமைக்கப்படுகிறது.

இக்குழுவில் ஊராட்சித் தலைவர், உபதலைவர், வார்டு உறுப்பினர்கள் மற்றும் ஏற்கெனவே கிராம பொது சேவையில் ஈடுபட்டுள்ள முக்கியஸ்தர்கள், ஏழைகள், உள்ளூரில் வசிக்கும் ஆசிரியர்கள், செவிலியர், மக்கள் நலப்பணியாளர்கள் போன்றவர்கள் உறுப்பினராவார்கள். இவர்களை கிராம சபை தேர்ந்தெடுக்கிறது. ஊராட்சியின் மக்கள் தொகையை பொருத்து உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 10–20 ஆக வேறுபடுகிறது. உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 1/3 பெண்களாக இருக்கின்றனர்.

இக்குழுவின் முக்கியமான பணிகள், குடிநீர் மற்றும் சுகாதார திட்டத்தை தயாரித்தல், செயலாக்கம் செய்ய உதவுதல், திட்டத்தை பராமரித்தல் போன்ற பல கட்டங்களிலும் திட்ட அலுவலர்களுக்கும் மக்களுக்கும் ஒரு பாலமாக இருந்து செயல்படுவதாகும்.

**அ.1.2. குடிநீர் பயனாளிகள் குழு**

சமுதாயக்கட்டுப்பாட்டை விட சிறந்தொரு சட்டம் இல்லை. ஆகவே குடிநீர் நிலைகள் முறையாகப் பராமரிக்கப்படவும், குடிநீர் வசதி கிராம மக்களுக்கு நீடித்து நிலைத்த பயன் தரவும், கிராமத்தில் வசிக்கும் ஒவ்வொரு நபரும் சமுதாயச் சொத்து, நமது சொத்து, அதில் பழுது ஏற்பட்டு வீணாகி விட்டால் பாதிக்கப்படவிருப்பது நமது குடும்பமும், நாம் ஒவ்வொருவருமே எனும் உணர்வுடன் குடிநீர் பராமரிப்பு மேலாண்மை செய்தல் வேண்டும் என்பதற்காக பெண்கள் பயனாளி குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

வீட்டிற்கு ஒரு பெண், தெருவிற்கு ஒரு குழு என்ற முறையில் இக்குழுக்கள் அமையும்.

குடிநீர் நிலைகளைச் சுத்தமாக வைத்திருப்பது, மாதம் ஒரு முறை குடிநீர் சந்தா செலுத்துவது, குழுவின் பணம் செலவு செய்யப்படும் போது உரிய ரசீதுகளையும் கணக்கையும் எழுதி வைப்பது, கைப்பம்புகளில் முன்னெச்சரிக்கைப் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது, பெரும் பழுதுகள் ஏற்படும்போது பயிற்சி பெற்ற கைப்பம்பு பராமரிப்பாளர்கள் மற்றும் விசைப்பம்பு இயக்குநர்களுக்கு பழுது பற்றி தெரிவிப்பது இப்பயனாளி குழுக்களின் பணியாகும்.

### குடிநீர் வசதிகளின் பராமரிப்பிற்கு திறன் வளர்க்கும் பயிற்சிகள்

**ஆ. 1.1. பயிற்சி : விசைப்பம்பு பராமரிப்பாளர் பயிற்சி**

**நோக்கம்:**

அ. மின் விசைப்பம்பு மற்றும் இயக்கிகள் இயங்கும் விதத்தை விளக்குதல்.

ஆ. மின் சாதனங்களுடன் பாதுகாப்பாக வேலை செய்ய கற்றுத்தருவது.

இ. மின் விசைப்பம்பு பராமரிப்பை கிராம அளவில் திறம்பட செய்ய திறமையை வளர்ப்பது.

**காலம் :** நான்கு நாட்கள்

**பங்கேற்போர்:** ஊராட்சிகளில் விசைப்பம்பு இயக்குனராக பணிபுரிபவர்.

**என்ன கற்றுத் தரப்படுகிறது :**

★ குடிநீர் மற்றும் சுகாதாரம்

★ மின் சாதனங்கள் – அறிமுகம்

★ மின்விசை நீர் இரைப்பான்கள் இயங்கும் விதம்

★ இயக்கிகள் – இயங்கும் விதம்

★ செயல் முறைப்பயிற்சி

★ பொதுவாக ஏற்படும் பழுதுகளும், அவற்றை சரிசெய்யும் முறைகளும்

★ மின் தாக்கம் மற்றும் முதலுதவி குறிப்புகள்

★ குடிநீர் குழாயடி சுத்தம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பராமரிப்பு.

டேனிடா திட்டத்தின் மூலம் இதுவரை கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 208 ஆண்களும், 85 பெண்களும் ஆக மொத்தம் 293 நபர்கள் விசைப்பம்புகள் பராமரிப்பு பயிற்சி பெற்று பராமரிப்புப் பணி செய்து வருகின்றனர்.

**ஆ. 1.2. பயிற்சி : கைப்பம்பு பராமரிப்பாளர் பயிற்சி**

**நோக்கம் :**

அ. இந்தியா மார்க் II மற்றும் ஷேலோ பம்புகளின் பாகங்களை அறிமுகம் செய்வது.

ஆ. கைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் திறமையை கிராம அளவில் வளர்ப்பது.

**காலம் :** ஐந்து நாட்கள்



**பங்கேற்போர்:** ஊராட்சியிலிருந்து பரிந்துரைக்கப் படும் (ஆண் / பெண் நபர்கள்)

**என்ன கற்றுத்தரப்படுகிறது:**

★ குடிநீர் மற்றும் சுகாதாரம்

★ கைப்பம்பின் பல்வேறு வகைகள்

★ பம்பு சிலிண்டர் பற்றிய அறிமுகம்

★ கைப்பம்பில் தரைக்கு மேல் உள்ள பகுதிகளை சரிசெய்யும் முறை

★ சிலிண்டர் மற்றும் அது சம்பந்தப்பட்ட பகுதிகளை பொருத்துதலும், சரி செய்தலும்

★ முன்னெச்சரிக்கை பராமரிப்பு நடவடிக்கைகள், பிரச்சினைகள், காரணங்கள் மற்றும் தீர்வுகள்

★ செயல்முறைப் பயிற்சி

★ கைப்பம்பில் பொதுவாக ஏற்படும் பிரச்சனை களும் அவற்றை சரிசெய்யும் முறையும்.

திட்டத்தின் மூலம் இதுவரை இவ்விரு மாவட்டங்களிலும் 166 ஆண்களும் 124 பெண்களும் ஆக மொத்தம் 290 நபர்கள் கைப்பம்பு பராமரிப்புப் பயிற்சி பெற்று கிராமங்களில் பராமரிப்புப் பணி செய்து வருகின்றனர்.



வசதிகளை முறையாக பயன்படுத்துவதுடன், முன்னெச்சரிக்கைப் பராமரிப்புப் பணியும் செய்து வருகின்றனர்.

இவை தவிர, தன் சுத்தம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு பயிற்சி, இருபாலர் சமத்துவம் (Gender Equality) விழிப்புணர்வு பயிற்சிகள் டேனிடா பணியாளர்களுக்கு தனியாகவும், கிராம ஊக்குநர்களுக்கு தனியாகவும் நடத்தப்பட்டு வருகின்றது.

ஆ.1.3. பயிற்சி : பயனாளி குழு பயிற்சி

நோக்கம்:

அ. திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்படும் குடிநீர் வசதிகளை முறையாகப் பயன்படுத்தவும், பராமரிக்கவும் பயனாளிகளை தயார்படுத்துதல்.

ஆ. சுத்தமான குடிநீர், சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் குடிநீர்க் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றின் அவசியத்தை விளக்குதல்.

காலம்: ஒரு நாள்

பயிற்சியாளர்: தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் பயனாளி குழு உறுப்பினர்

என்ன கற்றுத்தரப்படுகிறது:

- ★ ஆரோக்கிய வாழ்விற்கு குடிநீரின் பங்கு
- ★ கைப்பம்பு மற்றும் பொதுக் குழாய்களின் முறையான உபயோகம்
- ★ சுற்றுப்புற சுகாதாரம் பேணுதல்
- ★ முன்னெச்சரிக்கைப் பராமரிப்பு – செயல்முறை விளக்கம்
- ★ குடிநீர் கட்டணம் செலுத்துவதன் அவசியமும் கணக்கு பதிவு செய்தலும்

குழு உறுப்பினர்களின் கடமைகள், பொறுப்புகள்

1,593 பெண்களும் 792 ஆண்களும் ஆக மொத்தம் 2,385 பயனாளிகளைக் கொண்டு குடிநீர் பயனாளி குழுக்கள் அமைக்கப்பட்டு, இக்குழுக்கள் குடிநீர்

நிறைவாக

ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்ற சுயாட்சிகளாக திகழ வேண்டும் என்பதுவே ஊராட்சி நிர்வாகத்தின் அடிப்படையாகும். தங்களுடைய கிராமத்தின் அடிப்படை வசதிகளை தாங்களே ஏற்படுத்திக் கொள்ளும் சுயசார்பைப் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு சிறு செயலுக்கும் கூட அரசுத் துறையை எதிர்பார்த்துக் கொண்டு அவர்களை குறை சொல்வதை விட, பொதுச் சொத்துக்களை தாமே முன்வந்து பாதுகாத்து பராமரிக்க வேண்டும். இந்த நோக்கில் நாம் செயல்படுவோமேயானால் நமது நீர் ஆதாரங்களை செம்மையாக, நீண்ட காலம் பயன்தரக்கூடிய பொதுச் சொத்துக்களாக நாம் உருவாக்க முடியும்.

டேனிடா குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில், இதற்கான அடித்தளம் அமைத்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் குடிநீர் பாதுகாப்பிற்காக உருவாக்கப்படும் உள்ளூர் அமைப்புகளுக்கும், பராமரிப்புப் பணியை தொடர்ந்து கிராம அளவில் செயல்படுத்த கிராம மக்களுக்கு திறன் வளர்க்கும் பயிற்சிகளும் அளித்து வருகிறது. வருங்காலத்தில் மக்கள் பங்கேற்புடன் கூடிய குடிநீர் மேலாண்மைக்கு இவ்விரு மாவட்டங்களும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் என்பது உறுதி.

☺ ☺ ☺

# அனைத்து மக்களும் வீட்டு வசதி பெற அரசு நடவடிக்கை

மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான வீட்டுவசதியை அனைத்து மக்களும் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் தற்போது அமைந்துள்ள அரசு முனைப்போடு செயல்பட்டு வருகின்றது.

கடந்த ஆட்சியில் வாரிய வீடுகள் விற்பனை செய்வதில் போதுமான அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. 1996–ம் ஆண்டு விற்பனையாகாத வீடுகள்/மனைகள் 11,331. இது ஏப்ரல் 2001–ல் 32,387 ஆக உயர்ந்து விட்டது. 1996–ல் விற்கப்படாமல் இருந்த வீடுகள்/மனைகளின் மதிப்பு 120.07 கோடி ரூபாய். ஆனால் அது ஏப்ரல் 2001–ல் 514 கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. இதற்கான காரணம் விற்பனையில் கவனம் செலுத்தப்படாமையாகும்.

எனவே, தற்போது விற்பனையை அதிகரிக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் இராஜா முத்தையா திருமண மாளிகையில் நடைபெற்ற வீடு விற்பனைக் கண்காட்சியில் வாரியம் பங்கேற்றது. அதற்குப் பெருமளவில் பொதுமக்களிடம் வரவேற்பு இருந்தது. அதைப் போலவே புதுதில்லியில் நவம்பர் மாதம் நடைபெற்ற 'India Internal Trade Fair' –ல் வாரியம் முதன்முறையாக பங்கேற்றது. இதில் வாரிய வீடுகளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. இதுமட்டுமின்றி தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள வீடுகள் விற்பனை செய்வதற்குப் பலவழிகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பேருந்து நிலையங்கள் முதலிய பொதுமக்கள் கூடும் இடங்களில் வீடுகள் விற்பனை குறித்து விளம்பரங்கள் வைக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் விற்பனைக் கென்றே தனிக்குழுக்கள் ஒவ்வொரு கோட்டத்திலும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. வாரியத் தலைமையகத்தில் மேற்பார்வைப் பொறியாளர் ஒருவர் தலைமையில் தனியாக விற்பனைக்குழு செயல்பட்டு வருகின்றது. அக்குழு சென்னைத் துறைமுகப் பொறுப்புக்கழகம், மின்வாரியம், தென்னக இரயில்வே போன்ற அலுவலகங்களில் விற்பனைப் பெருவிழா நடத்தி பணியாளர்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. இதன் பயனாக கடந்த ஜூன் 2001 முதல், சில மத்திய அரசு நிறுவனங்களுக்கும் சில தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கும் விற்பனை செய்யப்பட்ட குடியிருப்புகள் உட்பட, இதுவரை 2,281 குடியிருப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மொத்த மதிப்பு ரூ.6141.38 இலட்சங்கள்.

கடந்த காலத்தில் அரசு விருப்புரிமையின் கீழ் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்வதில் போதிய அக்கறை செலுத்தவில்லை. அதனால் வாரியத்தின் பணம் பெருமளவில் முடக்கப்பட்டு வருவாய் இழப்பு ஏற்பட்டு விட்டது. இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தக் குறுகிய காலத்திற்குள் சுமார் 132 வீடுகளை அரசு விருப்புரிமையின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளோம். மேலும், அரசு விருப்புரிமையின் கீழ் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன என்பதை பொதுமக்கள் அறிந்து பயன்பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் அதனைப் பற்றிய விவரங்கள், அவற்றைப் பெறுவதற்குரிய தகுதிகள் ஆகியவற்றை விளம்பரம் செய்து பொதுமக்களுக்குத் தெரிவிக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு விருப்புரிமைப் பங்கில் உள்ள 2,415 வீடுகள் விரைவில் விற்பனை செய்ய இயலும்.

இதுமட்டுமல்லாமல், தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை முன்னிட்டு, சென்னையில் சில குறிப்பிட்ட திட்டப் பகுதிகளில் வீடுகள் வாங்குவோருக்கு ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி அல்லது 235 லிட்டர் இரட்டைக் கதவு குளிர்சாதனப் பெட்டி பரிசாக அளிக்கும் திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறோம். இச்சலுகை 31.1.2002 வரை அளிக்கப்பட உள்ளது.

மேலும், தமிழக அரசின் குறிக்கோளான குடும்பத்திற்கு ஒரு வீடு என்னும் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், குறைந்த வருவாய்ப் பிரிவினர் பெருமளவில் பயன்பெறும் வகையில் குடியிருப்புகளைக் குறைந்த விலையில் விரைந்து ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மதுரை வீட்டுவசதிப் பிரிவு மற்றும் மதுரை சிறப்புக் கோட்டத்தில் உள்ள வீடுகளை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பயிலும் இறுதியாண்டு பட்டப்படிப்பு/முதுகலை பட்டப்படிப்பு மாணவர்கள் மூலம் விற்பனை செய்யவும், அவர்களுக்கு போக்குவரத்து மற்றும் உணவு செலவுக்காக முன்வைப்புத் தொகையில் 2 விழுக்காடுகள் தரகுத் தொகையாக அளிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் திருவண்ணாமலை சிறைத்துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யவும், கோவை உடுமலைப்பேட்டை போக்குவரத்து தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்று, பல்வேறு நிறுவனங்களுடன், வாரியக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்வது குறித்து, ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. •

# ஆற்றங்கரைப் பிள்ளையார்

□ புதுமைப்பித்தன்

**ஊ**ழி காலத்திற்கு முன்....

'கி.மு.'க்கள் (கிறிஸ்து பிறப்பதற்கு முன்) என்ற அளவுகோல்களுக்கும் எட்டாத சரித்திரத்தின் அடிவானம்.

அப்பொழுது, நாகரிகம் என்ற நதி காட்டாறாக ஓடிக்கொண்டிருந்தது.

கரையில் ஒரு பிள்ளையார்.

ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் கற்பாறைகளும் மணற்குன்றுகளும், அடிக்கடி பிள்ளையாரை மூடி, அவரை துன்பப்படுத்திக் கொண்டிருந்தன.

ஒரு கிழவர் வந்தார்.

பிள்ளையாரின் கதியைக் கண்டு மனம் வருந்தினார். பிள்ளையாரைக் காப்பாற்ற அவருக்கு ஒரு வழி தோன்றிற்று.

'சமூகம்' என்ற ஒரு மேடையைக் கட்டி, அதன் மேல் பிள்ளையாரைக் குடியேற்றினார். அவருக்கு நிழலுக்காகவும், அவரைப் பேய் பிடியாதிருக்கவும், 'சமய தர்மம்' என்ற அரச மரத்தையும், 'ராஜ தர்மம்' என்ற வேப்ப மரத்தையும் நட்டுவைத்தார்.

வெள்ளத்தின் அமோகமான வண்டல்களினால் இரண்டு மரங்களும் செழித்தோங்கி வளர்ந்தன.

பிள்ளையாருக்கு இன்பம் என்பது என்னவென்று தெரிந்தது.

தனக்கு உதவிசெய்த பெரியாரின் ஞாபகார்த்தமாக 'மனிதன்' என்ற பெயரை தனக்குச் சூட்டிக்கொண்டார்.

இரண்டு மரங்களும் ஒன்றை ஒன்று பின்னிக்கொண்டு மிகவும் செழிப்பாக நெருங்கி வளர்ந்து, பிள்ளையாருக்கு சூரிய வெளிச்சமே பட முடியாமல் கவிந்துகொண்டன. மழை காலத்தில் எப்பொழுதும் மரங்களிலிருந்து ஈரம் சொட்டிக்கொண்டே இருந்ததினால் பிள்ளையாருக்கு நடுக்குவாதம் ஏற்பட்டுவிடும் போலிருந்தது. மேலும் கிளைகளில் பக்ஷிகள் கூடுகட்டிக்கொண்டு, பிள்ளையாரின் மேல் எல்லாம் அசுத்தப்படுத்தின.

பிள்ளையாரைப் பார்க்க வெகு பயங்கரமாக இருந்தது. அப்பொழுது இரு கிழவர்கள் வந்தனர்.

கோர உருவத்துடன் விளங்கும் பிள்ளையாரைக் கண்டதும், இருவரும் ஆற்றுக்கு ஓடி ஜலம் எடுத்துவந்து முதலில் அவரைக் குளிப்பாட்டினார்கள்.

ஒரு கிழவருக்கு ஒரு யோசனை தோன்ற, கையில் மண்வெட்டியுடன், வெகு வேகமாக ஒரு பக்கமாகச் சென்று மறைந்தார்.

மேலிருந்த அசுத்தங்கள் போனதினால் உண்டான ஒரு சந்தோஷத்தினால், பிள்ளையார் எதிரிலிருந்த கிழவருடன் பேசலானார். "என்னை முன்பின் அறியாத நீங்கள் செய்த உதவிக்கு, உங்கள் இருவருக்கும் எனதன்பைத் தவிர வேறு நான் என்ன கொடுக்க முடியும்? உங்கள் பெயரென்ன, உங்கள் நண்பர் பெயர் என்ன" என்றார்.

அதற்கு அந்தக் கிழவர் பதில் சொல்லுகிறார், "பிள்ளையாரே! கஷ்டத்திலிருப்பவருக்கு உதவி செய்பவருக்கு பிரதியுபகாரம் வேண்டுமா? அதை நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை. எனது பெயர் 'புத்தன்'; என்னுடன் வந்தவர் என் நண்பரல்ல; அவரை வழியில்தான் சந்தித்தேன். அவர் பெயர் 'ஜீனன்' என்றார்.

கிழவருக்கு பளிச்சென்று ஒரு யோசனை யுதித்தது. ஒரே பாய்ச்சலில் மரத்தின் மேல் ஏறி, பக்ஷிகள் கூடு கட்டுவதற்கு வசதியாயிருந்த கிளைகளை எல்லாம் வெட்டவாரம்பித்தார்.

இத்தனை நாட்களாக இருளிலும் நிழலிலும் இருந்துவந்த பிள்ளையாருக்கு, திடீரென்று பட்ட சூரிய கிரணங்களைத் தாங்க முடியவில்லை. மேலெல்லாம் சுட்டுக் கொப்புளிக்கவாரம்பித்தது. கண்களைத் திறக்க முடியாமல் கூசுகிறது. "நல்ல வேலை செய்கிறீர்! போதும் உமது உதவி" என்று கோபித்து, "இந்தக் கிளைகளினால்தான் உமக்கு..." என்று கிழவர் பதில் சொல்லுமுன், தனது தும்பிக்கையினால் அவரைத் தூக்கி வீசினார். கிழவர், மேடைக்கு வடகிழக்கில், வெகுதூரத்தில் போய் விழுந்தார்.

சற்று நேரத்தில் மண்வெட்டியுடன் சென்ற கிழவர்; பிள்ளையாரை அணுகி, "நான் புதிதாக மேடை ஒன்று கட்டியிருக்கிறேன். அதில் அந்தக் கஷ்டம் ஒன்று இல்லை" என்று சொல்லி அவரைத் தூக்கிக் கொண்டுபோய், தான் தயாரித்த இடத்தில் உட்காரவைத்து, "இதோ பாரும்! இதில்

மரங்களே இல்லை; உமக்கு அங்கிருந்த கஷ்டம்..." என்று சொல்லி முடிக்குமுன் அவ்விடத்திலிருந்த உஷ்ணத்தைத் தாங்க முடியாத பிள்ளையார், கண்ணை மூடிக்கொண்டு ஒரே ஓட்டமாகத் தனது பழைய மேடையில் வந்து உட்கார்ந்துகொண்டு, "உங்கள் இருவருக்கும் உதவிசெய்வது என்றால் பிறரைத் துன்பப்படுத்துவது என்ற நினைப்பா? சற்று முன்புதான், உமது நண்பன், உம்முடன் வந்தவன், எனது அருமையான மரங்களை வெட்டி உடம்பெல்லாம் கொதிக்கும்படி செய்துவிட்டான். கண்ணை மூடிக்கொண்டு சிவனே என்றிருந்த என்னை, நீர் வெகு புத்திசாலித்தனமாக கட்டிவிட்ட உமது மொட்டை மேடையில் போட்டுப் பொசுக்கி விட்டீரே. போதும் உமது உதவி. நீர் சும்மா இருந்தால் போதும்" என்று சொல்லிவிட்டுக் கோபத்துடன் கண்களை மூடிக்கொண்டு இருந்தார்.

பிள்ளையாரின் மனநிலையைக் கண்ட கிழவர், பெரிதும் ஏமாற்றமடைந்து, தானே அந்த மேடையில் உட்கார்ந்து தனது உயிரை விட்டார்.

வெட்டிவிட்டதனால் கிளைகள் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக வளர்ந்தன. தாழ்ந்தும் கவிந்தும் வளர்ந்த அரச மரத்தின் இரண்டு கிளைகளுக்கிடையில் பிள்ளையாரின் தலையகப்பட்டுக் கொண்டது. வேப்ப மரத்தின் வேர் ஒன்று



பிள்ளையாரின் வயிற்றைச் சுற்றி வளர்ந்தது. பிள்ளையாரின் கால்களில் அரச மரத்தின் இரண்டு வேர்கள் இறுக்கி பின்னிக்கொண்டன.

பிள்ளையார் இரண்டு மரங்களுக்குள் சிறைப்பட்டார்.

காற்றடிக்கும் பொழுதெல்லாம் பிள்ளையாருக்குத் தலை போய்விடும் போல் இருந்தது. வயிற்றைச் சுற்றிய வேரோ - அதன் வேதனை சகிக்க முடியவில்லை. கால்களும் சிறைப்பட்டதினால் ஓடவோ முடியாது.

பிள்ளையாருக்கு நரகம் எப்படியிருக்கும் என்று சற்றுத் தெரிந்தது.

பல காலம் சென்றது...வடமேற்கு கணவாய்களில் பெய்த அமோகமான மழையினால் நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. கணவாயில் ஒரு சிறு ரோஜாத் தோட்டம் போட்டு வசித்து வந்த கைலி கட்டிய ஒரு தாடிக் கிழவனையும் குடிசை தோட்டத்துடன் அடித்துக் கொண்டு வந்தது.

வெள்ளத்தின் வேகத்தினால் அரச மரம் சாய்ந்தது. வேப்ப மரம் அடியோடு விழுந்து வேர் மாத்திரம் பிடித்திருந்ததினால் தண்ணீரில் மிதந்து ஆடிக்கொண்டிருந்தது. பிள்ளையாருக்கு ஓடவும் முடியவில்லை; ஓடவும் பயம்.

பிள்ளையாரின் துன்பத்திற்கு ஓர் எல்லையில்லை; நீக்க ஓர் வழியுமில்லை.

வெள்ளத்தில் உருண்டுவந்த தாடிக் கிழவன் வேப்ப மரத்தின் கிளைகளை எட்டிப் பிடித்து மேடையில் தொத்திக் கொண்டான். வெள்ளம் வற்றியது.

தாடிக் கிழவன் வேப்ப மரத்து நிழலுக்கு ஆசைப்பட்டு அதைத் தூக்கி நிறுத்தினான். வெள்ளத்தில் ஒதுங்கிய ஒரு செத்த பசுமாட்டின் தோலையுரித்து, அதன் மாமிசத்தை வேப்ப மரத்திற்கு உரமாக இட்டான். தன்னுடன் வெள்ளத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு ரோஜாச் செடியை எடுத்து மீதியிருந்த மாமிச எருவையிட்டு, வேப்ப மரத்திற்கும் அரச மரத்திற்கும் இடையில் நட்டுவைத்தான். மாட்டின் தோலை வைத்து வேப்ப மரத்தடியில் ஒரு குடிசை கட்டிக் கொண்டு தன் இடையில் சொருகி இருந்த உடைவாளை வேப்ப மரத்தில் மாட்டிவிட்டு சந்தோஷமாக இருக்கவாரம்பித்தான்.

ரோஜாச் செடி, உரத்தின் மகிமையால் நன்றாகச் செழித்து வளர்ந்தது. நல்ல வாசனையுள்ள புஷ்பங்களுடன் நீண்ட முட்களும் நிறைந்திருந்தன.

பிள்ளையாரின் கஷ்டத்தைக் கவனிக்க யாருமில்லை.

அப்பொழுது மூவர் ஒருவர் பின் ஒருவராய் வந்தனர். அவர்களுக்கு சங்கரன், ராமனுஜன், மத்வன் என்று பெயர்.

முதலில் வந்தவர் பிள்ளையார் தலையை விடுவிக்க முயன்றார். வெகு கஷ்டப்பட்டு சிறிது விலக்க முடிந்தது. வயிற்றைச் சுற்றிய வேரை சிறிதும் அசைக்க முடியாது என்று கண்டு, தலையை விடுவித்த சந்தோஷத்தில் போய்விட்டார். அவர் பின் வந்த இரு கிழவர்களும் அரச மரத்தை முதலில் இருந்த மாதிரி தூக்கி நிறுத்த யத்தனித்தார்கள். முடியவில்லை. பெரிய மரத்தைத் தூக்க இருவரால் முடியுமா? அதிலும் கிழவர்கள், அரச மரம் கோணிக்கொண்டு தான் நின்றது. முன்பும் இப்படித்தான் இருந்திருக்கும் என்று நினைத்து சந்தோஷப்பட்டுக் கொண்டு சென்று விட்டார்கள்.

விலகியிருந்த அரச மரத்தின் கிளைகள் மறுபடியும் கவிந்து பிள்ளையாரின் கழுத்தை இறுக்கவாரம்பித்தன. அருமைத் தொந்தியைச் சுற்றிய, மாமிச உரம் பெற்ற வேப்ப மரத்தின் வேர்களோ பிள்ளையாரை அசையவிடாமல் நெருக்கின.

ரோஜா புஷ்பங்களின் வாசனையை நன்றாக அனுபவித்தாலும், முட்களை எப்படி விலக்குவது? குத்திக்குத்தி அந்தப் பக்கம் பூராவாகவும் சீழ் வந்தது.

போதாததற்கு கைலிக் கிழவன், தனக்கு பொழுது போகாத நேரங்களில் தனது உடைவாளை எடுத்து பிள்ளையாரின் ஒற்றைக் கொம்பில் தீட்டவாரம்பித்துவிடுவான்.

மேடையின் மீது அரசங் கன்றுகளும் வேப்பங் கன்றுகளும், வேறு புல் பூண்டுகளும் முளைக்க ஆரம்பித்துவிட்டன.

சில காலம் சென்றது.

ஒரு நாள் இரவு, மேற்கு சமுத்திரத்தின் அடிப்பாகத்தில் ஒரு பெரிய பூகம்பம் ஏற்பட்டதினால் கடல் ஜலம் நதிக்குள் எதிர்த்துப் பாய்ந்தது. பிள்ளையார் இருந்த மேடையின் பக்கம் புயற்காற்றும் மழையும் சண்டமாருதமாக அடித்ததினால், ஆறும் பெருக்கெடுத்து கடல் ஜலத்தை எதிர்த்தது.

பேய் போல ஆடிக்கொண்டிருந்த மரங்களும் மறுபடி விழுந்துவிட்டன. அரச மரம் பிள்ளையார் முதுகின் மேல் சாய்ந்துவிட்டது. வலுவற்ற வேப்ப மரம் முன்போல், பிள்ளையாரின் வயிற்றைச் சுற்றியிருந்த வேரின் உதவியால், மேடையிலிருந்து கொண்டு தண்ணீரில் ஆடிக்கொண்டு இருந்தது.

கைலிக் கிழவனை குடிசையுடன் அடித்துக் கொண்டு போய்விட்டதால், காற்றுக்கு வளைந்து கொடுத்து மறுபடியும் தலை நிமிர்ந்த ரோஜாச் செடியைத் தவிர அவனுடைய ஞாபகர்த்தமாக வேறு ஒன்றுமில்லை.

பிள்ளையாருக்கு நரகவேதனை பொறுக்க முடியவில்லை. இந்த மூன்று பிணிகளும் பாசக்கயிறு போல் அவரைத் துன்புறுத்தின.

சமுத்திரத்தின் நடுவில் ஒரு சிறு படகில் சென்று கொண்டிருந்த ஒருவனைக் கடல் நீர் படகுடன் ஆற்றுக்குள் அடித்துக் கொண்டு வந்ததினால், அந்தப் படகும் இந்தப் பிள்ளையாரின் மேடையை அணுகிற்று. படகினுள் இருந்தவன் பிள்ளையாரின் காலைப் பிடித்துக் கொண்டு மேடையில் தொத்திக் கொண்டான். பிறகு படகையும் மேடையில் இழுத்துப் போட்டுக் கொண்டான்.

வந்தவனுடைய உடம்பு மிகுந்த வெண்மையாகவும் தலைமயிர் உருக்கி வார்த்த தங்கக் கம்பிகள் மாதிரி பொன்னிறமாக பிரகாசித்தது. அவனது நீண்ட தாடி பொன்னிறமான ஆபரணம் போல் அவன் மார்பை அலங்கரித்தது. அவன் நீண்ட அங்கியும், கணுக்கால் வரை வரும் தோல் பாதரட்சையும் அணிந்திருந்தான். அவனது வலது கையில் கருப்புத் தோல் அட்டை போட்ட ஒரு பெரிய புத்தகமும், ஒரு நீண்ட சிலுவையும் இருந்தன.

இவனுக்கும் வேப்ப மரத்தின் மகிமை நன்றாகத் தெரியுமாகையால் உடனே அதைத் தூக்கி நிறுத்தி, அதன் அடியில் தனது படகைக் கவிழ்த்துப் போட்டு அதனடியில் படுத்து உறங்கினான்.

அவன் தனக்கு உணவுக்காக வைத்திருந்த ரொட்டித் துண்டுகளைப் பிள்ளையார் முன் வைத்துவிட்டு உறங்கியதினால், பசியின் கொடுமை மிகுந்த அவர், அவைகளை எடுத்து காலி செய்யவாரம்பித்தார். கொழுக்கட்டை தின்று பழகிய பிள்ளையாருக்கு இது தேவாமிருதமாக இருந்தது. பசி நீங்கிய பிள்ளையார் வலியின் கொடுமையைத் தாங்க முடியாமல் அப்படியே உறங்கிவிட்டார்.

மறுநாள் விடிந்தது.

பிள்ளையார் இருந்த மேடைப்பக்கம் அதிக உஷ்ணமான பூமியாகையால், புதிதாக வந்தவன் தனது நீண்ட அங்கியில் தனது புத்தகத்தையும், சிலுவையையும் கட்டி, வேப்ப மரத்தின் கிளைகளில் தொங்கவிட்டு விட்டு, ஒரு சிறிய சல்லடத்தை மாத்திரம் அணிந்து கொண்டு கவிந்துகிடந்த படகின் மேல் உட்கார்ந்து, வேப்பங் காற்றையனுபவித்துக் கொண்டு இருந்தான். பொழுது போக்குக்காக கையில் இருந்த உடைவாளைச் சுழற்றி விளையாடிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது பல கிழவர்கள் வந்தார்கள்.

மேடையையும் பிள்ளையாரையும் அரச மரத்தையும் கண்டவுடன் பீதியடித்துப் போய்விட்டார்கள்.

சிலர் அரச மரத்தைத் தூக்கி நிறுத்த முயன்றார்கள்.

சிலர் பிள்ளையாரின் கழுத்தை விடுவிக்க முயன்றார்கள்.

சிலர் பிள்ளையாரின் வயிற்றை விடுவிக்க முயன்றார்கள்.

சிலர் மேடையை சீர்படுத்தினார்கள்.

ஒவ்வொருவர் செய்வதும் மற்றவர்களுக்குத் தடையாக இருந்தது.

பிள்ளையாரின் வயிற்றைச் சுற்றிய வேப்ப மர வேரையறுக்கப் போனால், புதிதாக வந்தவன் வாளை ஓங்குகிறான்.

அரச மரத்தின் கிளைகளை வெட்டப்போனால், பிள்ளையாரின் உதவியால் மரம் நிற்கிறது. அதை வெட்டிவிட்டால் மரமே விழுந்துவிடும். இது ஆராய்ச்சி செய்யவேண்டிய விஷயம், சற்றுப் பொறுத்துச் செய்யுங்கள் என்றார்கள்.

சிலர் மரங்களையே எடுத்துவிட்டால் நல்லது என்று நெருங்கினார்கள்.

இரைச்சல் அதிகமாகிறது.

மரத்திற்கு பிள்ளையாரா, பிள்ளையாருக்கு மரமா என்ற பெரிய தர்க்கம்.

ஆத்திரமுள்ளவர்கள் அரச மரத்தையும் வேப்ப மரத்தையும் அழித்துவிட பதைத்து நெருங்கினார்கள்.

உறங்கிக் கொண்டிருந்த பிள்ளையார் ஒரு அற்புதமான கனவு காண்கிறார். தான் பெரியதாக வளர்வது போல் தெரிகிறது. முகத்தில் புன்சிரிப்பு தோன்றுகிறது. தும்பிக்கை சற்று அசைகிறது.

விசுவரூபமா?

பிள்ளையார் விடுவிக்கப்படுவாரா?

அல்லது அவர் கனவு நனவாகி, விடுவித்துக் கொள்ளுவாரா?

*நன்றி:*
புதுமைப்பித்தன் கதைகள் நூலிலிருந்து

*வெளியீடு:*
காலச்சுவடு பதிப்பகம்
669, கே.பி.சாலை,
நாகர்கோவில் 629 001.

• • •

# தமிழக அரசின் விருது வழங்கும் விழா

தமிழக அரசின் சார்பில் பெரியார் விருது, அம்பேத்கர் விருது, திரு.வி.க. விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது,கி.ஆ.பெ. விருது வழங்கும் விழா 26.12.2001 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.திருநாவுக்கரசு அவர்களின் வரவேற்பு உரையுடன் தொடங்கிய இவ்விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் சான்றோர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். முதலமைச்சர் தனது உரையில்...

''நாட்டுக்கும், மொழிக்கும் உழைத்த நல்லோர் பெயரால் அமைந்த விருதுகளை வழங்குகின்ற இந்த விழாவில் இன்று கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழா பெரிய விழா மட்டுமல்ல, பெருமைக்குரிய விழாவுமாகும்.

தமிழக அரசின் சார்பில், ஒரே நேரத்தில் 6 பெரும் விருதுகளை வழங்குகின்ற விழா, இந்த விழா. இந்த மண்ணில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்தால், எழுத்தால், சொல்லால், செயலால் பாடுபட்ட செம்மல்களின் பெயர்களால் இந்த விருதுகள் அமைந்திருக்கின்றன.



முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது, தமிழ்த்தாயின் தனிப்பெரும் சொத்தாக விளங்குகின்ற மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் கா.காளிமுத்துக்கு வழங்கப் பட்டிருக்கிறது.

செயற்கரிய செய்வார் பெரியோர் என்று திருக்குறள் கூறுகிறது. அந்த வள்ளுவத்தின் வாக்கிற்கிணங்க பிறரால் செய்ய இயலாத செயற்கரிய செயல்களைச் செய்து முடித்தவர் தந்தை பெரியார்.

அப்படிப்பட்ட தந்தை பெரியார் அவர்களின் திருப்பெயரால் அமைக்கப்பட்டதுதான் பெரியார் விருது. பெரியார் விருதினைப் பெறுபவர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள்.

இன்று வழங்கப்பட்டிருக்கின்ற இன்னொரு விருது டாக்டர் அம்பேத்கர் விருதாகும். இந்தியத் திருநாட்டின் அரசியல் சட்டத்தை உருவாக்கியவர் டாக்டர் அம்பேத்கர். தான் பெற்ற கல்வியையும் தனது பேரறிவையும் தாழ்த்தப்பட்ட மக்களின் மீட்புக்காக பயன்படுத்தி அவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர் அண்ணல் அம்பேத்கர். அவர் பெயரால் அமைந்த விருதினைப் பெறுகின்ற பெருமைக்குரியவர் டாக்டர் வை.பாலசுந்தரம்.

பாரதியார் அரசியல் விடுதலைக்குப் பாடுபட்டவர் என்றால் அவரைப் பின்பற்றிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசனை சமூக விடுதலைக்கவிஞர் என்று சொல்லலாம். இப்படிப் பொதுமைப்படுத்தி சொல்லும் போது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் தமிழ் உணர்வை நாம் மறந்துவிட இயலாது.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பெயரால் அமைந்திருக்கும் தமிழக அரசின் விருதை இந்த ஆண்டு பெற்றிருப்பவர் கவிஞர் மணி மொழி.

தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரம் திருப்பெயரால் திரு.வி.க.விருதை தமிழக அரசு வழங்கி வருகிறது. பல துறைகளிலும் சிறப்பு பெற்ற பைந்தமிழ் அறிஞர் திரு.வி.க. ஆவார்கள்.

திரு.வி.க. விருதை இந்த ஆண்டு பெறுகிற சிறப்புக்குரியவர் பேராசிரியர் முனைவர் ப.இராமன்.

சுப்பிரமணிய பாரதியின் பெயரைச் சொன்னாலே சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென்று ஏறும் என்று சொல்வார்கள். பாட்டுக்கொரு புலவன், தேசியக்கவி, மகாகவி என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப்படுகின்ற கவிஞர் பாரதியார் ஆவார்.

பாரதியாரின் பெயரால் தமிழக அரசு வழங்கும் விருதை இந்த ஆண்டு பெறுபவர் பெ.சு.மணி'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு நிதி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று விருது பெறுவோரின் சிறப்பியல் புகளைப் புகழ்ந்துரைத்தார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.தம்பிதுரை, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு டி.ஜெயக்குமார், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி பா.வளர்மதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு வீ.சுப்பிரமணியன், மாண்புமிகு பால்வளம் மற்றும் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.சி.சண்முகவேலு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இறுதியாக விருது பெற்ற அனைவரும் ஏற்புரையாற்றினார்கள். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் தமது ஏற்புரையில் தமிழின் இனிமையையும் சிறப்பினையும் எடுத்துரைத்தார். தமிழ் – மழை, ஓடை, ஆறு, அருவி போல பல ஓசை நயங்களை உடையது. அத்தகைய அருந்தமிழைக் காக்க வேண்டும் என்று கூறினார்.

செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திரு.வ. ராமதாஸ், இ.ஆ.ப. அவர்களின் நன்றியுரையுடன் விழா நிகழ்ச்சிகள் இனிதே நிறைவடைந்தன.



## முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விருது - 2001
## டாக்டர் கா. காளிமுத்து

**கொ**ட்டும் தமிழருவி – கொள்கைக் குன்று – பாண்டிநாட்டு முத்து – பைந்தமிழின் சொத்து, அவர்தாம் கா.காளிமுத்து எனப் பார்புகழும் பண்பாளர். இந்த விருதுநகர் மாவட்ட வித்தகருக்கு இன்று விருது வழங்கப்படுகிறது. இவர் 14–7–1942இல் இராமுத்தேவன்பட்டியில் பிறந்தவர். தாய் திருமதி வெள்ளையம்மாள். தந்தை திரு.காளிமுத்து. இவர் தமிழில் முதுநிலை பயின்றவர்; முனைவர் பட்டம் பெற்றவர்.

1971இல் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்; 1977, 1980, 1984ஆம் ஆண்டுகளில் அமைச்சர்; 1989இல் சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர்; 1996இல் தமிழ் வளர்ச்சி– பண்பாட்டுத்துறைச் சிறப்பு ஆணையர்; தற்போது தமிழகச் சட்டப்பேரவையின் தலைவர்.

சோவியத் ஒன்றியம், கிழக்கு ஜெர்மனி, அரபு நாடுகள் ஆகியவை இவரது வெற்றிப்பயண வெளிநாடுகள்.

இவர் மேடை ஏறியதோ பதின்மூன்று வயதில்; இந்தி எதிர்ப்பு இருபத்து மூன்று வயதில்; கொடுமை களுக்குள்ளான சிறைக் கோட்டங்களோ மதுரை, திருச்சி, பாளையங்கோட்டைச் சிறைகள்.

படிக்கும்போதே பேச்சுப் போட்டியில் பல்கலைக்கழகப் பரிசு பெற்ற இவர், அரங்கேறினால் போதும் அணிகள் அணி திரளும்; உவமைகள் ஓடிவரும். ஒருமுறை ‘சொல்லுதல்’ என்ற சொல்லுக்கு மட்டும் நாற்பதுக்கும் மேற்பட்ட சொற்களை இந்த நாவரசர் நவின்றபோதுதான் அகராதிகளுக்கே அதன் அர்த்தம் புரிந்தது. இந்தச் சொல்லின் செல்வருக்குச் சூட்டிய பட்டங்களோ மேடைமணி, நாவேந்தர், நாவுக்கரசு, தமிழவேள் என்பனவாம்.

நெருப்பு இதழின் ஆசிரியராக இருந்த இவர் எழுதிய நூல்கள் ஏராளம். டாக்டர் எம்.ஜி.ஆர். நடித்த ‘இன்று போல் என்றும் வாழ்க’ என்ற திரைப்படத்திற்குத் திரைக்கதை, வசனம் தீட்டியவர். ‘கண்ணுக்கு மை எழுது’ முதலான படங்களின் பாடலாசிரியர்.

தாயை வணங்கித் தமிழ்ப் பணியாற்றுகிற முத்தமிழ் வித்தகராம் முனைவர் கா.காளிமுத்து அவர்களின் தமிழ்ப் பணியைத் தமிழக அரசு பாராட்டுகிறது. ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் கொண்ட 2001ஆம் ஆண்டுக்கான முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருதினை வழங்கி இவரைத் தமிழக அரசு சிறப்பித்தது.

★ ★ ★

# தந்தை பெரியார் சமூக நீதி விருது - 2001

## புலவர் புலமைப்பித்தன்

கோவை மாவட்டத்திலுள்ள பள்ளபாளையம் என்ற சிற்றூரில் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் 6.10.1935இல் பிறந்தார். தாய் திருமதி. தெய்வானையம்மாள். தந்தை திரு. கருப்பண்ணத் தேவர்.

தந்தை பெரியாரின் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு 1948 சனவரித் திங்கள் 14ஆம் நாள் நாவலர் இரா. நெடுஞ்செழியன் உரை கேட்டு கறுப்புச் சட்டை அணியத் தொடங்கி பின்னர் தொடர்ந்து பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் அவரது இயக்கத்தில் பணியாற்றினார். தாழ்த்தப்பட்ட இனத்தவர்களை உணவு விடுதிகளுக்குள் அனுமதிக்கப்படாத நிலையினை எதிர்த்து, கோவை மாவட்டத்திலுள்ள ஒண்டிப்புதூரில் 1954ஆம் ஆண்டு சனவரி 14ஆம் நாள் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களை உணவு விடுதிக்குள் அழைத்துச் சென்று அமர வைத்து உணவு பரிமாற வைத்ததோடல்லாமல், தானே அந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றார்.




'புரட்சிப் பூக்கள்', 'புரட்சித்தீ' கவிதை நூல்களையும் 'நினைவுகளின் ஊர்வலம்', 'நெருப்புப் பொறிகள்' போன்ற உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். கலைமாமணி விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது மற்றும் சிறந்த பாடலாசிரியருக்கான விருதுகளைப் பெற்றுள்ளார்.

சட்டமேலவை உறுப்பினராகவும் சட்ட மேலவைத் தலைவராகவும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். தமிழ்நாடு அரசவைக் கவிஞராகவும் அறிவிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டார். 1981ஆம் ஆண்டில் ஃபிஜித் தீவில் நிகழ்ந்த காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் கலந்து கொண்டுள்ளார்.

தந்தை பெரியார் அவர்களின் வழி நின்று, சமூக நீதிக்காக அயராது பாடுபட்டு வரும் புலவர் புலமைப்பித்தன் அவர்களின் சமூக நீதிப் பணிகளைப் பாராட்டிப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் கொண்ட 2001ஆம் ஆண்டின் தந்தை பெரியார் சமூக நீதி விருது வழங்கப்பட்டது.

★ ★ ★



## டாக்டர் அம்பேத்கர் விருது - 2001

## டாக்டர் வை. பாலசுந்தரம்

டாக்டர் வை. பாலசுந்தரம் அவர்கள் 13-4-1942இல் சென்னை தியாகராயநகரில் பிறந்தார். தாய் திருமதி அமராவதி. தந்தை திரு. வைத்திலிங்கம். பள்ளி இறுதிவரை படித்த இவர் 1968இல் சென்னை, மாநகராட்சி கவுன்சிலராகவும், 1969-70இல் சென்னை மேயராகவும், 1971 முதல் 1975 வரை அச்சரப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் பதவிகளை வகித்துள்ளார்.

1974இல் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது டாக்டர் அம்பேத்கர் படங்கள் சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமென்று கோரிக்கையை வைத்து, அதற்கிணங்க "அண்ணல் அம்பேத்கர்'' படம் சட்டமன்றத்தில் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்து அரசு அலுவலகங்களிலும் ''அம்பேத்கர்'' படம் வைத்திட அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அம்பேத்கர் மக்கள் இயக்கத்தின் சார்பில் இரவுப் பாடசாலைகள் மற்றும் சமூகத் தொண்டு நிறுவனங்களைச் செயல்படுத்தினார். உயர்நீதி மன்றத்திலும், உச்சநீதி மன்றத்திலும் அம்பேத்கர் மக்கள் இயக்கத்தின் சார்பில் வழக்குத் தொடர்ந்து ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கும், பெண்களுக்கும் இடஒதுக்கீடு வழங்கும் நகர்பாலிகா சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட தூண்டுகோலாக இருந்தவர். மேலும் ஆதிதிராவிடர் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்கொடுமைகளை எதிர்த்துப் பல போராட்டங்கள் நடத்தியுள்ளார். இவரது சமூக பணிகளைப் பாராட்டி பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இவர் ஆற்றி வரும் சமூக சேவையைப் பாராட்டி அமெரிக்காவிலுள்ள "டக்சன் அரிசோனா'' உலக பல்கலைக்கழகம் 1985இல் டாக்டர் பட்டம் வழங்கியது.

ஏழை மக்களுக்காக, குறிப்பாக ஆதிதிராவிடர் மக்களுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் பாடுபட்டு வரும் டாக்டர் வை. பாலசுந்தரம் அவர்களை பாராட்டிப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் கொண்ட 2001ஆம் ஆண்டின் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டது. ★




## பாவேந்தர் பாரதிதாசன் விருது - 2001
## கவிஞர் மணிமொழி

கவிஞர் மணிமொழி அவர்கள் பெங்களூரில் 4.7.1942இல் பிறந்தவர். தாய் திருமதி ஜெயலட்சுமி. தந்தை திரு. குருசாமி. இவருடைய சொந்த ஊர் வேலூர். தற்போது சென்னையில் வசித்து வருகிறார். இவர் பச்சையப்பன் கல்லூரிப் பள்ளியில் பயிலும் போதே பேரறிஞர் அண்ணா அவர்களை பள்ளிக்கு அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தவர் ஆவார். மாணவப் பருவத்தில் இருந்தபோதே பல நூல்களை எழுதியவர். பத்திரிகைத் துறையில் துணையாசிரியராகவும், கூட்டாசிரியராகவும், ஆசிரியராகவும் இருந்த கவிஞர் மணிமொழி தற்போது 'பாரதிதாசன் கவிதா மண்டலம்' என்னும் திங்கள் இதழை வெளியிட்டு வருகிறார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பேரறிஞர் அண்ணா அறக்கட்டளையின் சார்பாகப் 'பேரறிஞர் அண்ணா பவள விழா மலர்' உருவாக்கும் பணியில் உறுதுணை புரிந்தமைக்காகப் பாராட்டப் பெற்றவர்.

கவிஞர் மணிமொழி, 'பெரியார் ஒரு சகாப்தம்' 'தமிழ்மேல் ஆணை', ஆகிய நாடகங்களையும் 'பாரதிதாசனின் புரட்சிக் கவி' நாட்டிய நாடகத்தையும் எழுதியவர், 'பாரதியின் பெண்மணியம்', 'கவரிமான்', 'அண்ணாவின் பொன் மொழிகள்', 'குறள் இன்பம்' உள்ளிட்ட 50 நூல்களையும் எழுதியவர்.

பாவேந்தர் பாரதிதாசன் புகழ்பரப்பும் கவிஞர், இதழாசிரியர், எழுத்தாளர், பேச்சாளர், நாடகக் கலைவல்லார் எனத் தமிழுக்குத் தொண்டாற்றும் கவிஞர் மணிமொழி அவர்களின் தமிழ்ப் பணிகளைப் பாராட்டிப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு இலட்சம் ரூபாயும் ஒரு சவரன் தங்கப்பதக்கமும் கொண்ட 2001ஆம் ஆண்டின் பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கப்பட்டது.

* * *

# தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது - 2001

## பேராசிரியர் முனைவர் ப. இராமன்

பேராசிரியர் முனைவர் ப. இராமன் அவர்கள் மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம், தி. கொக்குளம் எனும் ஊரில் 15.7.1930இல் பிறந்தவர். தாய் திருமதி அழகம்மாள். தந்தை திரு. பகவதி. பிறந்த ஊரிலேயே ஐந்தாம் வகுப்பு வரை பயின்றவர். பின்னர் சென்னையில் இராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்லத்தில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தவர்.

தமிழ்மொழி வழிக் கல்வி கற்பதே சிறப்பு என்ற தலைப்பில் சென்னை மாகாண அளவில் நடத்தப்பெற்ற கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர். கட்டுரைப் போட்டியில் வென்றமைக்காக அக்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில் ஆளுநராக இருந்த சர். ஆர்தர் ஹோப் அவர்களிடம் 'திரு.வி.க. அவர்களின் "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்ற நூலைப் பரிசாகப் பெற்றவர்.

பேராசிரியர் முனைவர் ப. இராமன் அவர்கள் சென்னை விவேகானந்தா கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் திரு.வி.க. அவர்களின் திருவுருவப்படத்தைக் கல்லூரியில் திறந்து வைத்து அவருடைய பிறந்தநாளை ஆண்டுதோறும் கொண்டாடி, மாணவர்களிடம் திரு.வி.க. அவர்களின் சிந்தனைகள் வளர அயராது தொண்டாற்றியவர். மேலும் திரு.வி.க. வழியில், சமயத் தொண்டாற்ற, பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும் நூற்றெட்டு உபநிடதங்களையும் கற்றவர். திரு.வி.க. அவர்களால் 1903ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவப்பட்ட "ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபை"யில் ஆயுள் உறுப்பினராகவும், செயற்குழு உறுப்பினராகவும் இருந்து திரு.வி.க. நெறியில் தொண்டாற்றி வருபவர். தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற பல்வேறு ஆன்மீக மாநாடுகளிலும், பெருந்திரள் கூட்டங்களிலும் பங்கேற்றுச் சொற்பொழிவுகளும், ஆய்வுக் கட்டுரைகளும் வழங்கியவர். 1960ஆம் ஆண்டில் 'தமிழிலக்கிய வரலாறு' எனும் நூலை வெளியிட்டதோடு பல்வேறு இதழ்களுக்கு சிறப்பாசிரியராகப் பணிபுரிந்தவர்.



திரு.வி.க. அவர்களின் வழிநின்று, அரை நூற்றாண்டு காலமாகத் தமிழுக்கும், சமயத்திற்கும் அயராது தொண்டாற்றிவரும் பேராசிரியர் முனைவர் ப. இராமன் அவர்களின் தமிழ்ப் பணிகளைப் பாராட்டிப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் கொண்ட 2001ஆம் ஆண்டின் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது வழங்கப்பட்டது ★



# மகாகவி பாரதியார் விருது - 2001
## திரு. பெ.சு.மணி

திரு. பெ.சு. மணி என்னும் பெண்ணாத்தூர் சுந்தரேசன் மணி 2.11.1933இல் திருவண்ணாமலையில் பிறந்தார். தாய் திருமதி. சேதுலட்சுமி. தந்தை திரு. சுந்தரேசன். பள்ளியிறுதி வகுப்புவரை பயின்றவர். தமிழ்ப் புலமையுடன் ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளையும் நன்கறிந்தவர் ஆவார். சென்னை விமான அஞ்சல் பிரிப்பகத்தில் அஞ்சல் பகுப்பாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

1973ஆம் ஆண்டில் "இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்'' எனும் இவரது முதல் நூல் வெளிவந்தது. தொடர்ந்து தமிழிலக்கியம், பண்பாடு, மொழிபெயர்ப்பு, ஆன்மீகம், சமூகச் சீர்திருத்தம், தேசியம் என திரு. பெ.சு. மணி இதுவரை நாற்பது நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் 'வீரமுரசு சுப்பிரமணிய சிவா', 'பத்திரிகையாளர் பாரதியார், 'இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ்நாடும்' எனும் மூன்று நூல்கள் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றவை. மதுரை உலகத் தமிழ் மாநாட்டின் மொழிபெயர்ப்பு வல்லுநர் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு அரசின் பாரதி நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. பெ.சு. மணி அவர்கள் எழுதியுள்ள நாற்பது நூல்களுள் பதினான்கு நூல்கள் பாரதியாரைப் பற்றியவை. 'பாரதியாரும் இராமகிருஷ்ணர் இயக்கமும்', 'பாரதியாரும் சமூக சீர்திருத்தமும்', 'பத்திரிகையாளர் பாரதியார்', 'பாரதியார் எழுத்துகள் – சில புதிய கண்டுபிடிப்புகள்', 'தமிழ்ப்புலவர் மரபும் – பாரதி மரபும்', 'பாரதியியல் ஆய்வுக் கட்டுரைகள்' என்பன பாரதி பற்றிய இவர்தம் நூல்களுள் சில.

தமது சொற்பொழிவுகளால் ஆய்வுக் கட்டுரைகளால், நூல் வெளியீடுகளால், பாரதியின் புகழ் பரப்பும் பணிகளை ஆற்றிவரும் திரு. பெ.சு. மணி அவர்களை பாராட்டிப் போற்றும் வகையில் இவருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் கொண்ட 2001ஆம் ஆண்டின் பாரதியார் விருது வழங்கப்பட்டது. ★

# இஞ்சி சாகுபடி

தொன்று தொட்டு இந்தியாவில் சாகுபடி செய்யப்பட்டு வரும் பலவித வாசனைப் பயிர்களில் தென்கிழக்கு ஆசியாவைத் தாயகமாகக் கொண்ட இஞ்சியும் ஒன்றாகும்.



நமது அன்றாடச் சமையலில் பயன்படும் இஞ்சியானது, மிக சிறந்த செரிமானத்திற்கு மருத்துவ குணத்தைக் கொண்டுள்ள, முக்கிய வாசனைப் பொருளாக சங்ககாலம் தொட்டு இன்றுவரை விளங்கி வருகின்றது. உலக இஞ்சி உற்பத்தியில் எழுபது விழுக்காட்டிற்கும் அதிகமாக உற்பத்தி செய்து இந்தியா முதலிடம் வகிக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவினின்று 5,000 டன் இஞ்சி ஏற்றுமதியாகி ஏறத்தாழ 20 கோடி ரூபாய் அந்நிய செலவாணியை நமக்கு ஈட்டித்தருகின்றது. இந்தியாவில் இஞ்சியானது ஹிமாச்சலப் பிரதேசம், ஒரிஸ்ஸா, கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பயிராகிறது.

**மண்**

இஞ்சி நல்ல வடிகால் வசதியுள்ளதும், உலர் தன்மையுள்ளதுமான மணல் மற்றும் குறுமண் பாங்கான தாவர மட்கு நிறைந்த நிலங்களில் நன்கு வளரும். நீர் தேங்காத மற்றும் அங்ககச்சத்து மிகுந்த வளமான மண் நிறைந்த பகுதி, இதன் சாகுபடிக்கு மிகவும் ஏற்றதாகும். மண்ணின் கார அமில நிலை 6 முதல் 7.5 வரை இஞ்சி சாகுபடிக்கு மிகவும் ஏற்றது.

**காலநிலை மற்றும் பருவம்**

கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,500 மீட்டர் உயரம் வரை, இஞ்சியைப் பயிரிடலாம். இதனை இறவை மற்றும் மானாவாரி நிலங்களிலும் பயிர் செய்யலாம். மானாவாரிப் பயிராக, மேற்குத் தொடர்ச்சி மலைகளின் முன் பருவகால மழை தொடங்கும் காலத்தில் (மே ) பயிரிடப்படுகிறது. அதிக மகசூலுக்கு முளைப்பின்போது மிதமழையும், வளரும் பருவத்தில் தகுந்த இடைவெளியில் நல்ல மழையும், அறுவடைக்கு முன் ஒருமாதம் வறண்ட காலநிலையும் அவசியமானதாகும்.

**இரகங்கள்**

இஞ்சியில் இரகங்களை, அவை பெருமளவில் பயிரிடப்படும் இடங்களின் பெயரால் அழைக்கின்றனர். மாறன், நாடன், கருப்பம்படி, வயநாடு லோக்கல் மற்றும் ரியோடி ஜெனிரா (வெளிநாட்டினின்று அறிமுகம் செய்யப்பட்டது) ஆகிய ரகங்கள்தான் பெருமளவில் சாகுபடியில் உள்ளன. சுரவி, சுருச்சி மற்றும் ஐ.ஐ.எஸ்.ஆர். வரதா போன்ற உயர்விளைச்சல் வெளியீடு செய்யப்பட்ட ரகங்களும் உண்டு.

**விதையளவு**

இஞ்சியானது விதைக்கரணைகள் (கிழங்குகள்) மூலம் இனவிருத்தி செய்யப்படுகின்றது. நல்ல இஞ்சி மகசூலுக்கு தரமான, நோய்தாக்காத இஞ்சிக்கரணைகளைத் தேர்வு செய்வது இன்றியமையாததாகும். ஒரு எக்டருக்கு 18 குவிண்டால் விதைக் கரணைகள் தேவைப்படும். நல்ல மகசூல் பெற கரணைகள், 19 கிராம் எடையுள்ளனவாகவும், 2.5 முதல் 5 செ.மீ வரை சுற்றளவு கொண்டதாக இருக்கவேண்டும்.

இதற்கான அறுவடை காலம் முதல் (டிசம்பர்) விதைக்கும் பருவம் (ஏப்ரல்–மே) வரை விதைக் கரணைகள் தகுந்த முறையில் சேமித்து பாதுகாப்பது முக்கியமானதாகும். விதைக் கரணைகளை நேர்த்தி செய்ய 0.3 சதம் டைத்தேன் எம்.45 மற்றும் 0.02 சதம் மாலத்தியான் மருந்துகளில் அமிழ்த்து எடுத்தல் வேண்டும். சேமிப்பு அறையின் வெப்பநிலை 30 செல்சியஸ்க்கு குறைவாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்

### நிலம் தயாரிப்பும் நடவும்

எக்டருக்கு 25–30 டன் அளவில்,எருவிட்டபின் நிலத்தை நன்கு உழுது (4 அல்லது 5 முறை) 0.1 மீ. அகலம், 15 செ.மீ. உயரம் மற்றும் தேவையான அளவு நீளமுள்ள பாத்திகளைத் தயார் செய்து கொள்ள வேண்டும். இருபாத்திகளுக்கு இடையில் 40–50 செ.மீ. இடைவெளி கொடுக்க வேண்டும். இறவை சாகுபடிக்கு 40 செ.மீ. இடைவெளியில் பார்களை அமைத்துக் கொள்ள வேண்டும். பாத்திகளில் விதைக் கரணைகளை 15–20 செ.மீ.ஆழத்தில் ஊன்றி மண்ணால் மூடிவிடவேண்டும்.

### மூட்டம் அல்லது நிலப்போர்வை

விதைக்கரணைகளை நட்டபின் பாத்திகளைப் பசுந்தழைகள் மற்றும் வைக்கோல் ஆகியவை கொண்டு மூடி மூட்டம் போடவேண்டும். இப்படி செய்வதால், மண்ணில் அங்ககச்சத்து அதிகரிப்பதோடு மண்ணரிப்பும் தடுக்கப்படுகின்றது. மூட்டத்தால் மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்படுவதால் முளைப்புத்திறன் அதிகரிக்கிறது. இரண்டாவது மூட்டம் 45 நாட்கள் கழித்தும் மூன்றாவது மூட்டம் 90 நாட்கள் கழித்தும் கொடுக்க வேண்டும்.

### உரமிடல்

எக்டருக்கு 75–50–50 கிலோ என்ற விகிதத்தில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களைக் கொடுக்க வேண்டும். இவற்றில் மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அடியுரமாகவும், தழைச்சத்தை 45 மற்றும் 90 நாட்கள் கழித்து மேலுரமாகவும் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு உரமிடலுக்குப் பின்னும் பாத்திகளுக்குத் தகுந்த முறையில் மண் அணைக்கவேண்டும்.

### ஊடுபயிர், பயிர்சுழற்சி மற்றும் கூட்டுப்பயிர்

இஞ்சியுடன் துவரையை ஊடுபயிராகப் பயிரிடுவதன் மூலம், நல்ல நிகரலாபம் கிடைப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது. மேலும், தென்னை,காப்பி, பாக்கு மற்றும் ஆரஞ்சு தோட்டங்களில் மேற்கண்ட பயிர்களின் இடைவெளிகளில் ஊடுபயிராகப் பயிரிடலாம்.

### பின்செய் நேர்த்தி

மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காவண்ணம், நல்ல வடிகால் வசதி செய்து கொடுக்க வேண்டும். உரமிடு முன்னும் மற்றும் மூட்டம் போடுமுன்னும் களை எடுத்து தோட்டத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

### அறுவடையும் மகசூலும்

விதைத்த எட்டு மாதங்கள் கழித்து, செடிகள் அறுவடைக்குத் தயாராகும் பருவத்தில் இவைகள் மஞ்சளாக மாறும் பொழுது அறுவடை செய்ய வேண்டும். ஒரு எக்டரிலிருந்து 15–20 டன்கள் வரை மகசூல் கிடைக்கும். உலர்த்தும்போது நிலத்தன்மை மற்றும் ரகத்தின் குணாதிசயங்களைப் பொறுத்து 16–25 சதம் வரை சுக்கு கிடைக்கும்.

### பயிர் பாதுகாப்பு

தண்டுத்துளைப்பான், இலை சுருட்டுப்புழு, கரணை செதில் பூச்சி போன்ற பூச்சிகளும் கரணை அழுகல் மற்றும் பாக்டீரியா அழுகல், இலைப்புள்ளி ஆகிய நோய்களும் இஞ்சியை அதிகமாகப் பாதிக்கின்றன. தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்த 0.1% மாலத்தியானையும், இலை சுருட்டுப் புழுவிற்கு 0.1% , கார்பரிலும் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். கரணைச் செதிலைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட கிழங்குகளை 0.1% குயினால்பாஸ் ஊறப்போட வேண்டும். அழுகல் நோய் பாதிக்காமலிருக்க, நல்ல வடிகால் வசதி செய்து தரவேண்டும். அழுகல் நோய் பாதித்த நிலங்களில் டைத்தேன் எம்.45 (0.3% ) மருந்தை தெளித்து நோயினைக் கட்டுப்படுத்தலாம். பாக்டீரியா அழுகலுக்கு 200 பி.பி.எம். ஸ்டெரப்டோமைசின் கரணை நேர்த்தியில் பயன்படுத்தி பாக்டீரியா அழுகல் நோயினை வராது தடுக்கலாம். நோய் ஆரம்பித்திருந்தால் 0.1% போர்டோ கலவையைத் தெளித்து கட்டுப்படுத்தலாம். மேற்கண்டவாறு சாகுபடி மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி நல்ல மகசூல் பெறலாம். ★

சு.சரவணன், ஜே.பிரேம் ஜோசுவா, ஆ.சுப்பையா,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்.

## சீர்திருத்தப் பள்ளி மற்றும் தொழு நோயாளிகள் இல்லத்தில் சமூக நலத்துறை அமைச்சர் திடீர் சோதனை

சமூக நலத்துறை அமைச்சர் திருமதி பா.வளர்மதி அவர்கள் 30.12.2001 அன்று காலை செங்கற்பட்டு சிறுவர் சீர்த்திருத்தப் பள்ளியினை நேரில் சென்று பார்வையிட்டார். அங்கு பல மாவட்டங்களைச் சார்ந்த 380 சிறுவர்கள் 8–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை படித்து வருகின்றார்கள். அந்த மாணவர்கள் தங்களுக்கு கணக்குப் பாடம் சொல்லித்தர ஆசிரியர் இல்லையென்றும், விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்கள் தங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் இல்லையென்றும் அமைச்சரிடம் புகார் கூறினார்கள். அம்மாணவர்களிடம் அமைச்சர் உடனடியாக அனைத்து தேவைகளும் செய்து தரப்படும் என்று உறுதி அளித்தார்.

மேலும், அங்கு மதிய உணவு நேரத்தில் சோதனையிட்ட போது சமையல் உதவியாளர் வேலைக்கு வராத காரணத்தால், மாணவர்களே அந்த சமையல் வேலை உதவிகளைச் செய்ததாக தெரியவந்தது. எனவே, சமையலர் மற்றும் அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கூறி உத்தரவிட்டார்.

செங்கற்பட்டிலுள்ள தொழிநோயாளிகள் இல்லத்திற்கு சென்று அமைச்சர் பார்வையிட்டார். அங்கு 230 தொழு நோயாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு சமையலர் மட்டும் இருப்பதாகவும், தண்ணீர் பஞ்சம் அதிகமாக உள்ளதாகவும், அதனால் ஆழ்துளை கிணற்றை பழுது பார்க்கச் சொல்லியும், உடல் நலம் சரியில்லையென்றால் நோயாளிகளை அழைத்துச் செல்ல தேவையான வாகன வசதியில்லையென்றும் அமைச்சரிடம் புகார் கூறினார்கள். புகாரை ஏற்ற அமைச்சர் உடனடியாக செய்து தருவதாக உறுதி கூறினார்.

தாம்பரத்தில் உள்ள வாய் பேசாத பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்குச் சென்று அமைச்சர் பார்வையிட்ட போது அங்கு 80 பிள்ளைகள் படிப்பதாகத் தெரியவந்தது. அந்த பிள்ளைகளுக்கு வழங்கப்படும் உணவைச் சோதனையிட்டபோது, போதுமான பிள்ளைகளுக்குத் தேவையான உணவு பொருட்களைக் கொடுக்காமல் தலைமை ஆசிரியர் வெளியே சென்று விட்டதாக தெரிய வந்தது. எனவே, அவர் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சர் உத்தரவிட்டார்.

## 18 அம்ச திட்டம்

1991–1996–ஆம் ஆண்டுகளில் கொண்டு – வரப்பட்ட ''தொட்டில் குழந்தைத் திட்டம்'' மற்றும் ஏனைய குழந்தைகள் நலத் திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று 25.5.2001–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் மேதகு ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் குழந்தைகள் நலனுக்காக 15 அம்ச திட்டத்திற்கு புத்துயிர் அளித்து UNICEF நிறுவனம், தொடர்புடைய அரசு துறைகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் வல்லுநர்கள் ஆகியோரின் ஆலோசனையைப் பெற்று புதிய மேம்படுத்தப்பட்ட திட்டமாக அரசு செயல்படுத்துகிறது. இத்திட்டம் இனி ''மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்கான தமிழ்நாடு அரசின் 18 அம்ச திட்டம்'' என்னும் பெயரில் சிறப்பாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ள 18 அம்சங்கள் வருமாறு:

1. வளரிளம் பருவத்தினரின் (Adoloscent), குறிப்பாக வளரிளம் பெண்களின் நிலைமைகளை மேம்படுத்துதல்.

2. சிறு வயதிலேயே குழந்தைகளைக் கருவில் சுமத்தல், அடிக்கடி குழந்தை பெற்றுக் கொள்ளுதல் போன்ற கேடுகளிலிருந்து பெண்களை விடுவித்தல்.

3. பெண் குழந்தைகளைக் கருவிலேயே கொன்று விடுவதையும், பெண் சிசுக் கொலையையும் ஒழித்தல்.

4. எடைக் குறைவான குழந்தைகள் பிறப்பைக் குறைத்தல்.

5. நோய்த் தடுப்பு மருந்துகளால் (Vaccine) தடுக்கத்தக்க நோய்களை முற்றுமாக ஒழித்தல்

6. குழந்தையின் இளம் பருவத்திலேயே உடல் ஊனம் அடையாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல். அதற்குரிய காரணங்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

7. குழந்தைகள் பராமரிப்பு மற்றும். வளர்ப்பு – பிறந்தது முதல் 3 வயது வரையில் குழந்தைகள் மீது தனிக்கவனம் செலுத்துதல் – பெற்றோர்களுக்கு அவர்களது கடமையும் பொறுப்பும் உணர்த்துதல்.

8. குழந்தை இறப்பு வீதத்தைக் குறைத்தல்.

9. பிறந்தது முதல் 3 வயது வரையிலான குழந்தைகளிடையே கடுமையான மற்றும் மிதமான உட்டச் சத்துக் குறைவை நீக்குதல்.

10. நுண் ஊட்டச்சத்துக் குறைபாடுகளைக் களைதல்.

11. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தைப் பிரபலப்படுத்துவதும் பெண் குழந்தைகளின் நிலையை மேம்படுத்தலும்,

12. அனைத்து மருத்துவமனைகளையும், மகப்பேறு நிலையங்களையும் தாய் மற்றும் குழந்தைகளுடன் நட்புறவு உடைய நிலையங்களாக ஆக்குதல்.

13. இருதய நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுத்தலும் இலவசமாக இருதய அறுவை சிகிச்சைகளை செய்தலும்.

14. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்.

15. ஒவ்வொரு குழந்தையும் எட்டு ஆண்டுகள் பள்ளிக்குச் செல்வதை உறுதி செய்தல்.

16. அனைத்துப் பள்ளிகளுக்கும் குழந்தைகள் பராமரிப்பு மையங்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்கலும் சிறந்த சுகாதார வசதிகளை அளித்தலும்,

17. மகளிரின் எழுத்தறிவையும், நிலையையும் உயர்த்துதல்.

18. சுயஉதவிக் குழுக்கள் மூலம் மகளிருக்கு அதிகாரமளித்தல்.

இந்த 18 அம்ச திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தவும் கண்காணிக்கவும் மாநில அளவிலான குழு ஒன்று தலைமைச் செயலாளர் தலைமையிலும், துறைத் தலைவர்கள் நிலையிலான குழு சமூகநலத்துறை ஆணையர் தலைமையிலும், மாவட்ட அளவிலான குழு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலும் ஆக மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. துறைத் தலைவர்கள் நிலையிலான குழுவை சமூக நலத்துறை ஆணையர் கூட்டி, மாவட்ட இலக்குகள் பற்றி முடிவு செய்து, அவற்றை செயல்படுத்துவதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் அதன் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது. மாநில அளவிலான குழு 6 மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது அரசு விரும்புகின்றபோதோ கூட்டப்பட்டு இதன் மீது ஆய்வு மேற்கொள்ளும்.

மேலே குறிப்பிட்ட 18 அம்சங்களை முனைப்புடன் செயல்படுத்தி, மகளிர் மற்றும் குழந்தைகளின் முழுமையான நலனை மேம்படுத்தும் வகையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தொலைநோக்கு திட்டமாக “மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்கான தமிழ்நாடு அரசின் 18 அம்ச திட்டம்'' அமையும். இதற்கான அரசு உத்தரவு அரசு ஆணை(நிலை) எண்.190, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள் 18.12.2001இல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

• • •

# சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் வழங்க உத்தரவு

சென்னையை சேர்ந்த திரு.டி.எஸ்.கிட்டப்பா மற்றும் திரு.சாகுல் அமீது என்கிற ஏவா ஆகிய இருவரும் தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றதாகவும், எனவே தங்களுக்கும் விடுதலைப் போராட்ட வீரர்களின் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்றும் கோரி அரசுக்கு மனு செய்திருந்தார்கள்.

**சுதந்திரப் போராட்ட வீரர்கள் மனு :**

80 வயதான சுதந்திரப் போராட்ட வீரர் திரு.கிட்டப்பா என்பவர் முந்தைய ஆட்சியின் போது அரசுக்கு சமர்ப்பித்த மனுவில், தான் 1942– ஆம் வருடம் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஈடுபட்டு சிறைத்தண்டனை அடைந்ததாகவும், இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு, தலைமறைவாக ஆறுமாத காலம் துன்பம் அனுபவித்ததாகவும், தனக்கு மனைவி மக்கள் எவரும் இல்லாமல் வறுமையில் வாடி வருவதாகவும், தனக்கு கருணை அடிப்படையில் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் தனது மனுவில் தெரிவித்திருந்தார். இதேபோன்று, 76 வயதான சுதந்திர போராட்ட வீரர் திரு.சாகுல் அமீது என்கிற ஏவா தான் பர்மாவில் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியுள்ளதாகவும், தன்னுடைய வயதான காலத்தில் வறுமையில் வாடுவதாகவும் தெரிவித்து தனக்கு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் கோரியிருந்தார். இந்த இரு சுதந்திரப் போராட்ட வீரர்களின் மனுக்கள் உரிய முறையில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும், இவர்களது உண்மையான கோரிக்கைகளை முந்தைய அரசு பரிவோடு பரிசீலிக்காமல் காலங்கடத்தியதுடன், அவர்கள் கோரிய சுதந்திர போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தை வழங்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

**கோரிக்கைப் பரிசீலனை :**

தற்போது, இவர்களது கோரிக்கையை முறைப்படி பரிசீலித்த தமிழக அரசு திருவாளர்கள் டி.எஸ்.கிட்டப்பா மற்றும் சாகுல் அமீது என்கிற ஏவா ஆகியோர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றுள்ளார்கள் என்பதை கண்டறிந்து, அவர்களது ஏழ்மையான சூழ்நிலையையும், முதிய வயதையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தை உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் இவர்கள் தங்கள் வாழ்நாள் வரையில் மாதந்தோறும் ரூ.3,000 ஓய்வூதியமும், ரூ.15 மருத்துவப்படியும் பெறுவார்கள். மேலும், அரசு பேருந்துகளில் இலவச பயணச் சலுகையும், மருத்துவமனைகளில் 'A' வகுப்பு இலவச மருத்துவ வசதியும் பெறுவார்கள். அவர்களது வாழ்நாளுக்குப் பிறகு வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.1,500 வழங்கப்படும். •

# இதய மேலறை சுவர் ஓட்டை நோய்

டாக்டர் **முத்துச்செல்லக்குமார்,** M.D., F.R.E.S.

இதயம் பலகைகளிலும் பாதிக்கப்படும் ஓர் உறுப்பு. அதிலுள்ள வால்வுகளின் கோளாறு காரணமாக அது பாதிக்கப்படலாம். இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், கொழுப்பு பொருட்கள் ஆகியவற்றால் இதய இரத்தக் குழாயும், இதயமும் பாதிக்கப்படலாம். தொற்று நோய்க் கிருமிகளாலும் இதயமும், இதய உறையும் பாதிக்கப்பட்டு நோய் ஏற்படலாம். பல்வேறு இதயச் தசை நோய்கள், இணைப்புத் திசு நோய்கள் ஆகியவற்றின் காரணமாகவும் இதயம் பாதிக்கப்பட்டு நோய் ஏற்படும். ஆனால், இன்னும் சிலருக்கோ பல்வேறு காரணங்களினால் பிறவியிலேயே இதயக் கோளாறுகள் ஏற்பட்டுவிடும்.

இப்படி, பிறவிலேயே ஏற்படும் இதயக் கோளாறுகளில் பல வகைகள் இருக்கின்றன. இதய வால்வுக் கோளாறுகளாகவும் இவை இருக்கலாம். இதய உட்சுவருக்குள் 'ஓட்டை' உடையதாவும் இது அமைந்திருக்கலாம். இதில் முக்கியமானது, இதய மேலறைகள் இரண்டையும் தடுக்கும், இரண்டு ஆரிக்கிள் அறைகளுக்கும் இடைப்பட்ட சுவரில் ஓட்டை விழுந்திருக்கும்.

பொதுவாக இதயத்தில் நான்கு அறைகள் இருக்கும். மேலிருக்கும் அறைகள் 'ஆரிக்கிள்' எனப்படும். கீழிருக்கும் அறைகள் 'வென்டிரிக்கிள்' எனப்படும். இரண்டு ஆரிக்கிளையும் பிரிக்க ஒரு தடுப்புச் சுவர் உண்டு. இதே போல இரண்டு வென்டிரிக்கிளையும் பிரிக்க ஒரு தடுப்புச் சுவர் உண்டு.

இந்த ஆரிக்கிளைப் பிரிக்கும் தடுப்புச் சுவரில் ஓட்டை விழும் நோய், பிறவியிலேயே ஏற்படக் கூடியதாகும். இது ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம் ஏற்படுகிறது.




**காரணங்கள்**

பெரும்பாலான பிறவிக் கோளாறுகள் ஏற்படுவதற்கு 'கரு' வளர்ச்சி பெறுகின்ற போது ஏற்படும் கோளாறுகள் காரணமாகும்.

மரபணுக் கோளாறுகளின் காரணமாகவும், குரோமோஸோம்களின் அமைப்பில் ஏற்படும் வேறுபாடுகள் காரணமாகவும் இது ஏற்படலாம்.

கர்ப்பிணியாய் இருக்கின்ற காலத்தில், வளருகின்ற குழந்தையை பாதிக்கக் கூடிய ஒரு சில மருந்துகளைச் சாப்பிடுவதாலும், கர்ப்பக் காலத்தில் எக்ஸ்ரே, ஸி.டி.ஸ்கேன் போன்ற பரிசோதனைகளை அதிகம் செய்வதாலும், 'ரூபெல்லா' என்ற வைரஸ்களால் ஏற்படும் ஒரு வகை மணல்வாரி அம்மை நோயினாலும், பிறக்கும் குழந்தைகள், பிறவிலேயே பல்வேறு குறைகளுடன் குறிப்பாக இதயக் கோளாறுகள் உடையனவாகப் பிறக்கலாம்.

**வகைகள்**

ஓட்டை ஏற்படும்இடத்தைப் பொறுத்து இந்தச் 'சுவர்' மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**'பிரைமம்' வகை (சுவர் ஓட்டையுடைய) ஏ.எஸ்.டி.**

இதில் இரண்டு ஆரிக்கிள் அறைகளுக்கும் இடையே ஓட்டையானது சற்றுத் தாழ்வாக இருக்கும். வலது மேலறை கீழறை (ஆரிக்கிள் – வென்டிரிகிள்) அறைகளுக்கு இடையே இருக்கும் மூவிதழ் வால்விற்கும் இடது மேலறை, கீழறைகளுக்கு இடையே உள்ள ஈரிதழ் வால்விற்கும் சற்று மேலாக அமைந்திருக்கும். இதனால், இவ்விரு வால்வுகளும் பாதிக்கப்பட்டு, அவற்றின் வழியாக இரத்தக் கசிவு ஏற்படும்.

### இரண்டாம் வகை (சுவர் ஓட்டையுடைய) ஏ.எஸ்.டி.

இதில் குழந்தை கருவிலிருக்கும் போது, வளரும் இதயத்தில், இரண்டு ஆரிக்கிளுக்குமிடையே உள்ள சுவரில் துளை இருக்கும். இது குழந்தை பிறந்தவுடன் உடனடியாக மூடிக்கொள்ளும். அப்படி மூடாமல் தொடர்ந்து இருந்தாலும், இந்த நோய் ஏற்படும்.

### மூன்றாம் வகை (சுவர் ஓட்டையுடைய) ஏ.எஸ்.டி.

இதில், ஓட்டையானது சுவரின் மேற்பகுதியில் காணப்படும். அதாவது, மேல்பெரும்சிரை வலது மேலறையில் நுழைகின்ற இடத்தில் காணப்படும். இந்த நோயுடன், நுரையீரலில் இருந்து வரும் சிரைகளிலும் மாறுதல்களும், குறைபாடுகளும் இருக்கும்.

இந்த இதயச் சுவர் ஒட்டை ப்பாதிப்பு தனியாகவும் ஏற்படலாம். வேறு பல நோய்களுடனும் ஏற்படலாம்.

குறிப்பாக,

- நெஞ்சுப்பகுதி, முதுகெலும்பு வளைந்தும் பாதிப்புடன் தோன்றும்.
- ஈரிதழ் வால்வு சுருக்கமும் ஏற்படும்.
- நுரையீரல் பெருந்தமனி வால்வில் சுருக்கம் காணப்படும்.
- மாறுபட்ட நுரையீரல் சிரைகளுடன் தோன்றும்.
- இடதுபுற மேல் சிரையுடன் ஏற்படும்.
- 'மார்ஃபன்' நோய்த் தொகுப்புடன் ஏற்படும்.

### இதய ஓட்டையால் இரத்தம் பாய்வதில் ஏற்படும் மாற்றங்கள்

இவ்வாறு இரண்டு இதய மேலறைகளுக்கும் இடைப்பட்ட சுவரில் ஓட்டை விழுந்துவிடுவதால், இடது மேலறையின் அதிக அழுத்தம் காரணமாக இரத்தம் இடது மேலறையிலிருந்து இடது கீழறைக்கு செல்லாது, இதய வலது மேலறைக்குச் செல்லும். பிறகு வலது கீழறைக்குச் செல்லும். இதனால் வலது கீழறையிலிருந்து தொடங்குகின்ற நுரையீரல் பெருந்தமனியில் அழுத்தம் அதிகரிக்கும். இது நுரையீரலைப் பாதிக்கும். நுரையீரலில் பெருமளவு பாதிப்பு ஏற்படுகின்ற போது, இரத்தம் வலது மேலறையிலிருந்து இடது மேலறைக்குச் செல்லத் தொடங்கும்.

### நோய் அறிகுறிகள்

இந்தக் குறையுடன் பிறக்கின்ற பலருக்கும் உடனடியாக நோய் அறிகுறிகள் எதுவும் தோன்றுவது கிடையாது. **30** முதல் **40** வயதிற்குள் இவர்களுக்கு தொந்தரவுகள் ஏற்படத் துவங்கும்.

ஆரம்ப நிலையில் குழந்தைகளையும், சிறுவர்களையும் பரிசோதனைசெய்து பார்க்கின்ற போதே இந்த நோயைக் கண்டுபிடித்து விடலாம்.

இவர்களுக்கு மூச்சுத் திணறல், நுரையீரல் அழற்சி நோய், இதய செயலிழப்பு, இதயத் துடிப்பு சீராக இல்லாமை போன்றவை ஏற்படலாம்.

மருத்துவரின் பரிசோதனையின் போது, இரண்டாவது இதய ஒலி, இரண்டாகப் பிரிந்து, நன்கு இடைவெளி விட்டு கேட்கும்.

மேலும், நுரையீரல் பெருந்தமனியில் இரத்தம் அதிக வேகத்துடன் பாய்வதால், அங்கும் 'அசைவொலி' கேட்கும்.

மூவிதழ் வால்வு பகுதியிலும் இதுபோன்ற அசைவொலி கேட்கலாம்.

### சோதனைகள்

***எக்ஸ்ரே :*** இதயத்தை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால், பெரிதாக காட்சியளிக்கும். இதே போல் நுரையீரல் பெருந்தமனியும் பெரிதாக வீங்கி விடும்.

***இ.சி.ஜி. :*** இ.சி.ஜி.படத்தில் வலதுபக்க இதயத் துடிப்பு (மின்னோட்டம்) பாதிப்புடன் தென்படும்.

***இதய எதிரொலி வரைவு :*** இதய எதிரொலி வரைவு படத்தில் வலது கீழறை பெரிதாகி இருக்கும். நுரையீரல் பெருந்தமனி வீக்கமாகி இருக்கும். இதயச் சுவர் ஒட்டையும், அதன் மூலம் வலது – இடது மேலறை இரத்தம் கலப்பதுவும் தெரியவரும்.

### சிகிச்சைகள் :

இதயப் பாதிப்பு நோய்க்கு 'அறுவை சிகிச்சை' தான் ஒரே வழி. அதன் மூலம் ஒட்டையை சரி செய்து விடலாம்.

இதனை பெரும்பாலும் பள்ளி செல்லும் முன்பாக (**6** வயதிற்குள்) செய்து கொள்வது நல்லது.

பலருக்கும், நோய் இருப்பது பின்னாளில்தான் தெரிய வரும் என்பதால், இதனைக் கண்டுபிடித்தவுடன் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வது நல்லது.

இதயத்தை பாதித்து, நுரையீரல் பெருந்தமனியில் இரத்த அழுத்தமும் அதிகரித்துவிட்டால், அதன் பிறகு அறுவை சிகிச்சை செய்வது கஷ்டமாகும். அத்துடன் அறுவை சிகிச்சையின்போது, அபாயமும் ஏற்படலாம்.

எனவே, நுரையீரல் பெருந்தமனியில் இரத்த அழுத்தம் அதிகரிப்பதற்கு முன்னதாகவே, அறுவை சிகிச்சை செய்து கொள்வது சாலச்சிறந்தது.

• • •

# பலவகைத் தலைவலிகள்



பக்கத்து வீட்டுப் பையனுக்கு படித்துப் படித்து தலைவலி வந்து விட்டது. வீட்டுக்காரிக்கு மாமியார் கூட சண்டை போட்டதால் தலைவலி. மாடி வீட்டுக்காரருக்கு நைட் டியூட்டி போய் வந்ததால் தலைவலி. எனக்கு நேரத்திற்கு சரியாக சாப்பிடாவிட்டால் தலைவலி. என் குழந்தைக்கு ஜலதோஷம் பிடித்தால் தலைவலி. இப்படி எத்தனையோ காரணங்களால் தலைவலி உண்டாகிறது.

தலைவலி வந்தால் அது நம் தலையெழுத்து என்று விடுவதற்கில்லை. தலைவலி நம் உடல்நிலை மாற்றத்தின் வெளிப்பாடுதான். அதற்குச் சரியான காரணத்தை அறிந்து அதற்கேற்ற ஹோமியோ மருந்தைச் சாப்பிட்டு வந்தால் தலைவலி நிரந்தரமாக நம்மைவிட்டுச் சென்றுவிடும்.

**தொலைக்காட்சியால் வரும் தலைவலி**

தொலைக்காட்சிகளில் படம் போடுகிறார்கள். கிரிக்கெட் மேட்ச் போடுகிறார்கள் என்று மணிக்கணக்காய் அதை உற்றுப் பார்த்தால் சிலருக்குத் தலைவலி வந்துவிடும். சினிமா பார்த்த பின்பும் சிலருக்கு அவ்வாறு வரும். இதற்கு என்ன செய்வது? தொலைக்காட்சி மற்றும் சினிமா பார்க்காமல் இருந்துவிட வேண்டியதுதானா? அதற்கு அவசியமில்லை. படம் பார்த்தாலும் தலைவலி வராமல் செய்வதற்கு ஹோமியோபதியில் மருந்துகள் உள்ளன.

தொலைக்காட்சி, சினிமா பாரப்பதால் தலைவலி வந்தால் அதற்கும் பல காரணங்கள் உள்ளன. கண் கூசச் செய்யும் வெளிச்சம் சிலருக்குத் தலைவலியை உண்டாக்கும். அவர்கள் வெளிச்சத்தின் அளவை சிறிது குறைத்து வைத்துப் பாரப்பதுடன் சில மாதங்கள் ஹோமியோ மருந்து சாப்பிட்டால் தலைவலி தீர்ந்துவிடும்.

தூரப்பார்வை குறைவாக உள்ளவர்கள் தொலைக்காட்சி மற்றும் சினிமாவை உற்றுப் பார்ப்பதால் தலைவலி வரும். கண்ணாடி போட்டும் தலைவலி குறையாவிட்டாலும் ஹோமியோ மருந்து அதை குணப்படுத்தி விடுகிறது. Pilocarpus, Physostigma போன்ற மருந்துகளை நீண்ட நாள் கொடுத்து வர வேண்டும்.

விளையாட்டுகளைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருப்போம். நாம் ஜெயிக்கும் என்று நினைத்த அணி தோற்றுவிடும். இது போன்ற நேரங்களில் உள்ள பரபரப்பு மற்றும் எதிர்பாராத முடிவினால் டென்ஷன் அதிகமாகி தலைவலி வந்துவிடும். விளையாட்டு என்பது பொழுதுபோக்குதானே தவிர அதில் வெறி இருக்கக்கூடாது.

**பசியால் வரும் தலைவலி**

நேரத்திற்கு சாப்பிடாமல் இருந்தால் தலைவலி வருவது ஏன்? நமது உடல் செல்களுக்கு தேவையான மாவுச்சத்து (குளுகோஸ்) கிடைக்காவிட்டால், நம் நரம்பு செல்கள் தலைவலி மூலம் தனது சோர்வை வெளிப்படுத்துகின்றன.

இதுபோன்ற தலைவலி வந்தால், நேரத்திற்கு சாப்பிட்டு பசியை போக்கிக் கொள்ள வேண்டுமே தவிர, காபி, தேயிலை, சிகரெட் போன்றவைகளை உபயோகிப்பது உடல் நலத்திற்கு தீங்காக அமையும். அல்சர், கைகால் நடுக்கம் போன்றவை வரலாம்.

எவ்வளவு வேலை இருந்தாலும் அதைப் பத்து நிமிடம் ஒதுக்கி வைத்துவிட்டு உணவு சாப்பிட செல்வதால் உலகம் அழிந்துவிடாது.

**மூளைக் கட்டியால் வரும் தலைவலி**

மூளையைப் பாதிக்கும் புற்றுக் கட்டிகள் மிகச் சிலருக்குத்தான் ஏற்படும். அதனால் தலைவலி உள்ள அனைவரும், நமக்கும் மூளையில் கட்டி இருக்குமோ என்று பயம் கொள்ளத் தேவையில்லை.

கட்டியால் வரும் தலைவலி திடீரென தோன்றுவதில்லை. கட்டியின் வளர்ச்சியைப் பொறுத்து சிறிது சிறிதாக அதிகமாகும். கபால எலும்பினுள் கட்டி உள்ளதால் ஏற்படும் அதிக அழுத்தம்தான் தலைவலி வருவதற்கு காரணம்.

சிலருக்கு கண் பார்வை குறைந்து கொண்டு வரும். வாந்தியும் வரலாம். உடல் எடை குறையும். மனமாற்றங்கள் இருக்கலாம். இவை யாவும் கட்டி இருக்கும் இடத்திற்கு ஏற்ப மாறுபடும்.

இதுபோன்ற துன்பங்களுடன் தலைவலியும் நாளுக்கு

டாக்டர் ப. உ. லெனின்

நாள் அதிகமானால் தலையில் கட்டி வந்திருக்க வாய்ப்புள்ளதாகக் கருதலாம்.

மூளையில் உள்ள கட்டிகளை அறுவைச் சிகிச்சை செய்ய இயலாத போது, ஹோமியோ மருத்துவம் செய்வதால் கட்டி கரையலாம். இதற்கு Conium, Cocculus போன்ற மருந்துகள் உதவுகின்றன.

**தலையில் நீர் சேர்வதால் வரும் தலைவலி**

தலையில் நீர் சேர்ந்துள்ளது என்று அனைவரும் சொல்வது சைனஸ் கோளாறுகளைத்தான். ஆனால், இது தவிர மற்றொரு காரணமும் உண்டு. மூளையைச் சுற்றி செரிபெரோஸ்பைனல் திரவம் உள்ளது. இந்த திரவத்தின் அழுத்தம் அதிகமாகும் போது தலைவலி, தலைப்பாரம் போன்றவை உண்டாகும். Apis, Zincummet போன்ற ஹோமியோ மருந்துகள் இந்த நீரை வெளியேற்றி தலை வலியைக் குறைக்க உதவுகின்றன.

**சைனஸ் அழற்சியால் தலைவலி**

கபால எலும்பில் உள்ள வெற்றிடங்களைத் தான் சைனஸ் என்கிறோம். நமக்கு சளி உண்டாவது இவ்விடங்களில் தான். சளி அதிகமாக சேர்ந்து மூக்கடைத்துக் கொண்டு வெளியேற முடியவில்லை என்றால் தலைவலி, தலைப்பாரம் போன்றவை நமக்கு ஏற்படுகின்றன.

இதுபோன்ற தலைவலி வந்தால் அதற்கு மட்டும் மாத்திரை சாப்பிடாமல் தலைவலி வந்ததற்குக் காரணமான சைனஸ் அழற்சியை குணமாக்கும் மாத்திரைகளையும் சாப்பிட வேண்டும். சிலருக்கு அலர்ஜி இருந்தால் அடிக்கடி சைனஸ் அழற்சி ஏற்படும். Pothos, Aconite, Bella - Donna போன்ற மருந்துகள் இதை குணமாக்குகின்றன.

**ஒற்றைத் தலைவலி**

தாங்க முடியாத தலைவலி என்று இதைத்தான் சொல்கிறோம். புயல் போல் திடீரென வரும் இந்தத் தலைவலி இரண்டு நாட்களுக்கு நம்மை ஒரு வேலையும் செய்ய விடாது.

மனதில் ஏற்படும் டென்ஷன், அரசியல்வாதிகள், சினிமா சம்பந்தப்பட்டவர்கள், இரவு வேலையில் உள்ளவர்கள் தூக்கம் கெட்டு அத்துடன் கண் கூசச்செய்யும் ஒளி விளக்குகளைப் பார்ப்பதால் இந்த தலைவலி உண்டாகிறது.

தலைக்குள் செல்லும் இரத்தக் குழாய்கள் விரிவடைந்து, அதனால் இந்தத் தலைவலி உண்டாகிறது.

இந்த தலைவலி வந்துவிட்டால், கதவு, ஜன்னல்களை மூடி சத்தம், வெளிச்சம் இல்லாத அறையில் படுப்பது நல்லது. Glonine, Natrum Carb, Spigelia போன்ற மருந்துகள் இது போன்ற தலைவலிகளால் துன்புறுபவர்களை குணமாக்குகின்றன. நோயின் தீவிரம் படிப்படியாகத்தான் குறையும்.

*நன்றி :* **மருத்துவ அறிவியல் மலர்**





செய்தி மக்கள் தொடர்புத்துறையின் திட்டங்கள் மற்றும் விளம்பரப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம், 11.12.2001 அன்று மாண்புமிகு செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. செய்தி, சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு. வி. ராமதாஸ், இ.ஆ.ப, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. தேவ. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப. மற்றும் உயர் அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# தமிழிசை வளர்த்த அண்ணாமலை அரசர்

□ டி.எஸ்.பாலு

“கண்ணியமிக்க பரம்பரையின் வழித்தோன்றல்களாகிய நீங்கள்தான் இந்த உன்னதமான பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் நீங்கள் காணும் வெற்றியில்தான், இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது. அடிப்படை பலவீனம் இருந்தால், மகுடமும் இருளில் வீழும். புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியில் ஈடுபட வாரீர்! என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அறைகூவல் விடுத்த இடம் எது தெரியுமா...? சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம்! ஆம்; 18-11-67இல் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் தான், அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்படிக் குறிப்பிட்டார்.

அந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கியவரும், தமிழிசை இயக்கத்தை இந்தத் தமிழ் மண்ணில் முதன்முதல் தொடங்கியவருமான செட்டி நாட்டரசர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் பிறந்த நாள் 30.8.1881 ஆகும்.



## பிறப்பு :

செட்டிநாட்டரசர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார், இராமநாதபுரத்திலுள்ள கானாடுகாத்தான் என்னும் ஊரில், முத்தையா செட்டியார், மீனாட்சி ஆச்சி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். தம் அறிவாற்றலாலும், பேருழைப்பாலும் தம் முப்பதாம் வயது வரை பல்வேறு வகைப்பட்ட தொழில் துறைகள் வாயிலாக அவர் பெரும்பொருள் சம்பாதித்தார். அவ்வாறு சம்பாதித்த பொருளைத் தாமும் தம்மைச் சார்ந்தவர்களும் அனுபவித்தால் போதும் என்று அவர் நினைக்கவில்லை. பொதுநலப் பணிகளுக்காகவும் செலவிட வேண்டும் என்று விரும்பினார். அந்தச் சமயத்தில்தான் காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைமைப் பதவி அவரை நாடி வந்தது. மூன்றாண்டுகள் அக்கழகத்தின் தலைவராக மட்டுமல்ல; தொண்டராகவும் இருந்து அந்நகரத்திற்குப் பல்வேறு நன்மைகளைச் செய்தார்.

## பொதுநலப் பணிகள் :

'பெண்ணின் உயர்வே இம்மண்ணின் உயர்வு' என்பதை உணர்ந்த அண்ணாமலையார், பெண்களுக்காகத் தம் ஊரில் மூன்று இலட்ச ரூபாய் செலவில் ஒரு மருத்துவச்சாலை அமைத்தார். பெண்கள் உலகியல் அறிவு பெறவும், உடல் நலனை நன்கு காத்துக் கொள்ளவும் சென்னை மாநகரில் இரண்டு இலட்ச ரூபாய் செலவு செய்து 'வெலிங்டன் கிளப்' என்னும் மகளிர் மன்றத்தை நிறுவினார்.

பொதுக் கூட்டங்கள் நடத்திடப் போதிய இடமின்றித் தவித்த சிதம்பர நகர மக்களுக்காகப் பொதுமன்றம் ஒன்றைக் கட்டிக்கொடுத்தார். 1917-இல் மதுரைக் கல்லூரிக்கு 50,000 ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள இடம் வாங்கித்தந்து, அதில் கட்டடமும் கட்டுவதற்கு உதவி செய்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரிக்கு மாணவர் விடுதியொன்றைக் கட்டிக் கொடுத்தார். திருச்சியிலுள்ள தேசிய உயர்நிலைப்பள்ளி, இராமகிருஷ்ண கல்வி நிலையம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம், கொழும்பு, பர்மா ஆகியவற்றிலுள்ள கல்வி நிலையங்கள் எனப் பல்வேறு கல்வி நிறுவனங்களுக்கும் அவர் அளித்த கொடைகளுக்குக் கணக்கே இல்லை. சாந்திநிகேதனத்தில் கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் நிறுவிய விசுவபாரதி பல்கலைக் கழகத்திற்குத் தமிழ் நூல்கள் பலவற்றை அன்பளிப்பாக அளித்தார். சிதம்பரம் கோவிந்தராசப் பெருமாள் கோயில் உட்பட ஏராளமான திருக்கோயில்களுக்குத் திருப் பணிகள் செய்தார்.

## பட்டம், பதவிகள் :

அண்ணாமலையாருக்குச் 'செட்டிநாடு அரசர்' என்னும் பரம்பரைப் பட்டம் 1929-இல் கிடைத்தது. சென்னைப் பல்கலைக் கழகப் பேரவையின் வாழ்நாள் உறுப்பினராக இருந்த அவருடைய கல்விப் பணிகளைப் பாராட்டி, அப்பல்கலைக்கழகம் 1932-இல் எல்.எல்.டி. என்னும் கவுரவ டாக்டர் பட்டம் வழங்கியது. 1942-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் டி.லிட் பட்டம் வழங்கிப் பாராட்டியது.

1916-ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் தமிழக சட்டசபையிலும் 1921-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 15 ஆண்டுகள் டில்லி மாநிலங்கள் அவையிலும் அவர் உறுப்பினராக இருந்து, பல்வேறு நாட்டுநலப் பணிகள் புரிந்தார். இப்போது 'ஸ்டேட் பாங்க் ஆ∴ப் இந்தியா' என வழங்கப்படும் இந்திய இம்பீரியல் வங்கியின் கவர்னராகவும் 10 ஆண்டு காலம் அவர் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம் :

அண்ணாமலை அரசர் காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைவராயிருந்த காலத்தில், இலண்டன் மாநகருக்குச் செல்லும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அச்சமயத்தில் 1911-இல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு நடைபெற்ற முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டார். அப்போது ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று அவற்றின் செயற்பாடுகளைக் கண்டறிந்தார். உடனே, அப்பல்கலைக்கழகங்களைப் போன்று நம் நாட்டிலும் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். அவர் தந்தையார் முத்தையச் செட்டியாரும் தமையனார் திவான் பகதூர் இராமசாமிச் செட்டியாரும் பொதுநலப் பணிகள் பல செய்த சிதம்பரத்தில், 1920-இல் கல்லூரி ஒன்றைத் தொடங்கினார். அக்கல்லூரி பலவகையிலும் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியை மேலும் விரிவுபடுத்தவேண்டும் என்று கருதிய அண்ணாமலையார் திருவேட்களத்தில் இடம் வாங்கிக் கல்லூரியின் வளர்ச்சிக்கு வழி அமைத்தார். அந்தக் கல்லூரிதான் பின்னாளில் அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது. ஆசியாவிலேயே இவ்வாறு தனி மனிதர் ஒருவர் பல்கலைக் கழகம் கண்டதாக வரலாறில்லை. அந்த வரலாற்றைப் படைத்தவர் அண்ணாமலை ஆவார்.

## தமிழ் உணர்வு :

'விழியைக் காட்டிலும் மொழி உயர்வானது' என்பதை உள்ளத்தில் பதித்த அண்ணாமலையார், பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு முன்பே விடுதி வசதியுடன் மீனாட்சி தமிழ்க் கல்லூரி நிறுவி மாணவர்களை உருவாக்கினார். அக்கல்லூரிக்குத் 'தமிழ்த்தாத்தா'

உ.வே.சா. அவர்களைத் தலைவராகவும் இருக்கச் செய்தார். பல்கலைக்கழகம் தொடங்கிய பிறகு, அதில் தமிழுக்கு முதன்மை இடம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தால் பி.ஏ.ஆனர்சு என்னும் தமிழ் சிறப்பு வகுப்பைத் தொடங்கினார். "தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல்கலைக்கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும்" என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவையின் தொடக்க விழாவில் அவர் கூறியமை அண்ணாமலைச் செட்டியாரின் தமிழ்ப் பற்றுக்குச் சிறந்த சான்றாகும். இந்த நூற்றாண்டில் தமிழ்ப்பெரும் புலவர்களில் பலரும் இந்தப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும் பணியாற்றியுள்ளனர். ரா.பி.சேதுப்பிள்ளை, சுவாமி விபுலானந்தர், நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், மகாவித்துவான் இராகவ ஐயங்கார், தெ.பொ.மீ. தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், ஔவை துரைசாமிப்பிள்ளை, தேவநேயப் பாவாணர், லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார் போன்றவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். தமிழில் பி.ஏ.ஆனர்சு, புலவர், ஆசிரியப் பயிற்சி போன்ற பட்ட வகுப்புகள் முதன்முதலாக ஏற்படுத்தியதும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமே.

### தமிழிசை இயக்கம் :

இசைக்கலையில் தமக்கிருந்த ஈடுபாட்டினால், தாம் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு முன்பே, 1929-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் இசைக்கல்லூரியினை நிறுவினார். இக்கல்லூரி, நிலைபெற்று வளர்ச்சி அடைந்தவுடன், இதனை 1932-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்தார். இசைக்காகத் தனியே நான்காண்டு வகுப்பு முதன்முதலாக நடத்திப் பட்டம் வழங்கிய பெருமை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திற்கே உண்டு.

முத்தமிழுள் இசைத்தமிழும் ஒன்று. தமிழில் கிடைத்துள்ள முதல் நூலாம் தொல்காப்பியத்திலேயே இசை பற்றிய குறிப்புகள் கிடைக் கின்றன. அத்தகைய சிறப்புடைய தமிழிசையை நம் முன்னோர் பல்லாண்டுகளாக வளர்த்தனர். பிற்காலத்தில் முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, இராமலிங்க அடிகளார் போன்ற தமிழிசை அருளாளர்கள்

---

**"தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல்கலைக்கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும்"**

---

பலர் பாடிய இசைப்பாடல்கள் ஏராளம் உள்ளன. ஆனால், நம் தமிழகத்து இசைவாணர்களோ வேற்று மொழிப் பாடல்களையே பெரிதும் விரும்பிப் பாடினர். தமிழ்ப் பாடல்களைத் 'துக்கடா' என்று நிகழ்ச்சியின் இறுதியில் பாடினர். "தமிழகத்தின் தெருக்களில் தமிழ்தான் இல்லை" என்று பொங்கி எழுந்தாரே புரட்சிக் கவிஞர், அவரைப் போல் 'தமிழிசை மேடைகளில் தமிழ்தான் இல்லை' என்று அண்ணாமலை அரசரும் பொங்கியெழுந்தார்; அதனால், தமிழிசை இயக்கத்தைத் தொடங்கினார்.

"தமிழிசை புதிதன்று; தமிழிசை இயக்கம் படையெடுப்பும் அன்று. தமிழர் இசைச் செல்வமே இந்திய சங்கீதத்திற்குத் தாய் ஊற்றாக இருந்தது என்று தக்க புலவர்கள் ஆராய்ந்து சொல்லுகின்றனர். தமிழிசை வழிவழியாகப் பெருகி வந்தது" என்று முழக்கமிட்டார். அரசரின் கொள்கையைத் தமிழ் மக்கள் வரவேற்றுப் போற்றினர். ஆனால், எதிர்ப்பவர் சிலரோ தமிழில் கீதவர்ணங்கள் இல்லை என்றும், இசைக்கு மொழி அவசியமில்லை என்றும் கூறினர். ஆனால், அரசரோ ஆக்கபூர்வமாகச் சிந்தித்தார். நல்ல தமிழ்ப் பாடல்களை இயற்றுவோருக்குப் பரிசுகள் வழங்கினார். தம் பல்கலைக்கழகத்தின் வாயிலாகக் கீதவர்ணங்கள், தமிழிசைப் பாடல் தொகுதிகள் பலவற்றை வெளியிட்டார். (இதுவரை அவை 21 தொகுதிகளாக வெளிவந்துள்ளன). அவற்றில் ஆயிரத்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்கள் உள்ளன. இவற்றைத் தவிர இசைக் கருவிகள் பற்றியும் அவற்றை இயக்கும் முறைகள் பற்றியும் நூல்களை வெளியிடச் செய்தார். ஆங்காங்கே தமிழிசைப் பள்ளிகள் அமைக்க உதவினார். எங்கும் தமிழிசை மாநாடுகள் நடைபெறவும் தமிழிசைச் சங்கம், தமிழிசைக் கல்லூரிகள் தோன்றவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். இவ்வாறு பல்வேறு வகைகளிலும் தொண்டுகள் பல ஆற்றி, குறிக்கோள் வாழ்க்கை வாழ்ந்த கோமகனார் அண்ணாமலையார்.

புரட்சிக்கவிஞரின் கவிதை வரிகளில் கூறவேண்டுமென்றால்,

*"வயலும் ஏரும் மழையும் எருவும்*
*இருந்தும் என்ன செய்வேன்*
*என்னுமோர்*
*ஏழைக்கு விதைநெல் ஈந்தான்*
*போல*
*அரசன் அண்ணாமலை*
*திருநாட்டுக்குப்*
*பண்டைப் பெருமையும் பதியும்*
*நிதியும்*
*இருந்தும் வருந்தும் நிலைமை*
*எண்ணி*
*அறிவின் ஊற்றுத் திறந்தான்;*
*அப்பெரு*
*நிறுவனம் வெல்க, நீடு*
*வாழியவே"*

என்று கூறி மகிழ்வோம். •

# விண்வெளி

பேராசிரியர் ம. அருள்தளபதி

புவியின் காற்று மண்டலத்திற்கு அப்பால் உள்ள விண்வெளி என்பது, நம்மால் முழுவதும் அறிந்து கொள்ள முடியாத, எல்லையற்ற அண்ட வெளியாகும். விண்வெளியானது எல்லாத் திசைகளிலும் முடிவுற்ற அளவில் விரிவடைந்து கொண்டே செல்லும் ஒரு வெற்றிடப்பரப்பாகும். விண்வெளியில் பிரபஞ்சங்கள், பால்வழி மண்டலங்கள், விண்மீன்கள், நமது சூரியக் குடும்பம் எல்லாம் உள்ளன. பிரபஞ்சங்களுக்கிடையே உள்ள வெளியில் காற்று மண்டலம் கிடையாது. இரவானாலும், பகலானாலும் நமது காற்று மண்டலத்திற்கு அப்பால் உள்ள விண்வெளி இருண்டே காணப்படும்.



## பிரபஞ்சத் தோற்றம்

நமது பிரபஞ்சம் எவ்வாறு, எப்பொழுது உருவானது என்பதை அறிவியலார், ஹபுல்விதி (Hubble's Law) என்ற கோட்பாட்டிலிருந்து கருத்துரைத்துள்ளனர். சுமார் 1600 கோடி வருடங்களுக்கு முன்பு மிகுந்த அடர்த்தியும், மிக உயர்வெப்பநிலையும் கொண்ட நிறை ஒன்று வெடித்துச் சிதறியது. அப்போது இதன் கன பரிமாணம் சுழியாகும். இதன்பின் பிரபஞ்சம் விரிவடைந்து, காலம் செல்லச் செல்ல மெதுவாகக் குளிர்ந்தது. இந்நிலையில் பிரபஞ்சத்தில் தற்போது நாம் காணும் எந்த விண்பொருட்களும் இல்லை. பிரபஞ்சம் வெறும் கதிர்கள் நிறைந்ததாகக் காணப்பட்டது. இக்கதிர்களிலிருந்து நிறையுள்ள துகள்கள், அணுக்கள் முதலியன உருவாயின. எளிய தனிமங்களாக ஹீலியம், ஹைடிரசன், டிட்ரியம் முதலிய அணுக்கருக்கள் உருவாயின. இதன்பின் உருவான விண்முகில்கள் அண்டமாகப் பரிமாணித்தன. பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டே செல்வதால் அண்டங்கள் ஒன்றைவிட்டு ஒன்று விலகிச் செல்கின்றன. அறிவியலார் ஐன்ஸ்டின் (Einstein 1879-1955) விதிப்படி, விரிவ டைந்து கொண்டே செல்லும் பிரபஞ்சம் பல கோடி ஆண்டுகளுக்குப் பின் சுருங்கலாம். எவ்வாறெனில் பிரபஞ்சத்தில் மொத்த நிறை குறிப்பிட்ட அளவிற்கு மேலாக இருந்தால் பிரபஞ்சத்தின் சொந்த நிறை ஈர்ப்பு விரிவடைகின்ற அண்டங்களை ஒரு கட்டத்தில் தடைப்படுத்தி, பின்னர் இந்நிறை ஈர்ப்பினால் கவரப்பட்டுப்

பிரபஞ்சம் சுருங்கி மறுபடியும் ஒரு புள்ளியாக மாறும் வாய்ப்புண்டு. அவ்வாறன்றிப் பிரபஞ்சத்தின் நிறை குறிப்பிட்ட அளவுக்குக் குறைவாக இருந்தால் பிரபஞ்சம் முடிவில்லாது விரிவடைந்து கொண்டே செல்லும். இதனால் அண்டங்கள் ஒன்றை விட்டு ஒன்று தொடர்ந்து விலகிச் சென்று கொண்டேயிருக்கும். எனவே தற்போது நமது கண்ணுக்குப் புலப்படும் அண்டங்கள் நமது அண்டத்திலிருந்து வெகு தொலைவிற்குப் போய்விடும்.

## பிரபஞ்சத்தின் வடிவம்

பிரபஞ்சம் எத்தகைய வடிவமுடையது என்ற கேள்வி சற்று சிக்கலானது. எனினும் இதுவரை அறிவியலார் மேற்கொண்டுள்ள ஆய்வுகளினின்று மூன்று வடிவங்கள் பற்றிக் கருத்துரைத்துள்ளனர். அவை கோள வடிவான மூடிய பிரபஞ்சம், சமதளப் பிரபஞ்சம், பரவளை வடிவப் பிரபஞ்சம் என்பனவாகும். கோள வடிவான மூடிய பிரபஞ்சம் எல்லையற்றது; ஆனால் அளவிடக்கூடியது. இப்பிரபஞ்சத்தில் மையமோ அல்லது விளிம்புகளோ கிடையாது. ஆனால் சமதள மற்றும் பரவளை வடிவப் பிரபஞ்சம் எல்லையற்று எல்லாத் திசைகளிலும் பரந்துள்ளது. இதற்கும் விளிம்போ, மையமோ கிடையாது. இப்பிரபஞ்சத்தின் வயது என்ன என்பதை இதுவரை துல்லியமாகக் கணக்கிட முடியவில்லையாயினும், தோராயமாக 1800 கோடி ஆண்டு வயதுடையது என (இதுவரை நம்மால் முடிந்த ஆய்வுகளினின்று) அறிவியலார் கணக்கிட்டுள்ளனர். எல்லாம் அடங்கியுள்ள பிரபஞ்சம் 1000 கோடி ஒளி ஆண்டுகள் விட்டமுடையது என ஒருவாறு ஊகிக்கிறார்கள்.

## அண்டங்கள் (Galaxies)

அமாவாசை இரவில் நாம் விண்ணைத் துருவிப் பார்த்தோமானால், நம் கண்களுக்குச் சில இடங்களில் வெண்மையான பால் போன்ற வெளிச்சத் திட்டுக்கள் தென்படும். இவற்றுக்கு அண்டங்கள் என்று பெயர். விண்ணில் உள்ள இதுபோன்ற ஓர் இடத்தைத் தனது தொலைநோக்கியால் துருவிப் பார்த்துத்தான் முதன்முதலில் இத்தாலிய வானவியலார் கலிலியோ (Galileo, 1564-1642) அண்டத்தைக் கண்டறிந்தார். இது பல இலட்சக்கணக்கான விண்மீன்கள் அடங்கிய ஒரு பெரும் கூட்டமாகும். அண்டத்தில் உள்ள இப்பெரும் விண்மீன் கூட்டம் அவற்றுக்கு இடையே ஒன்றுடன் மற்றொன்று கொண்டிருக்கும் ஈர்ப்பு விசை காரணமாகக் கூட்டமாக உள்ளன.

சக்தி வாய்ந்த தொலைநோக்கிகளின் உதவியால் இதுபோன்ற பல இலட்சக்கணக்கான அண்டங்களை நாம் காணமுடியும். ஓர் அண்டத்திற்கும் மற்றொன்றுக்கும் இடைப்பட்ட தூரமானது 1000 முதல் 1,00,00,000 ஒளி ஆண்டுகள் வரை வேறுபடுகின்றது. (ஒரு ஒளி ஆண்டு என்பது ஒளி, நொடிக்கு 3,00,000 கி.மீ. வேகத்தில் ஓர் ஆண்டு பயணித்தால் ஆகும் தூரம்). பிரபஞ்சமானது பல அண்டங்கள் தெளிக்கப்பட்டுள்ளது போல் காணப்படுகின்றது. இந்த அண்டங்கள் எவ்வாறு உருவாயின ? பிரபஞ்சத்தில் ஏற்பட்ட பெரும் வெடிப்பிற்குப் பின் உருவான பெரும் நிறை கொண்ட வாயுக்கள் ஒவ்வொன்றும் அதனதன் வேகத்தில் சுழல ஆரம்பித்தன. இவ்வேக வேறுபாட்டின் காரணமாகப் பல்வேறு அளவிலான அண்டங்கள் உருவாயின. அவற்றின் வடிவம் நீள்வட்டமாகவும், ஒழுங்கற்ற வடிவம் உடையதாகவும், சுருள்வில் (Spiral) வடிவமாகவும் காணப்படுகிறது. மாஸ்கோ பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஓர் அட்டவணையில் இதுவரையில் 30,000 அண்டங்களின் இருப்பிடம், அவற்றின் உருவம், நிறம், பிரகாசம், சுழல் வேகம் முதலியவற்றை அளித்துள்ளனர். பால்வழி மண்டலம் என்றழைக்கப்படுகின்ற நமது அண்டத்திற்கு மிக அருகில் உள்ள அண்டம் *அண்ட்ரோமெடா* (Andromeda) ஆகும். இது சுமார் 20,00,000 ஒளி ஆண்டு தொலைவில் உள்ளது. அதாவது நம் கண்ணுக்குப் புலப்படும் அண்ட்ரோமெடாவின் ஒளியானது சுமார் 20,00,000 ஒளி ஆண்டுகளுக்கு முன் அதிலிருந்து புறப்பட்டது ஆகும். இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் 20,00,000 ஒளி ஆண்டுகளுக்கு முன் அண்டிரோமெடா இருந்த நிலையைத்தான் நம்மால் இப்போது காண முடிகின்றது. அது இப்போது இருக்கும் நிலையை இன்னும் 20,00,000 ஒளி ஆண்டுகள் கழித்துத்தான் நம்மால் காணமுடியும். நமது அண்டத்திற்கு அருகில் ஸ்கல்ப்டரி (Sculptory), ஃபார்கைஸ் போன்ற அண்டங்கள் உள்ளன. இவ்வாறு விண்வெளியில் எல்லாத் திசைகளிலும் அண்டக்கூட்டங்கள் தெரிகின்றன.

## நமது பால்வழி மண்டலம் (Our Milky Way)

நமது அண்டமானது சுருள்வில் வடிவமுடையது. சுருள்வில் போன்று பல கைகளையுடைய நமது அண்டத்தில் சுருள்கை (Spiralarm) போன்ற பகுதிகளில் மிக அதிகமான அடர்த்தியில் விண்மீன்கள் உள்ளன.

நமது சூரியன் பால்வழி மண்டலம் எனப்படும். நமது அண்டத்தில் உள்ள ஓரியன் நெபுலா (Orion Nebula) உள்ள ஓரயன் கை (Orion Arm) எனப்படும் பகுதிக்கு அருகாமையில் உள்ளது. நமது அண்டமானது சுமார் 1,00,000 ஒளி ஆண்டுகள் அளவு (விட்டம்) பரந்து விரிந்து காணப்படுகிறது. இதன் மையப்பகுதியானது நுண்மையான பனிக்கட்டி போன்ற தூசு துகள்களால் ஆனது. இம்மையப்பகுதி நமது சூரியனிலிருந்து சுமார் 32,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது. மேலும் நமது அண்டத்தின் வயது சுமார் 12,000 முதல் 14,000 மில்லியன் ஆண்டுகள் என்றும்; இதில் சுமார் 1,00,000 மில்லியன் விண்மீன்கள் உள்ளன என்றும் கணக்கிட்டுள்ளனர். நமது அண்டமானது அதன் அச்சைப் பற்றிச் சுழலும் வேகம், விளிம்புப் பகுதியைக் காட்டிலும் அச்சுக்கு அருகாமையில் உள்ள பகுதியில் மிகுந்து காணப்படுகிறது. அதாவது மையப் பகுதியானது அச்சைப் பற்றி ஒரு சுற்றை முடிக்க சுமார் 50,000 ஆண்டுகள் ஆகின்றது. நமது சூரியன், சூரியக் குடும்பத்திலுள்ள கோள்மீன்கள் மற்றும் நமது சூரியனுக்கு அருகாமையில் உள்ள விண்மீன்கள் ஆகியனவும் நமது அண்டத்தில் சுழன்று கொண்டுள்ளன. இந்நிலையில் சூரியன் அது அமைந்துள்ள அண்டத்தில் மைய அச்சைப் பற்றி ஒரு சுற்று சுற்றி வருவதற்கு சுமார் 225 மில்லியன் ஆண்டுகள் ஆகும் எனக் கணக்கிட்டுள்ளனர். இக்கால அளவுக்கு காஸ்மிக் ஆண்டு (Cosmic year) என்று பெயர். மேலும் நமது அண்டத்திற்கு இரண்டு துணை அண்டங்கள் உள்ளன. இவற்றுக்கு மெகல்லன் பெரிய வான்முகில் (Large Magelan Cloud), மெகல்லன் சிறிவான் முகில் (Small Megelan Cloud) என்று பெயர். இவை இரண்டும் நமது அண்டத்தின் கவர்ச்சியினால் நமது அண்டத்தைச் சுற்றிச் சுழல்கின்றன.



## குவாசர்கள் (Quasars)

இதுவரை நமது அறிவியல் வளர்ச்சியினால் உருவாக்கப்பட்டுள்ள கருவிகளாலும் ஆராய்ச்சிகளாலும் நமது கண்ணுக்கும், நமது கருவிகளின் புலனுக்கும் தெரியக்கூடிய எல்லை வரையில் பல விந்தைப் பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் 1963–இல் கண்டுபிடிக்கப்பட்ட குவாசர்கள் (Quasars) புதிரானவை. குவாசர் என்பது ஒரு கூட்டுச்சொல் ஆகும். குவாசர்கள் தோற்றத்தில் ஒரு விண்மீனைப் போன்றே காட்சியளிக்கின்றன. இந்த குவாசர்கள் பல கோடி ஒளி ஆண்டு தொலைவில் உள்ளன. இக்குவாசர்கள் பல்வேறு அளவுகளில் மிகுதியாக ஒளியை உமிழ்கின்றன. ஓர் ஒளித் தொலைநோக்கியைக் கொண்டு பார்த்தோமானால் குவாசர்கள் சாதாரண மங்கிய ஒரு விண்மீனைப் போன்றே காணப்படுகின்றன. ஆனால் வானொலித் தொலைநோக்கியைக் கொண்டு ஆய்ந்தோமானால், குவாசர்கள் வானொலி அலை மூலங்களாகவும் உள்ளது தெரிய வருகின்றது. அதாவது குவாசர்கள் வானொலி அலைகள் மற்றும் எக்ஸ் கதிர்களை ஒளியுடன் உமிழ்கின்றது. ஒரு குவாசரானது, நமது அண்டத்தில் 1,00,000–இல் ஒரு பகுதி அளவுடையது. ஆனால் அது உமிழும் ஒளியானது நமது அண்டத்தின் ஒளியைக் காட்டிலும், 100 முதல் 200 மடங்கு அதிகமாகும். இதுவரை

இதுபோன்று சுமார் 1,500 குவாசர்கள் கண்டறியப்பட்டுள்ளன. குவாசர்களின் கண்டுபிடிப்பு மேலும் பல ஆவலைத் தூண்டும் கேள்விகளை அறிவியலார்களிடையே எழுப்பியுள்ளது. இதனால் ஆராய்ச்சி வேட்கையும் அதிகரித்துள்ளது. பிரபஞ்சம் உருவாகத் தொடங்கிய முதல் மூன்று வினாடிகளில் அணுத்துகள்கள் உருவாயின எனில் அத்துடன் சேர்ந்து எதிர் அணுத்துகள்களும் உருவாகியிருக்க வேண்டும். ஆனால் அவை இதுவரை கண்டறியப்படவில்லை. கண்டறியப்படாத இவ்வெதிர் அணுக்கள், எதிர்ப்பொருட்கள் மற்றும் அவற்றின் நிறை, இயக்கம், ஆற்றல் எல்லாம் பிரபஞ்சத்தின் இயக்கத்தையும் வரலாற்றையும் தெரிவிக்கக்கூடியனவாக இருக்கலாம். எனவே இப்புதிர்களைக் கண்டறியத் தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

## விண்மீன்கள் (Stars)

16–ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிரபஞ்சத்தின் விரிவாக்கத்தையும், அதன் வியத்தகு பொருட்களையும் கலிலீயோ வெளிப்படுத்தினார். 18–ஆம் நூற்றாண்டின் இறுதியில் வில்லியம் ஹெர்ஷெல் (William Herschel) நமது அண்டமான பால்வழி மண்டலத்தை மிகப் பெரிய தொலைநோக்கி கொண்டு கண்டறிந்து கூறினார். இப்பொழுது ஏற்பட்டுள்ள அறிவியல் வளர்ச்சி மற்றும் கருவிகளைக் கொண்டு 8 மில்லியனுக்கும் மேலான அண்டங்கள் உள்ளதாக அறிவியலார் கருத்துரைத்துள்ளனர். இத்தகைய அண்டங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 14,000 கோடி விண்மீன்கள் இருப்பதாகவும் கணித்துள்ளனர்.

## விண்மீன்களின் தோற்றம்

விண்மீன்கள், வெப்பத்தையும், ஒளியையும் உமிழும் வாயுவினாலான வெப்பக் கோள்களாகும். விண்மீன்கள் பல்வேறு அளவுகளில், வெவ்வேறு நிறங்களில், வெவ்வேறு வெப்ப நிலையில் இருக்கின்றன. இதைப் பொறுத்து அவற்றின் ஒளிச்செறிவு மற்றும் நமது புவியிலிருந்து அவை இருக்கும் தொலைவு ஆகியன மாறுபடுகின்றன. நமது சூரியனும் ஒரு நடுத்தர அளவுடைய விண்மீன்தான். நமது புவிக்கு மிக அருகில் இருக்கும் விண்மீன் சூரியனாகையால், அது அளவில் பெரியதாகத் தென்படுகிறது.

இவ்விண்மீன்கள் எவ்வாறு தோன்றின எனப் பல ஆண்டுகளாக இதுவரை செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சி முடிவுகளிலிருந்து அறிவியலார் இப்போதைய நிலையில் பின்வருமாறு கருத்துரைத்துள்ளனர்.

விண்வெளியில் தூசும், வாயுவும் மிகக் குறைந்த அடர்த்தியில் காணப்படுகிறது. எல்லா விண்மீன்களும் தூசு நிரம்பிய வாயு விண்முகில்களிலிருந்து உண்டானவை. விண்மீன்கள் உருவாக்கம் நம்மால் அறிய இயலாத ஒரு நிகழ்வினால் தூண்டப்படுகிறது. இதனால் விண்முகிலிலுள்ள வாயுவும், தூசு துகள்களும் பொது மையத்தை நோக்கிச் செல்கின்றன. அதாவது தன் சொந்த நிறை ஈர்ப்பினால் விண் முகில் சுருங்கத் தொடங்குகின்றது. இதனால் அடர்த்தி சிறிது சிறிதாக அதிகரிக்க ஆரம்பிக்கிறது. இவ்வாறு மேலும் அதிகமான அளவு தூசுத் துகள்களும் வாயுவும் ஒன்று சேர்வதால், ஈர்ப்பு சக்தியின் அடர்த்தி காரணமாக அடர்த்தி அதிகமாவதால், அழுத்தம் அதிகமாகி வெப்பநிலை உயர்வடைகிறது. இம்மாறுதலின் போது ஒரு சில நூறு ஆயிரம் ஆண்டுகள் கழிந்தபின் வெப்பநிலை சில ஆயிரம் டிகிரி அளவு காணப்படும். மையத்தில் ஏற்படும் அழுத்த அதிகரிப்பு, நிறை ஈர்ப்பு சக்தியை ஈடுகட்டும் அளவுக்கு அதிகரித்தபின் விண்முகில் சுருங்குவது நின்றுவிடும். இந்நிலையில் தொடக்க விண்மீன் (PROTO STAR) உருவாகிறது. இருந்தாலும் இந்தத் தொடக்க விண்மீன் ஒரு முழு விண்மீன் அல்ல. இந்நிலையில் அணுச்சேர்க்கை வெப்ப உலையாக இது மாறவில்லை. எனவே நமது கண்ணுக்குத் தெரியக்கூடிய ஒளியை அது உமிழாது. ஆனால் அது வெளியிடம் அகச்சிவப்புக் கதிர்களைக் கொண்டு வானவியலார் தொலைநோக்கியில் காணலாம். தொடக்க விண்மீன் உருவானதும் விண்முகில் சுருங்குவது நின்றுவிட்டாலும், இதன் மையத்தில் நிறை ஈர்ப்பு சக்தியினால் ஏற்படும் சுருக்கம் பல மில்லியன் ஆண்டுகளுக்குத் தொடரும். இவ்வாறு சுருங்கும்போது உருவாகும் ஆற்றல், மையப்பகுதியை மேலும் வெப்பமடையச் செய்கிறது. இவ்வெப்ப நிலை ஒரு கோடி டிகிரி வரை உயரும் பொழுது விண்மீனின் அணு உலை கனல் விடத் தொடங்குகிறது. இந்த உயர் வெப்பநிலையில், விண்மீன்களின் மையப் பகுதியில் பேரழல் (மின்மம்–Plasma)

நிலையில் உள்ள ஹைடிரஜன் அணுக்கருக்கள் பிணைந்து, ஹூலியமாக மாறுகிறது. இவ்வணுக்கருப்பிணைப்பின் போது அதிக அளவில் சக்தி வெளிப்படுகிறது. இவ்வணுக்கருப் பிணைப்பு நிகழ்வு, விண்மீனுக்குப் பலகோடி ஆண்டுகளுக்கு ஆற்றலைக் கொடுக்கிறது. இந்நிலையில் இது ஒரு முழுமையான விண்மீனாகத் தோன்றிக் காட்சியளிக்கின்றது. இவ்வாறு விண்மீன் உறுதி நிலையை அடைய சுமார் 2000 இலட்சம் ஆண்டுகள் ஆகின்றது. இதன்பின் இவ்விண்மீன் ஆயிரம் கோடி ஆண்டுகள் நிலைத்துக் காணப்படும்.



எல்லா விண்மீன்களும் தனியாகப் பிறப்பதில்லை. பெரும்பாலான விண்மீன்கள் கூட்டமாகவே பிறக்கின்றன. சில இரட்டைகளாகப் பிறக்கின்றன. மேலும் சில நமது சூரியனைப் போல் குடும்பமாகச் சுற்றிலும் கோள்களுடன் பிறக்கின்றன. மிகப் பெரிய வாயு விண்முகில்களிலிருந்து பல விண்மீன்கள் கூட்டமாகப் பிறக்கின்றன. நமது சூரியனைப் போன்றுள்ள விண்மீன்கள் தனியாக மிகச் சிறிய கோள வடிவ இருண்ட விண்முகில்களிலிருந்து பிறக்கின்றன. கூட்டமாக அதிக எண்ணிக்கையில் பிறக்கும் விண்மீன்கள் அப்படியே நீண்ட காலம் இருப்பதில்லை. ஒரு சில மில்லியன் ஆண்டுகளில் அவை அண்டம் முழுவதும் பரவி விரவிக் காணப்படும்.

## நிறமும் வயதும் (Colour and Age)

இரவு வானத்தைக் கண்ணால் நோக்கினால் விண்மீன்கள் வெவ்வேறு நிறங்களில் ஒளிர்வதைக் காணமுடிகிறது. விண்மீன்களின் ஒளிச்செறிவின் அளவும் மாறுபடுகின்றது. அவற்றின் நிறத்தில் காணப்படும் மாறுபாட்டை அறிய நிறக்குறிப்பு எண் (Colour Index) பயன்படுத்தப்படுகிறது. இந்நிறக்குறிப்பு எண் சுழி (Zero) எனில் அவ்வகை விண்மீன்கள் வெள்ளை நிற விண்மீன்கள் என்றும்; நிற குறிப்பு எண் சுழியை விட அதிகமாக இருந்தால், அதாவது நேர்மதிப்பைப் (Posi-tive) பெற்றிருந்தால் அவ்வகை விண்மீனின் நிறம் சிவப்பு நிறப் பகுதியை நோக்கியதாக இருக்கும். உதாரணமாக சைரஸ் (Sirus) என்ற விண்மீன், சுழி நிறக் குறிப்பு எண்ணுடைய வெள்ளை விண்மீனாகும். மாறாக, அன்டாரஸ் (Antares) 1.5 நிறக்குறிப்பு எண் கொண்ட சிவப்பு விண்மீனாகும். இவ்வாறாக ஒரு விண்மீனின் நிறக்குறிப்பு எண் அறியப்பட்டால், அதிலிருந்து அந்த வெண்மீனின் மேற்பரப்பு வெப்பநிலையைக் கணிக்க முடியும். தற்போது நிறமாலை காட்டியின் வழியாக விண்மீன்களை ஆராயும்பொழுது அவற்றின் நிறம், வயது, அளவு அவை செல்லும் திசை, வேகம், அவற்றில் அடங்கியுள்ள தனிமங்கள் ஆகியவற்றை எளிதில் அறிய முடிகின்றது.

இவ்வாறு நிறமாலை காட்டியைப் பயன்படுத்தி ஏறக்குறைய 5,00,000 விண்மீன்களை ஆய்வு செய்து அவற்றின் நிறமாலை வரிகளைக் கொண்டு ஏழு தொகுப்புகளாகப் பிரித்துள்ளனர். இத்தொகுப்புகளுக்கு நிறமாலைப் பிரிவுகள் என்று பெயர். அவற்றுக்கு O.B.A.F.G.K. மற்றும் M என்று அடையாளக் குறிப்பு இட்டுள்ளனர். இந்நிறமாலைப் பிரிவுகள், விண்மீன்களின் வெப்பநிலையைப் பொறுத்துப் பிரிக்கப்பட்டவை. O பிரிவு விண்மீன்கள் மிகுந்த வெப்பமுடையவை. அவற்றின் மேற்புற வெப்பநிலை 30,000 டிகிரி சென்டிகிரேடுக்கும் மேல் இருக்கும். M பிரிவு விண்மீன்களின் மேற்புற வெப்பநிலை 3000 டிகிரி சென்டிகிரேட் அளவு காணப்படும். நமது சூரியனின் மேற்புற வெப்பநிலை சுமார் 6000 டிகிரி சென்டிகிரேட் அளவு காணப்படும். நமது சூரியன் G பிரிவு விண்மீனாகும். இவ்வாறாக

B பிரிவு விண்மீன்களின் மேற்புற வெப்பநிலை சுமார் 20,000 டிகிரி சென்டிகிரேடுக்கு மேலும்; A பிரிவு விண்மீன்களில் சுமார் 16,000 டிகிரி சென்டிகிரேடுக்கு மேலும்; F பிரிவு விண்மீன்களில் சுமார் 4000 டிகிரி சென்டிகிரேட் அளவும் வெப்பநிலை காணப்படும்.

## விண்மீன்களின் ஆயுள் (Life of Stars)

விண்மீன்களின் ஆயுள், அவற்றின் நிறை வெப்ப ஆற்றல் இவற்றுடன் தொடர்புடையது. விண்மீன்கள் அவற்றுள் ஏற்படும் நிலை ஈர்ப்பை ஈடுகட்ட அதிகமான ஆற்றலைச் செலவிட்டுக் குறிப்பிட்ட வெப்பநிலையைக் காக்க வேண்டியுள்ளது. இவ்வாறு உயர் உள்வெப்பநிலையைக் காக்க ஹைட்ரஜன் அணு கருப்பிணைவு அதிகமாகவும் துரிதமாகவும் நடைபெறும். இதனால் பெரிய விண்மீன்கள் துரிதமாகத் தமது ஹைட்ரஜன் எரிசக்தியை இழந்து குளிர்ந்து சுருங்கி ஆயுளை இழக்கின்றன. சொல்லப்போனால் ஒரு விண்மீனின் ஆயுள் அதன் நிறையின் இருமடிக்கு எதிர்விகிதப் பொருத்தத்தில் இருக்கின்றது. அதாவது நிறை, இருபங்கு அதிகரித்தால் ஆயுள் நான்கில் ஒன்றாகக் குறைந்துவிடும். இதிலிருந்து விண்மீன்களின் அளவும் நிறைவும் அதிகரிக்க ஆயுள் குறைவது தெரிகின்றது. நமது சூரியன் ஒரு நடுத்தர அளவுடைய விண்மீன் ஆகும். இதன் ஆயுள் சுமார் 10,000 மில்லியன் ஆண்டுகள். இதுவரை நமது சூரியன் பாதி ஆயுளை இழந்துள்ளது. நமது சூரியனைப் போல் முப்பது மடங்கு பெரிய விண்மீன் ஒரு சில மில்லியன் ஆண்டுகள் ஆயுளையும், நமது சூரியனை விட அளவில் மிகச் சிறிய விண்மீன் நமது சூரியனின் ஆயுளைவிட அதிக மில்லியன் ஆண்டுகள் ஆயுளையும் பெற்றிருக்கும்.

## சிவப்பு ராட்சச விண்மீன் (Red Giant Star)

நமது சூரியன் அல்லது அதற்கு மேலான நிறையுடைய விண்மீன்கள் முதலில் விண்முகில் சுருங்குவதால் உருவாகிப் பின் மையக்கருவில் நிகழும் அணுக்கருப்பிணை வால் ஹைட்ரஜன் எரிந்து தீர்ந்ததும், மையக்கரு சுருங்கும். அதே நேரத்தில் விண்மீனின் மேல் அடுக்கு வெளிப்புறமாக விரியும். இவ்வாறு விண்மீனில் எதிரும் புதிருமான நிகழ்வு ஒரே நேரத்தில் நடைபெறும். இதனால் விண்மீன் உருவில் மிகப் பெரியதாக மாறும். அதன் நிறமும் சிவந்து காணப்படும். எனவே இவ்வகை விண்மீன் சிவப்பு ராட்சசன் (Red Giant) என்றழைக்கப்படுகிறது. இவ்வகைச் சிவப்பு ராட்சச விண்மீன்களை இரவு விண்ணில் எளிதில் காணலாம். இவற்றுள் சில, விருச்சிக உடுக்கூட்டத்தில் உள்ள அண்டாரஸ், இடப உடுக்கூட்டத்திலுள்ள ரோகினி, மிதுன உடுக்கூட்டத்திலுள்ள புணர்வசு மற்றும் பூட்டஸ் (Bootes) உடுக்கூட்டத்திலுள்ள சுவாதி ஆகிய விண்மீன்களாகும். நமது சூரியனும் 500 கோடி வருடங்களுக்குப் பிறகு இன்றுள்ள அளவைப் போல 100 மடங்களுக்கு மேல் விரிவடைந்து சிவப்பு ராட்சச விண்மீனாக மாறும். இந்நிலையில் நமது புவி இச்சிவப்பு ராட்சச விண்மீனுள் அடங்கிவிடும். அப்பொழுது இதன் மையக் கருவில் ஹீலியமும், அதைச் சுற்றி உள்ள அடுக்கில் ஹைடிரஜன் அணுக்கருச் சேர்க்கையும் நடைபெறும். இதன்பின் நாளடைவில் மையத்தில் உள்ள ஹீலியம் அணுக்கரு எரிந்து சக்தியை உமிழும். இது மிக விரைவாக நடைபெறும். மேல் ஓடுகள் வெளிநோக்கி விரிந்து இறுதியில் மேல் ஓடுகளற்ற மையக்கரு மெதுவாகக் குளிர்ந்து வெள்ளைக்குள்ளனாக (White Dwarf) மாறுகிறது. இதன் மையக்கரு கார்பனால் ஆக்கப்பட்டிருக்கும்.

## வெள்ளைக்குள்ள விண்மீன் (White Dwarf Star)

விண்மீனில் மேல் அடுக்கு விரிவடைந்து மையக்கரு தொடர்ந்து சுருங்கியதும், மையக்கருவில் அழுத்த மிகுதியால் வெப்பநிலை உயர்வடைகிறது. இவ்வெப்ப நிலை ஒரு நிலையில் 10 கோடி டிகிரி வரை காணப்படும். இவ்வுயர் வெப்பநிலையில் ஹீலியம் அணுக்கருப் பிணைவு ஏற்படும். இதனால் கார்பன் அணுக்கரு உண்டாகிறது. இந்தக் கட்டத்தில் வெப்பநிலை உயர்வு தாங்காது மையக் கருவின் மேல்பகுதி வெடித்துப் பெரியதாகி, மேல் ஓடுகள் விரிந்து வெளிப்புறமாக வளையம் போல் விரிவடைந்து கொண்டே செல்கின்றது. மையக்கரு மட்டும் மேலும் சுருங்கி வெள்ளைக் குள்ளனாக மாறும். இவ்வாறு மேல் ஓடுகள் வெடித்து விரிவடைவது நோவா வெடிப்பு எனப்படும். சூரியனின் எடையில் மூன்று மடங்குக்குக் குறைவான எடையுடைய விண்மீன்கள் இவ்வித நோவா (Nova) வெடிப்பிற்குப் பின் வெள்ளைக் குள்ளனாக மாறுகின்றன. இந்த வெள்ளைக் குள்ள விண்மீன்கள் வெளியிடும் புறஊதாக் கதிர்கள், சூழ்ந்துள்ள வளையத்தை நீலநிறத்தில் ஒளிரச் செய்கின்றன.

## நியூட்ரான் விண்மீன் (Neutron Star)

விண்மீனின் மையக்கரு சுருங்கியதால் நமது சூரியனின் எடையை விட அதிகத் திணிவுடைய விண்மீன்களில் மையக்கருவில் வெப்பம் மேலும் அதிகரித்து சுமார் 60 கோடி டிகிரியை அடைகிறது. இந்நிலையில் கார்பன் மற்றும் ஹுலியம் அணுக்கருக்கள் பிணைந்து ஆக்ஸிசன் அணுவைத் தோற்றுவிக்கின்றன. முன் கூறிய அண்டாரஸ் மற்றும் திருவாதிரை (Betelgeuse) போன்ற சிவப்பு இராட்சச விண்மீன்களில் தற்போது இவ்வாறு கார்பனும், ஆக்ஸிசனும் உருவாகிறது. பின் ஆக்ஸிசன் அணுக்கள் சேர்ந்து மக்னிசியமும், அதன்பின் சல்பரும் இறுதியில் இரும்பும் உருவாகிறது. இந்நிலையில் விண்மீனின் மையத்தில் இரும்பும் வெளிப்பகுதிகளில் அடுக்குகளாக ஹைட்டிரஜனும் இருக்கும். மேலும் மையத்தில் வெப்பநிலை 500 கோடி டிகிரியாக உயர்வடைய நியூடரினோக்கள் (Neutrino) உருவாகின்றன. இவை மையத்திலுள்ள அனைத்து ஆற்றலையும் வெளியேற்றிவிடும். அனைத்து ஆற்றலையும் இழந்து மையக்கரு மேலும் சுருங்கும். இப்போது வெப்பநிலை 600 கோடி டிகிரியை எட்டும். இந்நிலையில் இரும்பு அணுக்கள் சிதைந்து ஹுலியமாகவும், நியூட்ரான்களாகவும் மாறும். நிறையீர்ப்பதினால் மேலும் சுருங்க, சில வினாடிகள் எலெக்ட்ரான்கள் அணுக்கருவில் உள்ள புரோட்டான் (Proton) களுடன் அழுத்தப்பட்டு, நியூட்ரான்களாக மாற்றப்படும். இந்நிலையில் இவ்விண்மீனில் வெறும் நியூட்ரான்கள் மட்டுமே இருக்கும். இதன் விட்டம் சுமார் 40 கிலோ மீட்டருக்கும் குறைவானதாகக் காணப்படும். இவற்றுக்கு நியூட்ரான் விண்மீன்கள் (Neutron Stars/ Pulsars) என்று பெயர். இவற்றின் ஒளிர்வு மங்கிக் காணப்படும்.



## கருப்புத்துளை (Black Hole)

நியூட்ரான் விண்மீன்களின் நிறை குறிப்பிட்ட அளவுக்கு மேல் இருந்தால் அதன் நிறையீர்ப்பினால் மேலும் சுருங்கிக் கருப்புத்துளைகள் (Black Hole) உண்டாகின்றன. இவ்வகைக் கருப்புத்துளைகளில் ஈர்ப்பு சக்தி மிக அதிகமான அளவுடையதாகும். இதிலிருந்து ஒளிகூட விடுபட்டு வர இயலாது. ஒரு கருப்புத்துளையின் நிறை 100 மில்லியன் சூரியன்களின் நிறைக்குச் சமமாகும். இவ்வகைக் கருப்புத் துளைகள் எக்ஸ் கதிர்களையும், அகச்சிவப்புக் கதிரையும் வெளியிடுகின்றன. இதனால் விண்வெளியில் இவற்றைக் கண்டறிவது எளிதாக உள்ளது.

இரவில் வெட்ட வெளியான ஓர் இடத்திலிருந்து நாம் கண்ணால் விண்ணை நோக்கினால் பல்லாயிரக்கணக்கான விண்மீன்களைக் காணலாம். இவை யாவும் கூட்டம் கூட்டமாகச் சிறியதாகவும், பெரியதாகவும் காணப்படுகின்றன. இக்கூட்டங்களை நன்கு உற்றுப்பார்த்தால், சில உருவங்களுடன் ஒத்திருப்பதைக் காணலாம். நமது முன்னோர்கள் இந்த உருவங்களைக் கொண்டு ஓரயன் (Orion) வேட்டைக்காரன், சப்தரிஷி மண்டலம் (Great Bear Ursa major), சிறுகரடி (Little Bear, Ursa Minor), கசியோப்பியா (cassiopera), தென்சிலுவை (Southern Cross), இடபம் (Taurus), மிதுனம் (Gemini), சிம்மம் (Leo), விருச்சிகம் (Scorpio) என ஒரு சில விண்மீன் கூட்டங்களுக்குப் பெயரிட்டுள்ளனர். இவ்விண்மீனின் கூட்டங்களுக்கு உடுக்கூட்டங்கள் (Constellations) என்று பெயர். இதுவரை இவற்றில் 88 உடுக்கூட்டங்களுக்குப் பெயரிடப்பட்டுள்ளது. சூரியன் தினமும் புவியைச் சுற்றி வருவது போல் காட்சியளிக்கும் பாதையை ஒட்டிப் பன்னிரண்டு உடுக்கூட்டங்கள் உள்ளன. இவற்றையே மேஷம் (Aries), இடபம் (Taurus), மிதுனம் (Gemini), கடகம் (Cancer), சிம்மம் (Leo), கன்னி (Virgo), துலாம் (Libra), விருச்சிகம் (Scorpio), தனுசு (Sagittarius), மகரம் (Capricorn), கும்பம் (Aquarius), மீனம் (Pisces) என்ற பன்னிரெண்டு ராசிகளாக (Zodiac) நாம் அறிந்துள்ளோம். புவி சூரியனைச் சுற்றிவர ஒரு வருடம் ஆகிறது. இதில் சூரியன் ஒவ்வொரு திங்களும் ஒரு ராசியைக் கடக்கிறது. இவ்வாறு

ஒரு திங்களில் சூரியன் எந்த ராசியில் உள்ளதோ அதையே அன்றைய ராசியாக நாம் கருத்தில் கொள்கிறோம். மேலும் இப்பன்னிரண்டு தொகுதிகளையும் 27 சிறு பிரிவுகளாகப் பிரித்து அவற்றை அஸ்வினி, பரணி முதலான 27 நாள்மீன்கள் என்பர். சந்திரன் புவியை ஒரு முறை சுற்றிவர ஏறக்குறைய 27 நாட்கள் ஆகிறது. அதாவது சந்திரன் ஒவ்வொரு நாளும் இவ்விருபத்தேழு சிறு உடுக்கூட்டத் தொகுதிகளில் ஒன்றின் வழியே கடக்கிறது. சந்திரன் ஒரு நாளில் எந்த நாள் மீனில் (Star) காணப்படுகிறதோ அதையே அன்றைய நாள்மீன் என நாம் கருத்தில் கொள்கிறோம்.

சூரியனின் பயணத் தோற்றப் பாதையில் இருக்கும் இப்பன்னிரண்டு உடுக்கூட்டங்களுக்கும், வட துருவத்திற்கும் இடையே 30 உடுக்கூட்டங்களும்; இத்தோற்றப்பாதைக்கும் தென் துருவத்திற்குமிடையே 46 உடுக்கூட்டங்களும் இருக்கின்றன. இக்கூட்டங்களை இரவில் வெளிச்சமில்லாத வெட்ட வெளிப்பகுதிகளிலிருந்து பார்த்தால் நன்றாகத் தெரியும்.

அண்டவெளியில் புதிய கோள்மீன்கள் (Extra Solar Planets)

நமது சூரிய மண்டல அமைப்புக்கு வெளியில் அண்ட வெளியில் வெகு தொலைவில் உள்ள ஒரு சில விண்மீன் (Star) களைச் சுற்றிவரும் கோள்மீன்கள் (Planets) 51 வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 10 கோள்மீன்கள் கி.பி.2000–ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டவை. மேலும் இரண்டு விண்மீன்களைத் தவிர மற்ற விண்மீன்கள் ஒரே ஒரு கோள்மீனைக் கொண்டவையாக இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சூரியனைப் போன்று ஒன்றுக்கு மேற்பட்ட கோள்மீன்கள் அமைப்புடைய (Multiple Planets System) விண்மீன்கள் இரண்டு இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவை அப்ஸிலான் அன்டிரோமிடா (Upsilon Andromedae). விண்மீனைச் சுற்றிவரும் மூன்று



கோள்மீன்கள் மற்றும் மே 2000–இல் கண்டுபிடிக்கப்பட்ட வெலா (Vela) உடுக்கூட்டத்தில்(Constellation) உள்ள விண்மீன் HD 83443–ஐ சுற்றிவரும் வாயுவினாலான சனிக்கோள்மீனின் அளவையொத்த இரண்டு கோள்மீன்களான HD 834436B மற்றும் HD 83443C ஆகும். இது நமது சூரிய மண்டல அமைப்பிலிருந்து 141 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.

சமீபத்திய இக்கோள்மீன்களின் கண்டுபிடிப்பு அண்டவெளியில் கோள்மீன்களின் அமைப்பு பரவலாக இருக்கக்கூடிய ஒன்று என்பது தெளிவாக்குகின்றது. இவற்றில் உயிரின் வாழ்க்கைக்கு ஏதுவான சூழ்நிலையுடையவையும் இருக்கலாம். உலகில் இதுவரை நாம் அடைந்துள்ள அறிவியல் வளர்ச்சி மற்றும் கருவிகளின் மேம்பாடு ஆகியனவற்றைக் கொண்டு இவற்றை சரிவர கண்டறிய இயலவில்லை. எதிர்காலத்தில் புதிய கருவிகளின் கண்டுபிடிப்பும், மேலும் அறிவியலில் நாம் அடையும் வளர்ச்சியும் இவற்றைக் கண்டறிய உதவலாம். அவ்வாறெனில் சூரியனின் கோள்களில் ஒன்றாகிய புவியில் உயிரினங்கள் உள்ளதுபோல், பிரபஞ்சத்தில் உள்ள கோடானுகோடி விண்மீன்களின் சில கோள்களில் உயிர்கள் வாழ வாய்ப்பு உண்டு. அவர்களின் அறிவு வளர்ச்சி நம்மைக் காட்டிலும் மேம்பட்டிருந்தால் நம்மைப் போல் அவர்களும் விண்மீன்களையும் அவற்றுக்குக் கோள்கள் உள்ளனவா என்றும், அவற்றில் உயிரினங்கள் உள்ளனவா என்றும் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கலாம். இதற்கு எதிர்காலத்தில் நமக்கு விடை கிடைக்கும்.

*தகவல் :*

**மனோரமா இயர்புக் 2001**

• • •

# தூய பரத நாடு

— அ. கிருஷ்ணன்



புத்தர் பிறந்த நாடு — இது
போதம் நிறைந்த நாடு!
சித்தர் பதினெண்மரும் — பிறந்து
சீருயர்த்த நாடு!

நித்தம் புதுமைபலவும் — கண்ட
நேயமிக்க நாடு!
சுத்தசைவம் தழைக்க — உயர்ந்த
தூய பரத நாடு!

கன்னல் தேனுபோலும் — மொழிகள்
கலந்தினிக்கும் நாடு!
அண்ணல் காந்தி பிறந்து — கருணை
அன்புயர்த்த நாடு!

இன்னல் எங்கு உறினும் — அதனை
விலக்கி மகிழும் நாடு!
செந்நெல் விளையும் நாடு —
அறங்கள்
செழித்து ஓங்கும் நாடு!

# அம்பு எய்தவனும் அன்பு பெய்தவனும்

– டாக்டர் வெ. வரதராசன்

இராமாயணத்தில் வாலி வதை, ஆய்வாளர் பலரின் விமரிசனத்திற்கு உள்ளாக்கப்பட்ட இலக்கியச் சிக்கல். ''கருணை ஆர்கலி'' எனக் கவிஞனால் வருணிக்கப் பெற்றவனும், ''தருமத்தின் தனிமூர்த்தி'' என விராதனால் விளம்பப் பெற்றவனும், 'அருள் உடை வீர' என முனிவர்களாலும், 'எல்லைதீர் நல்லறத்தின் சான்றவனோ' எனக் கவந்தனாலும் புகழப் பெற்றவனும் ஆவான் இராமபிரான்.

'மனமும் கண்ணும் கையும் செம்மை உடையவாகப் பெற்றவன்' எனவும், 'பொன்னின் முன் ஒளிரும் பொன்' எனவும், 'புகழின் புகழ்' எனவும், 'மெய்யின் மெய்' எனவும் தயரதனால் பாராட்டப் பெற்றவன் இராமன்.

'தென் சொல் கடந்தான், வடசொல் கலைக்கு எல்லை தேர்ந்தான்' – கவிஞன், அறங்கள் தோன்றுதற்கு விளைநிலமாய்த் திகழும் திருமேனி உடையவன், உலகத்திற்கெல்லாம் ஒழுக்கத்தால் வேதமே போன்றவன்– கைகேயி.

'கண்ணினும் நல்லன், கற்றவர் கற்றிலாதவரும் உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பர்' – வசிட்டன்

'உலகினுக்கு அறத்தின் ஆறு எலாம் இழைத்தவன்', 'அருமையின் நின்று உயிர் அளிக்கும் ஆறுடைத் தருமம்' என வாலியாலேயே வாயார வாழ்த்தப் பெற்றவனான இராமன் வாலி வதத்தை நிகழ்த்துகிறான்.

**வாலி**

வாலி என்பவன் வரம்பில்லாத ஆற்றலான். தனது தோள்வலியாலும், வால்வலியாலும் மலையினை ஒத்தவன். தூணில் தோன்றிய மானுட மடங்கலைப் போன்றவன். தேவர்கள் பொருட்டுப் பாற்கடலைத் தன்னந்தனியனாய்க் கடைந்தவன். வெண்ணிலவு மண்டிலம் மண்ணகத்து வந்து உலவுவதைப் போன்றவன். கூற்றுவனும் அவன் பெயர் கேட்ட அளவில் குலைநடுங்குவான். திசையானை –களின் விசை கலங்கச் செய்த இராவணனும் வாலியின் வாலின் வலிமையைக் கண்டு அஞ்சி நடுங்கியவன். சிவ பத்தியிற் சிறந்தவன். நாள்தோறும் எட்டுத் திசைகளிலும் உள்ள மலைகளின் உச்சிகளுக்குத் தாவிச் சென்று சிவ பூசை நிகழ்த்தியவன்.

இராமனின் வில்லின் பெயர் கோதண்டம். அது தெய்வீக ஆற்றல் வாய்ந்தது. அவன் ஏவிய அம்பு, ஏவிய பணியை முடித்துப் பின்னர் தானே அவனின் ஏவத்துள் (அம்பறாத்தூணி) திரும்பி வந்து தங்கும் தன்மையுடையது.

*''மேருவை உருவல் வேண்டின், விண்பிளந்து ஏகல் வேண்டின்*
*ஈரெழு புவனம் யாவும் முற்றுவித் திடுதல் வேண்டின்*
*ஆரியன் பகழி வல்லது''*

என்று சொல்லப்படுகிறது.

அத்தகைய அம்பைத் தடுத்து நிறுத்திய ஒரே பாத்திரம் வாலி தான்.பிற பாத்திரங்களான தாடகையாலோ, கரதூடணர்களாலோ, பரசுராமனாலோ, கும்பகர்ண னாலோ, இந்திரசித்தாலோ, இராவணனாலோ இராமனின் அம்பைப் பிடிக்கவோ நிறுத்தவோ முடியவில்லை. ஏன் ? அங்கெல்லாம் அவ்வம்பு அறத்துடன் அல்லது வீரத்துடன் செயலாற்றியது. வாலியின் விஷயத்தில் அது அறத்துடனும் செயல்படவில்லை, வீரத்துடனும் செயல்படவில்லை. ஆம் தீயோரை அழிக்கவும் தூயோரைக் காக்கவுமே இராமனின் கருவியாக இருந்த அம்பு வாலியினிடத்து அறத்திற்குப் புறம்பாகச் செலுத்தப்பட்டது.

வாலி இராமனுக்கோ அவன் தம்பி இலக்குவனுக்கோ அவன் மனைவி சீதைக்கோ எவ்வித ஊறும் இழைத்தவனில்லை. இது வாலி குற்றுயிரும் குலை உயிருமாக மரணப்படுக்கையில் கிடக்கும் போது, அவனின் அருமை மகன் அங்கதன், வாயினால் சொல்லப்பட்டுள்ளது.

*''எந்தையே எந்தையே இவ்*
*எழுதிரை வளாகத்து யார்க்கும்*
*சிந்தையால், செய்கையால் ஓர்*
*தீவினை செய்திலாதாய்!''*

கவிஞனே, சிறியின சிந்தியாதான் என வாலியைப் பற்றிச் சொல்கிறான். காகுத்தன் வாலியைக் கொல்வதற்குரிய காரணங்காளாகக் கூறுபவை எவை என்பதை முதலில் காண்போம்.

அனுமனே இராம இலக்குவரை அழைத்துச் சென்று சுக்கிரீவனுக்கு அறிமுகப்படுத்தினான். சுக்கிரீவனுக்கு ஏற்பட்ட துன்பங்களைச் சொன்னான். ''வாலி, தன் தம்பி என்றும் பாராமல் சுக்கிரீவனைத் தாக்கி நாட்டைவிட்டு ஓடுமாறு செய்தான். அவன் மனைவி உருமையையும் கவர்ந்து கொண்டான்'' என்றான். இதைக்கேட்ட இராமன் சீற்றம் மிகக் கொண்டான்.

தனக்கோ தன்னைச் சார்ந்தவர்க்கோ எவ்விதமான தீங்கையும் இழைக்காதவனாகிய வாலியை வதம் செய்வதாக வாக்குறுதியை அளித்தான். ''ஏழேழு உலகங்களும் வாலியின் உயிரைக் காப்பதற்கு உதவியாக வந்து என்னைத் தடுத்தாலும் என் அம்பினால் அவனை அழித்து நாட்டின் தலைமையுடன் உன் தாரத்தையும் உனக்குத் தருவேன்'' என்றான்.

இராமன் இவ்வாறு முன்பின் யோசியாமல் திடுதிப்பென்று ஒரு வாக்குறுதியை வழங்கியதற்குக் காரணம் அவன் மனநிலை மனைவியைப் பிரிந்த வேதனையில் வெந்து கொண்டிருந்தது அவன் மனம். வாலியே இதனைத் தெளிவுபடக் கூறுகிறான்.

*''ஆவியை சனகன் பெற்ற*
*அன்னத்தை, அமிழ்தின் வந்த*
*தேவியைப் பிரிந்த பின்னைத்*
*திகைத்தனை போலும் செய்கை''*

என்பதைக் காண்க.



அண்ணனும் தம்பியும் போர் புரிந்து கொண்டிருக்கும் போது ரகுகுலத் தோன்றலாகிய இராமன் மறைந்திருந்து வாலியின் மேல் அம்பினைத் தொடுத்தான்.

வில்லறம் துறந்த இச்செய்கையை வாலி எண்ணித் தனக்குத்தானே நாணமுற்றான். அரக்கர் செய்த தீங்கிற்காக குரக்கர் இனத்தலைவனாகிய என்னைக் கொலை செய்யும்படி மனுநெறி கூறிற்றா? தந்தை தந்த அரசச் செல்வத்தைத் தம்பிக்குக் கொடுத்து நாட்டில் ஒரு செயலைச் செய்து காட்டில் ஒரு செயலைச் செய்தது முறையற்ற செயல் எனக்கூறும் நீ, இத்தகைய செயலைச் செய்யலாமா? என வினவினான்.

வாய்மையை நிலைநிறுத்தத் தன்னுயிரையே துறந்த தூயவன் மைந்தனா நீ, தாயின் மூலம் தனக்குக் கிடைத்தஅரச பதவியை தீவினை என்னத் துறந்த பரதனுக்கு முன் நீயும் தோன்றினாயோ? அரச நீதியாகிய அறம் உம் குடியிற் பிறந்தவர்கட்கு இயல்பாய் அமைந்ததாயிற்றே. இருந்தும் நீ ஆவி அனைய தேவியைப் பிரிந்ததால் சிந்தை கலங்கி அறச் செயலிலிருந்து வழுவினாயோ? ஒரு பாவமும் அறியாது வாழும் குரங்கினத்தின் மீது கலிகாலத்தின் கொடுமை சூழ்ந்ததோ? ஒழுக்கமும் விழுப்பமும் எளியவர்கள் மட்டுமே கடைப்பிடித்தற்குரியனவோ?

நடுவுநிலைமையில்லாத இச்செயலைச் செய்தது ஏன்? நீ செய்த இச்செயல் வீரமற்றது மட்டுமன்று அறநூல்களுக்கு அப்பாற்பட்டதும் வாய்மை

இல்லாததுமாகும். திங்களுக்குக் களங்கம் ஒன்று இருப்பதைப் போன்று சூரியகுலத்திற்கும் ஒரு களங்கம் நீ பிறந்ததால் உண்டாகிவிட்டதே ? என் தம்பி வலியவந்து போர்க்கு அழைத்தான். அதனால் தான் நானும் அவனுடன் போர் செய்தேன். அப்போது ஒளிந்து இருந்து நீ என் உயிரை உண்டாய். மார்பில் அம்புபட்டு யான் உயிர் துறக்கும் நிலையில் உள்ள போது ஆண் சிங்கத்தை ஒத்த பெருவீரனாகிய நீ, என் கண்ணிற்படாதபடி இவ்விடத்தை விட்டு ஓடிவிடுதலே முறையாகும். அவ்வாறு ஓடாமல் நான் அடிபட்டுக் கிடக்கும் இவ்விடத்திலேயே என் கண் முன்பே நாணமின்றி நிற்கின்றனையே! வில் வீரனே (இகழ்ச்சிக் குறிப்பு) அறநூல்களின் விதிகளையும் நும் குலத்துப் பெரியோர்கள் மேற்கொண்டொழுகிய ஒழுகலாறு களையும் பேணாது காற்றிலே பறக்க விட்டாய். நின் செயல் மேற்போக்காக நோக்குமிடத்து வாலி என்ற பெயருடைய குரங்கினைக் கொன்றதாகத் தோற்றமளித்தாலும், ஆழ்ந்து நோக்குமிடத்து மன்னர்க்குரிய அறத்தின் வேலியையே அழித்துவிட்டாய்! நின் மனைவியை வேறொருவன் கவர்ந்து கொள்ளவும் அவனைத் தேடிக் கண்டுபிடித்து அவனைக் கொல்லாமல் என்னைக் கொன்றது ஏன்? விற்போர் வீரனாகிய நீ, நிராயுதபாணியனான என்னை மறைந்து இருந்து அம்பு எய்தது ஏன்?

வாக்குச் செல்வனான வாலியின் வார்த்தைகளைக் கேட்ட இராமன் கூறும் சமாதானங்கள் இவை :

1. தவறு ஏதும் செய்யாத தம்பியைக் கொல்லத் துணிந்தாய்.

2. அன்பு, நற்குடிப்பிறப்பு, வீரம், கல்வி, ஒழுக்கம் ஆகிய நலங்களைக் கெடுத்து உன் தம்பியின் தாரத்தை அபகரித்துக் கொண்டாய். ஆதலாலும் சுக்கிரீவன் என் உயிர்த்தோழன் என்பதாலும் உன்னைக் கொன்றேன்.

வாலி இவற்றை மறுக்கிறான். படைப்புக் கடவுளாகிய பிரமனே ஒருவனுக்கு ஒருத்தி என்னும் நெறியை ஆறறிவுடைய மானிடர்க்கே வகுத்திருக்கிறான். மனஉணர்வு நிரம்பப் பெறாத அஃறிணையைச் சார்ந்த குரங்கினத்தவராகிய எமக்கு வேத விதிப்படி மனமுறைகளும் இல்லை, உயர்குலத்திற்கு ஒத்த குணமுமில்லை. உணர்ச்சி வழி ஒழுகும் ஒழுக்கமே உண்டு. அதாவது மனம் போனபடி மருவிக்களிப்பதே எம் ஒழுக்கம் என்றான். இதனால் தான் குற்றமற்றவன் என்பது வாலியின் வாதம். இது முற்றும் உண்மையே. எப்படி எனில் சுக்கிரீவன் அரியணை ஏறியபின்பு மனம்போனபடி மருவிக் களித்தமையே மேற்கொண்டிருந்தான் என்பதை அறிகிறோம்.

நளன் என்பான் இயற்றிய அரண்மனையில் மலர்ப்படுக்கையில், இளமை வாய்ந்த மகளிர் புடைசூழப் படுத்திருந்தான். மயில்போலும் சாயலையுடையவரும் மணமிக்க நீண்ட கூந்தலையுடையவருமான மகளிர் நடுவண் படுத்திருந்தான். தித்திக்கின்ற சிவந்த வாயினையுடைய வானர மகளிரின் அதரபானத்தை நுகர்ந்த வண்ணம் பித்தேறிக் கிடந்தான்.

எவற்றை இராமன் வாலியிடம் குற்றமாகக் கண்டு அவனைத் தண்டித்தற்குரிய காரணங்களாகக் காட்டினானோ அதே குற்றங்களைச் சுக்கிரீவன் வாலியின் வதைக்குப் பின் செய்தான் என்பதற்கு மேலே காட்டிய எடுத்துக்காட்டுகள் சான்றாகும். இதனையும் இராகவன் மறுக்கிறான். நீ நல்லனவற்றைத் தேர்ந்து கொள்ளும் தேவர்குழுவில் இந்திரன் மகனாகப் பிறந்தவன். மேலும் உயிர் பிரியும் இத்துன்ப நிலையிலும் மனங்கலங்காமல் அறநெறியை ஆராயும் மன உணர்ச்சி பெற்றிருத்தலால் நீ விலங்கினமன்று என்கிறான். முதலை தன்னைப் பற்றி இழுக்கவும் திருமாலைக் கூவியழைத்துக் கதி மோட்சமடைந்த கசேந்திரனும், சீதையின் துயரைத் துடைப்பதற்குத் தசமுகனுடன் கடும் போர் புரிந்து வீடுபேற்றை அடைந்த சடாயுவும் உருவத்தால் விலங்காயினும் உணர்வால், செய்த செயலால், மானுடர் ஆதலால், உன்னையும் விலங்காகக் கொள்ள மாட்டேன் என்கிறான்.

வாலியை விலங்கு எனக் கொள்ள மறுத்த இராமனே இலக்குவனிடம் இப்பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசல் ஆகுமோ ? என்று கூறியதை இங்கு நினைவுகூற வேண்டும்.

இராமன் சொன்ன இப்போலிக் காரணங்களையும் வாலி ஏற்றுக்கொண்டு அமைந்தான். ஆயினும் வாலி, "என் முன்னின்று அம்பினைத் தொடுக்காமல் கொடுமைத் தன்மையுள்ள ஒரு வேடன் மறைந்து நின்று விலங்குகள், பறவைகளின்மேல் அம்பெய்து கொல்வது போன்று மறைந்து நின்று என் மீது அம்பினை எய்தது ஏன் ?'' என வினவினான்.

இக்கேள்விக்கு இராமன் பதில் கூறவில்லை, அவனால் பதில் கூற இயலவில்லை. எனவே இலக்குவன் இடைபுகுந்து பதில் இறுக்கிறான். ''உன் தம்பி சுக்கிரீவனை நீ துன்புறுத்தியதால், அவன் முதலில் வந்து என் தமையனைச் சரணடைந்தான். எனவே உன்னைக் கொன்று அவனுக்கு வாழ்வளிப்பதாக அடைக்கலம் தந்தான். உன்னுடன் நேருக்கு நேர் நின்று போர் செய்தால், ''யானும் உனக்கு அடைக்கலம்'' என்று நீ கூறுவாய் ஆயின், என் அண்ணன் என் செய்வான். உன் தம்பிக்குக் கூறிய உறுதிமொழியில் தவறியதாக முடியுமன்றோ எனவேதான் மறைந்து நின்று அம்பெய்தான் என்கிறான்.

இங்கு நாம் இலக்குவனின் உப்புச் சப்பற்ற வாதத்தை நினைத்து நகைக்க வேண்டியுள்ளது. கோழைத்தனமாக ஒருவனை மறைந்து நின்று கொன்றச் செயலை நியாயப்படுத்துவதற்குக் கூறும் காரணம் வேதனைமிக்க வேடிக்கையாக இருக்கிறது. தன் மனைவியைக் கள்ளத்தனமாகக் கவர்ந்து சென்ற கொடியவனான இராவணனுக்கே மன்னிப்பும், (இன்றுபோய் போர்க்கு நாளை வா) எனத் திருந்துவதற்கு மற்றுமொரு வாய்ப்பும்



கொடுக்க் வேண்டுமென வாதாடுகிறான். ''தூது அனுப்புவது அரசநீதி, தன் கருத்தை உணர்த்தல் அறம், மறுத்தால் ஒறுத்தல் மன்னவன் கடமை'' எனவெல்லாம் அங்கதன் தூதுப்படலத்தில் பேசுகின்ற இராமன், வாலியின் விஷயத்தில், அரசநீதியைக் கடைப்பிடிக்கவில்லை. அறத்தைக் கடைப்பிடிக்கவில்லை. எடுத்த எடுப்பிலேயே மிகப் பெரிய தண்டனையாகிய 'உயிரை வாங்கும்' தண்டனையை நிறைவேற்றி விடுகின்றான். இது எப்படி நியாயமாகும் ?

இராமன் வாலியைக் கரந்திருந்து கணை தொடுத்த வீரமற்ற செயலுக்கு மற்றுமொரு காரணமும் கூறப்படுகிறது. அதுதான் தன்னுடன் நேருக்கு நேர் நின்று போரிடுபவர் எவராக இருந்தாலும் அவருடைய வரம், உரம் என்பவற்றில் பாதி வாலிக்குப் போய்ச் சேர்ந்துவிடும். இது அவன் தவமிருந்து பெற்ற வரம். ''எதிரியின் பலத்தில் பாதியும், தன்பலமும் சேருவதால் அவனால் எவனையும் வெல்லமுடியும், இதனை அவனே தாரையிடம் எடுத்துரைப்பான். வர பலம் பெற்றவன் அறம் திறம்பினால் அவனை எதிர்த்து விதிவிலக்கான முறையை ஆள்வதைத் தவிர்க்க முடியாது'' என்பார் எஸ்.இராமகிருஷ்ணன். இது பொருந்தாக் கூற்று. வாலியின் செயல் அறம் திரும்பிய செயல் என்பதை இலக்குவன் கூட ஏற்றுக் கொள்ளவில்லை.

தாடகை வதத்தில் முதலில் அவள் பெண்ணாயிற்றே என்பதால் அவள் மீது அம்பு தொடுக்கத் தயக்கம் காட்டுகிறான், இராமன். உடல் வலியாமையாலும், செய்யும் செய்கையாலும் அவள் பெண்ணல்ல, ஆணே என விசுவாமித்திரன் தேற்றிய பின்புதான் அவள் மீது கணை தொடுத்தான். அந்த அளவு தயக்கம்கூட இராமன் வாலியின் விஷயத்தில் காட்டவில்லை. தனக்குத் தீமையொன்றும் செய்யாத போதும், கொலைத் தண்டனை பெறும் அளவிற்கு அவன் தீவிணையாளனாக இல்லாத போதும் அவனைக் கொன்று தீர்த்த செயல் இராமனின் பலவீனத்தையே காட்டுகிறது.

இன்னொன்று, வாலிவதைக்குக் காரணம் அவன் இராவணனுடன் நட்பு கொண்டிருந்தான் என்பது. எனவே இராவண வதைக்கு வாலிவதை முன்னோடியாவ்து இன்றியமையாதது. இதுவும் ஆதாரமற்ற வாதம். சீதையைத் தேடிக்கண்டுபிடிப்பதும், இராவணனைக் கொல்வதற்குத் துணையாவதும் சுக்கிரீவனால் மட்டும் இயலுகின்ற செயல்கள் அன்று.

*செயலைச் செற்ற பகைதெறுவான் தெரிந்து*
*அயலைப் பற்றித் துணை அமைந்தாய் எனின்*
*புயலைப் பற்றும் அப்பொங் கரிபோக்கிஓர்*
*முயலைப் பற்றுவது என்ன முயற்சியோ.*

'இராவணனை எதிர்த்தழிக்கும் ஆற்றல் மிக்க வாலியாகிய என்னைத் துணையாகக் கொள்ளாமல் வலிமையிற் குறைந்த சுக்கிரீவனைத் துணையாகக் கொண்டு அமைந்த நின் செயல் சிங்கத்தின் துணையை இகழ்ந்து முயலைத் துணையாகக் கொண்டது போலும் பயனற்ற முயற்சியாகும்' என்கிறான் வாலி.

இக்கூற்றாலும் இராமனின் செயல் அடாத செயல் என்பது தெளிவாகிறது.

''இராம சேனைக்குத் தளபதியாக இருந்து அறத்தில் வெற்றிக்காகப் பாடுபட வேண்டிய வாலி இராவணனிடம் அக்கினி சாட்சியாக நட்புக் கொண்டுவிட்டான்'' என்பார் அறிஞர் எஸ்.இராமகிருஷ்ணன். இதனை வாலியே மறுத்துள்ளான் என்பதற்கு மேலே சுட்டிய பாடலே சான்று. இராவணனுக்கு நண்பன் என்பதால் அவன் செய்த எல்லாவிதமான அறமற்ற செயலுக்கும் வாலி துணையாவான், எனக் கற்பனை செய்வது பொருந்தாக் கூற்று.

இருப்பினும் கவிகுலத்து அரசு, ''புவி உடை அண்ணல் அறத்திறன் அழியச் செய்யான்'' என அமைதி அடைந்தான் என்பான் கம்பன். இதுவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சமாதானமாக இல்லை.

இராமனின் வாதங்களை வேறு வழியின்றி வாலி ஏற்றுக்கொள்வதுடன் அவன்மீது அளவுகடந்த அன்பு பெய்தவன் வாலி. தன்னைக் கொல்லுகிறவனாகிய இராமன் மீதும், அவனைக் கொல்லாத் தம்பி அதாவது இலக்குவன் மீதும் அன்பு பொழிந்தான் என்பதை நோக்கினால் அவன் எத்தகைய உயர்ந்த மனிதன் என்பது புலனாகிறது.

### இராமன் மீது அன்பு பெய்தமை

இராமனால் தண்டிக்கப்பட்ட வாலி பிறர் குற்றம் நோக்காது தன் குற்றங்களையே நினைத்து, அவற்றைப் போக்கவல்ல தூய சிந்தையன் ஆயினான்.

தன்னைக் கொன்றவனாகிய இராமனைத்தாய் போன்றவன் என்பதுடன் தருமமும், தகவும், சால்பும் ஆகியவற்றைத் தாங்கும் தூணாவான் என்கிறான். இராமனை மூவராகவும் முதல்வனாகவும் பகையாகவும் உறவாகவும், பாவமாகவும் தருமமாகவும் போற்றுகிறான்.

### சுக்கிரீவன் மீது அன்பு பெய்தமை

''என் தம்பி என்னைக் கொல்லும் பொருட்டு உன்னை அழைத்து வந்து நாட்டாட்சியைத் தான் பெற்றுக் கொண்டு, வீட்டாட்சியை எனக்கு நல்கினான் என்றான். அத்துடன் தம் தம்பி மது அருந்தி புத்தி மாறி உனக்குத் தீவினை செய்வானாயின் என் மீது ஏவிய அம்பை அவன்மீது ஏவவேண்டாம் என்றனன். மேலும் உன் தம்பிமார்கள் என் தம்பியைத் தன் அண்ணனையே கொல்வித்தவன் எனப் பழிப்பார்களாயின் அதைத்தடுத்து உய்வித்தல் வேண்டும்'' என்றான். என் தம்பியை நின் தம்பியாக நினைதி என்று சுக்கிரீவனை இராமனிடம் அடைக்கலப்படுத்துகிறான்.

### அனுமன் மீது அன்பு பெய்தமை

தன் தம்பியை மட்டுமன்றி அனுமனையும் மன்னித்த பெருங்குணம் வாலியிடம் இருந்தது.

அருமையுடைய எச்செயலையும் செய்து முடித்தற்குரிய ஆற்றல் அனுமனுக்கு உண்டு. அவனைக் கொண்டு எல்லாவற்றையும் செய்து கொள்க. அனுமனை எளியனாக எண்ண வேண்டாம். 'நின் கைத்துணை'', என நினைதி. சுக்கிரீவனும், அனுமனும் போலும், ஒப்பற்ற துணைவர்கள் வேறு எவரும் இல்லை. இவர்களைத் துணையாகக் கொண்டு சீதையைத் தேடி மீட்டுக் கொள்வாயாக'' என்றான்.

### அங்கதன்

தான் அருமையாகப் பெற்ற ஒரு மகனிடத்து அன்பு பொழிதல் உலகத்தியற்கையாயினும், வாலி இறுதியில் அவனுக்கு அறிவுரை கூறும் போது, 'மகனே நீ சிறுபிள்ளைத் தனத்தை விட்டுவிடு. என் வார்த்தைகளை உறுதி எனக் கொள்வாயாக. தன்னின் மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் வில்லைத் தாங்கி கால்தரைத் தோயக் கண்களுக்குப் புலப்படும் காட்சிப் பொருளாக வந்துள்ளது. அதுவே மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தாகும். அதனையே வணங்குவாயாக.

''இராமனாகிய இவன் உன் தந்தையைக் கொன்றவன்'' என்னும் எண்ணத்தை விட்டுவிட்டு, உனக்கு உண்மையான தந்தையும் தெய்வமும் ஆவான் இவ்விராமனே'' எனத் தெளிந்து ''அவனை வழிபட்டு உய்வாயாக'' என வாலி தன் மகன் அங்கதனுக்கும் அறிவுரை பகர்ந்தான்.

அம்பினால் அடிபட்டு இறக்கும் போதும் இராமனிடம் பேசும் போதும் ''மாய அரக்கனை வாலின் பற்றிக் கொற்றவ'' நின் கண் தந்து குரக்கியல். தொழிலும் காட்டப் பெற்றிலன்'' எனக் கூறுவதையும் காண்க.

இங்ஙனமாக, அம்பு எய்தவன் மீது அன்பு பெய்தவனாகிய வாலியின் சீரிய பண்பினைக் காணப் பெருவியப்பிற்குள்ளாகிறோம்!

• • •

# பணியாளர் மற்றும் செலவு சீராய்வு ஆணையம்

தமிழ்நாடு அரசு, நிதித்துறையின் (மத்திய மனித வள ஆற்றல் பிரிவு) 26.11.2001–ஆம் நாளிட்ட அரசாணையில், "பணியாளர் மற்றும் செலவு சீராய்வு ஆணையம்'' என்ற தனி நபர் குழு ஒன்றை அமைத்து ஆணை பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு அரசின் முன்னாள் நிதித்துறைச் செயலாளர் டாக்டர் ஏ.எம்.சுவாமிநாதன், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் இவ்வாணையத்தின் தலைவராக இருப்பார்.

இவ்வாணையத்தின் ஆய்வு வரம்புகள் வருமாறு :

அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்பான முகவர் அமைப்புகளின் பணியாளர் மற்றும் நிருவாகச் செலவு முறைகளை ஆய்வு செய்து மக்கள் நலப் பணிகளைத் திறம்பட அளித்து மக்கள் நலப் பணிகளில் அரசு மற்றும் தனியார் அதிக அளவில் பங்கேற்கும் வாய்ப்பை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு, அவர்களின் செயல்பாடுகள், பணிகள், நிருவாக அமைப்பு மற்றும் பணியாளர் அமைப்பு ஆகியவற்றில் தேவையற்றதைக் குறைப்பதற்கான பரிந்துரைகளை அளித்தல்;

அரசுப் பணிகளில் புதிய துறைகளுக்கு கூடுதலாக மனித ஆற்றல் தேவைப்படுமானால், அதனை, ஒருதுறைப் பணியாளர்களைப் பிற துறைக்கு மாற்றுவதன் மூலமாக நிறைவு செய்யும் வகையில், உபரியாக உள்ள பணியாளர்களைப் பிற துறைக்கு மாற்றுதல், மற்றும் மறு பயிற்சி அளித்தல் ஆகியவற்றில் தற்போதுள்ள ஏற்பாடுகளை ஆய்வு செய்தல்.

# பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி

தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ள பீடித் தொழிலாளர்கள் தங்களது தேவைக்குரிய வீட்டினை அவர்களே முன் வந்து கட்டிக்கொள்ளும் திட்டத்தின் கீழ் (Build your Own House Scheme) ஒரு வீட்டுக்கான மதிப்பீடு ரூ.40,000/– என்ற வகையில் ஆண்டொன்றுக்கு 2000 வீடுகள் வீதம், 5 ஆண்டுகளில் சுமார் 10,000 வீடுகள் கட்டிக் கொள்வதற்கு ஏதுவாக அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்திற்கு மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சகம் ஒரு வீட்டுக்கு ரூ.20,000 மானியமாகவும், மாநில அரசு ரூ.5,000 மானியமாகவும் வழங்க உள்ளது. மீதித் தொகையான ரூ.15,000 பயனாளிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.


## தமிழரசு

ஆண்டுச் சந்தா – தமிழரசு (தமிழ்) ...... ரூ.120 மட்டும்

ஆண்டுச் சந்தா – தமிழரசு (ஆங்கிலம்) ...... ரூ.60 மட்டும்

ஆயுள் சந்தா (10 ஆண்டுகள்) ...... ரூ.1,000 மட்டும்

சந்தாத் தொகையினை

துணை இயக்குநர் (வெளியீடுகள்),
தமிழரசு அலுவலகம், சென்னை – 600 002.

***Deputy Director (Publications),***
*Tamil Arasu Office, Chennai - 600 002.*

மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் (சென்னையில் மாற்றத்தக்கதாக) மூலம் அனுப்பவும்.



# மக்கள் கவிஞர்

□ பேரறிஞர் அண்ணா

'மக்கள் கவிஞர்' – மனங்கவரும் மகத்தான இந்தப் பட்டம் சாதாரணக் கவிஞனுக்கு வழங்கப்படும் புகழ்மாலை இல்லை.

பன்னூறு ஆண்டுகளாய்ப் பாரிலே கவிஞர்கள் உலவி வந்தார்கள்; அளவுக்கு அதிகமாகவே உலவி வந்தார்கள். ஆனால் அவர்கள் செய்து வந்த வேலையெல்லாம் வேதங்களுக்கு விரிவுரை, விளக்கப்பாடல்கள் தீட்டுவது – படாடோப அரண்மனை வாழ்விற்கு தங்கள் கவிதைத் திறத்தால் பகட்டுப் பூச்சுப் பூசுவது – ஆகியவை தாம்.

மக்களுக்காக – மக்களைப் பற்றி – மக்களிடையே பழகு மொழியில் கவிதை இயற்றிய கவிஞன் மிகமிக அருமை!

கவிஞனின் குரல், கோவில் காண்டாமணி செய்ய வேண்டிய வேலையைச் செய்வதாகவோ, அரண்மனை முரசங்கள் அறைந்து அறிவிக்கும் ஒலியைப் பரப்புவதாகவோதான் இருந்தது. மக்கள் மனத்துள் உறையும் எண்ணத் துடிப்புகளை – சிந்தனையில் குமிழியிடும் சீரிய கருத்துகளை – எழுத்து வடிவிலோ, ஒலி உருவிலோ எடுத்து இயம்புவதாய் இல்லை.

தப்பித் தவறி, கவிஞன் மக்களோடு பேசத் தொடங்கினால், அந்தப் பேச்சு – இந்த உலக மக்கள் எவ்வளவு பேராசை பிடித்தவர்களாக, இகலோக இச்சை நிறைந்தவர்களாக ஆகிவிட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட – உலகம் எவ்வளவு நிலையற்ற தன்மையது, எத்தகைய மாயையின் வடிவமுடையது என்பதை விளக்குவதற்காக – போதனைகள் உதிர்ப்பதற்காகத்தான் இருக்கும்.

அரச தண்டம், பணக்கார வர்க்கத்தின் சவுக்கு – ஆகியவற்றுக்குப் பதிலாகப் பயன்படும் கருவியாகக் கவிஞனின் குரல் அன்று மிளிர்ந்தது. அரச பரிவாரத்திலே மற்றுமோர் இன்றியமையாத அங்கமாக – இகத்திலே குற்றப் பத்திரிகை படித்து, பரலோக விசாரணை மண்டபத்தில் உரிய தண்டனையைப் பெற இழுத்தும் நிறுத்தும் 'போலீஸ்காரனாக' ஆகிவிட்டான் கவிஞன்!

அத்தகைய கவிஞர்கள் மக்களுக்குப் புரியாத, அவர்களுக்கு முற்றிலும் புதியதான மொழியிலேதான்

பேசினார்கள். தங்கள் குலமான மக்கள் குலத்தை வெறுத்து ஒதுக்கிட்டு, தங்கள் அறிவுக் கூர்மையையும், திறமையையும் அரண்மனைப் புறங்களிலே உலவி வர அனுமதி பெறும் கருவிகளாகப் பயன்படுத்தினார்கள். அங்கே நுழைந்ததும் மன்னர் புகழ் குறித்துப் பாமாலைகள் பாடினார்கள். மன்னன் எத்தகையோனாய் இருந்தாலும் கவலை இல்லை. அவன் விட்டெறியும் காசு, பசும்பொன்னாய் இருந்தால் போதும் என்பதே அவர்கள் குறி.

வேதனை விளைவிக்கும் இந்த விதிக்கு விலக்காக விளங்கியவர்கள் சங்க காலப் புலவர்கள். ஆனால் அவர்களைப் பற்றி இன்றைய நம்மவர்கள் அறிந்திருப்பது மிகவும் கொஞ்சமே!

ஒழுக்கங்களின் உறைவிடமாய் விளங்கிய அப்புலவர்கள், பாடல்களைப் பாடிப் பணம் பண்ணும் வியாபாரிகளாகவோ, இன்பரசப் பாடல்களை ஏலம் கூறுபவர்களாகவோ வாழவில்லை.

பிற்காலத்தில் வந்தவர்களோ வேறு வகையினராய் மாறினார்கள். 'மக்கள் கவிஞராக மலர்வது கடினம்; அத்துடன் இது இலாபகரமான தொழிலும் இல்லை' என்று எண்ணினார்கள். அதனால்தான் சங்க காலத்திற்குப் பின்னர் செல்வாக்கு மிக்க மக்கள் கவிஞராக யாரையும் காண முடியவில்லை.

## பரலோக சுவர்க்கத்தைப் பாடியவர்கள்

அறிவாளியான வங்கி முதலாளியைப் போல – சுறுசுறுப்பாக இயங்கும் காப்பீட்டுக் கழக முகவர் (இன்சூரன்ஸ் ஏஜன்ட்) போல – பரலோக வங்கியின் பாதுகாப்பான முதலீட்டுப் பலம் பற்றி, நிகழ்கால இன்பத் துறவுப் 'பாலிசி பிரிமியம்கள்' மூலம் கிடைக்கப் போகும் எதிர்காலப் பரலோகக் காப்பீட்டு (இன்சூரன்ஸ்) இன்பத்தொகை பற்றி எல்லாம் உரக்கவே பிரச்சாரம் செய்தார்கள்.

மனித வாழ்வின் பயனற்ற தன்மை குறித்து எடுத்துச் சொல்லி, இகலோக இன்பங்களைத் துறக்கத் தூண்டினார்கள்.

மேக மண்டலத்திற்கு மேலே, எங்கோ, எவர் கண்ணிலும் படாதிருக்கும் – 'சுவர்க்க பூமி'யின் பெருமையை மிகைப்படுத்தி பாடல்கள் இசைத்தார்கள். பாதாளத்தில் இருக்கிறது 'நரகம்' எனக் கற்பித்தார்கள்.

அந்தக் காலம், அறிவியல் தொலைநோக்கிக் கண்ணாடியைப் (Telescope) பெற்றெடுக்காத காலம். எனவே கவிஞர்களின் கற்பனை ஆற்றல் மக்களை மயக்கி மகிழ்ச்சி ஊட்டியது. பாமரர்கள் மெய்மறந்து வியந்தார்கள். பகுத்தறிவாளர்கள் – அறிஞர்கள் – கருத்துக்காக அல்ல; கலை நயத்திற்காகப் பாராட்டு வழங்கினார்கள்.

## பாரதியாரின் இளமை நாட்களில்

'மக்களின் கவிஞர்' ஆக மாறுவது எளிதான செயல் இல்லை. மிகவும் கடினமான இந்தச் சாதனையில்தான் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார் சி.சுப்பிரமணிய பாரதி.

உயர்தர வர்க்கத்தினர் உளம் மகிழ்விக்கும் கவிஞன் ஆவது மிகவும் எளிது. நீல வான் கடலில் மிதக்கும் வெள்ளி ஓடமான நிலாவைப் பற்றி இரண்டு பாடல்கள் பாடினால் போதும்; கருவானத் திரை கிழித்துக் கண்சிமிட்டும் விண்மீன்கள் குறித்துச் சில கவிதைகள் எழுதினால் போதும். எழில் சிந்தும் மலர்களின் இனிய மணம் பற்றி ஒன்றிரண்டு பாக்கள் இசைத்தால் போதும்; ஆற்று நீரின் சலசலப்பில் எழுந்து எதிரொலிக்கும் தாள நடனம் – காதல் வெறி மூண்டெழக் கிளம்பும் கனிச் சுவைக் குளறல் – வீரர் தம் தீரம் – இவை பற்றிச் சிற்சில சொற்சித்திரம் தீட்டினாலே போதும்; கவிஞர்கள் வரிசையில் 'சரியாசனம்' பெற்றுப் புகழ் விருதும் பூணலாம்!

ஆனால் மக்களின் கவிஞனோ, தன் கடமையைச் சரியாய் ஆற்ற – மற்றவரால் வீசி எறியப்படும் வெறுப்பு வேல்களை எதிர்த்து நடக்க வேண்டும்; ஆபத்தான இடுக்கண்களில் எல்லாம் முக்குளித்து எழுத வேண்டும். பாராட்டுதல் ஆதரவு, செல்வாக்கு குறித்தெல்லாம் சிந்திக்கவே கூடாது.

தொடக்கத்திலேயே சுப்பிரமணிய பாரதியாரின் புலமைக் கூர்மை பற்றியும், திறமை குறித்தும் அவருடைய நண்பர்களான ஒரு சிறு குழுவினருக்குத் தெரியும். அவர்கள் வியந்து புகழ்ந்தார்கள். ஆனால், ஏனைய மக்கள் அனைவரும் அவர்களுடைய கவிஞராகிய அவரைப் பற்றி அறிந்தது எத்தனையோ ஆண்டுகளுக்கு அப்புறம்தான். அப்பொழுது கூட ஒரு வித அரசியல் மெருகேறிய ஒரு சில கவிதைகள் மட்டுமே பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. மக்கள் கவிஞர் மட்டுமே கற்பனை செய்து பாடக்கூடிய தனிச் சிறப்பான தன்மை பெற்ற கவிதைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை.

## உழவனைப் பாடிய பாரதி

நம் நாட்டில் கவிஞர்களுக்குக் குறைச்சல் இல்லை. ஆனால் 'நான் மக்களைப் பற்றிப் பாடுகிறேன்' என்று ஒருவன் சொன்னால், மக்களோ ஐயப்பாடு கொண்ட கண்களுடன், வெறுப்புடன் அவனைப் பார்ப்பார்கள். அவனுக்கு ஒப்புதல் கிடைக்காது. எத்துணைக்கெத்துணை அவனுடைய கவிதைகள் புரட்சிக் கருத்துக்கள் பொதிந்தனவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமான எதிர்ப்பை அவன் சமாளிக்க வேண்டியிருக்கும்.

பாரதியார் – ஏரோட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் பாடினார். தொட்டில் ஆட்டும் தாய்மார்களுக்கு – விளையாட்டு வெளிகளிலே ஓடியாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார்.



பாரதியார் –
ஏரோட்டும் சாதாரண
உழவனுக்குப்
பாட்டுப் பாடினார்.
தொட்டில் ஆட்டும்
தாய்மார்களுக்கு –
விளையாட்டு
வெளிகளிலே
ஓடியாடும்
குழந்தைகளுக்குக்
கவிதைகள்
இசைத்தார்.

கடந்த காலப் புலவர் சிகாமணிகளைப் போல, வேதாந்த வியாக்கியானங்களை விடுதலைக் கோரிக்கைக்குச் சப்பைக் கட்டாக அவர் பயன்படுத்தவில்லை. உலகின் மிகத் தொலைவில் உள்ள நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டங்களைக் கவிதைகள் ஆக்கி, மக்களுக்குப் படைத்தார்.

## உலகப் புரட்சி ஓவியங்கள்

இத்தாலிய விடுதலை உதயத்தை – மாஜினி என்னும் மாவீரனின் சலியா உழைப்பால் மக்கள் புத்துயிர்ப்புப் பெற்று உரிமைப் போரில் வெற்றிகரமாக ஈடுபட்டதை – உன்னதச் சொற் சித்திரமாகத் தீட்டிக் கொடுத்தார்.

புரட்சிக்குப் பின் உருவான பிரெஞ்சு நாட்டுக் காட்சியைப் பாடினார்.

ஜார் மன்னனின் தளைகளைத் தகர்த்து நொறுக்கி, வீறுடன் எழுந்து நின்ற இரஷ்யாவைப் பற்றிப் புதுமை ஓவியம் தீட்டினார்.

விடுதலை பெற்ற பெல்ஜியம், பிரான்சு, சிவப்பு இரஷ்யா குறித்த சொல்லோவியங்கள் எல்லாம் அவர் மக்களுக்குப் பரிசாக அளித்தவை.

பிஜித் தீவு வாழ்வு பற்றிய பேனா சித்திரத்தை மக்கள் முன் வைத்து, ''பாருங்கள் சகோதரர்களே, உம்முடன் பிறந்த சகோதரர் நிலையை'' என்று காட்டினார் – ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரின் தன்மையிலே! மக்கள் கவிஞனுக்குரிய பொலிவு அதுதான்!

தன் நாட்டு மக்களின் முட்டாள்தனத்தையும், குற்றம் குறைகளையும் சுட்டிக் காட்டத் தயங்க மாட்டான் மக்கள் கவிஞன். 'சிந்தையிலும், செயலிலும் அவர்கள் எவ்வளவு பிற்போக்கானவர்களாக இருக்கிறார்கள். அதேவேளையில் உலகின் ஏனைய நாடுகள் எவ்வளவு வேகமாக முன்னேறுகின்றன, எவ்வளவு சிறப்பாகச் செயல் புரிகின்றன, அங்கெல்லாம் வாழ்வு எப்படி வளம் பெறுகிறது?' என எடுத்துக் காட்ட அஞ்ச மாட்டான்.

வாழ்க்கை வசதிகள் பெற்று மேட்டுக் குடிகளாகத் திகழ்ந்தவர்களைக் கண்டு, தொடை நடுங்கவில்லை பாரதி! அவர்களுடைய தவறுகளையும் தயங்காமல் மக்கள்முன் வைத்தார்; வஞ்சகத்தையும், துரோகத்தையும், அவற்றின் உண்மை வடிவத்திலே கொணர்ந்து நிறுத்தினார்; ஒப்பற்ற தீரம் – அளவற்ற உற்சாகத்தோடு இத்தகைய பணி புரிந்தார் அவர்.

## தேசியச் சிமிழுக்குள் அடங்காதவர்

பாரதியை, 'தேசியக் கவி' என அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் ஒரு சாரார். கவிஞர் மீது உள்ள காதல் அல்ல காரணம்! இப்படி சித்திரித்துக் காட்டுவதன் மூலம் கவிஞரின் இன்னொரு

தன்மையை – அஃதாவது பாரதி, 'மக்கள் கவிஞர்' என்னும் உண்மையை – மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம்.

சுற்றி வேலி கட்டிக் கொண்டு, அந்த எல்லைக்குள் அடங்கி, ஒடுங்கி விடுபவை அல்ல பாரதியாரின் பாக்கள்.

வேதாந்த – தேசியச் சிமிழ்களில் அவற்றை அடக்க முடியாது.

புராதனச் சம்பிரதாயங்களின் புராணக் கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை.

பழைமைப் பாதுகாவலர்களாக – சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களை நோக்கி ஆவேசமாக அள்ளி வீசுகிறார் சுடுசொற்களை :

*''ஏ, முட்டாள்களே! நெடுங்காலமாக நிலவி வருகிறது என்ற ஒரே காரணத்திற்காகச் சில கருத்துக்கள் உன்னதமானவை – உண்மையானவை – என்று சாதிக்கவா வருகிறீர்கள்?*

*பொய்யும் புளுகுகளும் புராணக் கதைகளாக ஊழி ஊழிக் காலமாகத்தான் உலவி வருகின்றன. 'அவை உயர்ந்த பண்புகள்; ஆகவே கட்டாயமாக எல்லோராலும் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை' என ஒப்புக் கொள்ளத் தூண்டுவதற்கு முன்வருவீர்களா?*

*பண்டைக் காலத்தில் அறியாமையும், கொடிய கருத்துக்களும் இல்லவே இல்லை என்று எண்ணுகிறீர்களா, நீங்கள்? செத்த சிந்தனைகள் என்னும் பிணத்தை ஏன் இன்னும் நீங்கள் கட்டிக் கொண்டு அழ வேண்டும்?*

*நிகழ் காலத்தில் வாழ்ந்து, எதிர்கால வாழ்விற்கு வகை செய்யுங்கள்! இறந்த கால இருட்டு வெளியிலே துழாவிக் கொண்டு அலைய வேண்டாம்! கடந்த காலம், கடந்து போனது தான்; சென்றது இனி மீளாது!''*

– இது பாரதி வாக்கு.

இங்கேதான் மக்கள் கவிஞரை நாம் சந்திக்கிறோம். வாழ்வோடு ஒட்டிய ஒழுக்க முறையை மக்கள் சமுதாயத்திற்காக அமைத்துக் கொடுத்துள்ளார் அவர்.

புராணக் கோட்பாடுகளைப் போல, மண்ணோடு ஒட்டாத சித்தாந்தம் அன்று அவர் காட்டும் வழி. மக்களுக்கு ஒரு புதிய விழிப்பு ஊட்டினார் அவர்.

'உலகம் மாயை' என்னும் சாக்குருவி வேதாந்தம் – பாழுலகம் பொய்யே; பரம பதம் போ! என்ற படுமட்டமான ஒரு கொள்கை – மக்களிடையே பரவுவதைத் தடுத்தார். அத்தகைய மூட நம்பிக்கையைக் கண்டு எள்ளி நகைத்தார்; காறி உமிழ்ந்தார்; ஆசிரம வாசிகளுக்கு ஆத்திரம் வரச் செய்தார். விளைவு என்னாகுமோ என்று வீண் பீதி கொள்ளவில்லை. அத்தகைய சோம்பேறி வேதாந்தங்களில் சொக்கி நிற்கும் மக்கள் உதவாக்கரைகளாக – ஒன்றுக்கும் பயன்படாத பிற்போக்குப் பேர்வழிகளாக – ஆகிவிடுவார்கள் என்பது அவர் கணிப்பு.

## பணக்காரக் கொடுமையைச் சாடியவர்

பசி, வறுமை, அறியாமை முதலியவற்றை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, பணக்காரர்களின் கொடுமையை அவர் பலமாகச் சாடுகிறார்.

*'தனி ஒருவனுக்கு உணவு இலையெனில் – இந்த சகத்தினை அழித்திடுவோம்'*

– என முழங்குகிறார்.

"வாழ்க்கை வசதிகள் அனைத்தும் பெற்று, மக்கள் வாழ வேண்டும். வணிகம் வளமுடன் நடைபெற வேண்டும். இயந்திரத் தொழில்கள் பெருகிட வேண்டும். புதுமைக் காலத்தின் நலன்கள் எல்லாம் நாட்டிலே பொங்கிக் குவிய வேண்டும்!'' – என்றெல்லாம் அவர் விரும்புகிறார்.

பூசாரித்தனமும், சுலோக உரையும் அவர்தம் கோட்பாடுகள் அல்ல; மக்களுக்குப் பணி புரிவதே – உடன் பிறப்பான உயிர்களுக்கு உழைத்தலே – அவரது மதம்.

எத்தகைய அபாயச் சூழலிலும், நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையுமாக நெஞ்சம் தளராமல் பாரதியார் நடந்து செல்வதை நாம் காண்கிறோம்.

## இருவகை ஊழிகள் மோதிய காலம்

இரு ஊழிகள் (யுகங்கள்) மோதும் எல்லை – பாரதி தோன்றிய காலம். அவர் பிறந்த எட்டையபுரம் ஊரில் செல்வம் புரளும் சிற்றரசர் ஆட்சி! குடிசைகள் புடை சூழ ஊர் மையத்திலே நிமிர்ந்து நின்றது அரண்மனை மாளிகை! பழைய சாதிப் பாகுபாடுகளின் ஆதிக்கம் அப்போது குன்றவில்லை. அவரும் சாதியில் பிறப்பால் உயர்குலத்தவர். செல்வச் செருக்கிற்கும் வைதீகச் சனாதனத்திற்கும் ஊடே நவீன நாகரிகம் தலை நீட்ட முனைந்த சமயம் இது. புரட்சி எண்ணங்கள் பூக்கத் தொடங்கின. இயந்திர உலகால் எழும்பிய புதிய அமைப்பு முறை, பழமையான முறைகளை ஊடுருவிக் கொண்டு பாய்ந்து நுழைவதை, வியப்பும் திகைப்பும் மின்னும் விழிகளுடன் சமுதாயம் பார்த்துக் கொண்டிருந்தது. புது ஊழியின் கண்களிலே பழைமைக்கு அறைகூவல் விடுக்கும் மிடுக்கு மிளிர்ந்தது.

அந்த வேளையில்தான் பாரதி தோன்றினார். பழைய ஊழிக்கும் புதிய ஊழிக்கும் நடக்கவிருக்கும் போராட்டத்தில் தானும் ஒரு வீரனாகப் பங்கு கொள்ளலாம் என்று அவர் கருதியிருக்கக் கூடும்! பழைய சமுதாய அமைப்பு முறையிலோ அவரது இடம் பாதுகாப்பு நிறைந்தது; வசதிகள் மலிந்தது.

'மக்களின் கவிஞர்' ஆக மாறுவது எளிதான செயல் இல்லை. மிகவும் கடினமான இந்தச் சாதனையில்தான் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார் சி.சுப்பிரமணிய பாரதி.



## முரண்பாடுகள் செறிந்த நாடு

பாரதி பிறந்த இந்த நாடு – முரண்பாடுகள் செறிந்த களம். அகந்தையும், அடக்கமும் – கொடூரமும் அன்பும் – நாட்டிலே ஒருங்கே குடிகொண்டு இருந்தன. செயல் திறம் ததும்பிக் கொண்டு இருந்தது; அதேவேளையில், மக்களை மனம் குலையச் செய்து, செயல் அற்றவர்கள் ஆக்கும் அபத்தக் கற்பனைகளும் அளவு மீறி உலவின; பகட்டான கற்பனைகள் – பல்லாயிரக்கணக்கான ஊமை மக்கள் – அறிவு மயங்கி ஆழ்ந்த நிலை – அச்சமும் சூரத்தனமும் பக்கத்திலே பக்கத்திலே கொலுவிருந்த தன்மை – பக்தியும் பயமும் பாசறை கொண்டிருந்த காட்சி – அனைத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்தது நாடு.

பைரன், எட்மண்ட் பர்க்கு – ஆகியோர் இந்த நாட்டிலே அச்சமயத்தில்தான் கால் பாவினார்கள் – தங்கள் எழுத்தால், பேச்சால்! அவர்களை – அவர்களது எழுத்துகளை, பேச்சுகளை வரவேற்க, நாட்டிலே இருந்தவை பாரதமும் பாகவதமும் தான்.

அப்போது, துப்பாக்கியும் பீரங்கியும் முழங்கி, நாட்டு மக்களின் காதுகளிலே ரீங்காரம் செய்தன! முரண்பாடுகள் நிரம்பிய இருந்த நிலப்பரப்பிலே அவற்றோடு கோவில் மணியோசைகள் – நகராக்கள் – கலந்து முழங்கிய முழக்கமும் ஓயவில்லை.

பாரதி தோன்றினார். ஆனால் நாட்டின் இயல்பிற்கு இணங்க, வரலாறு ஆமை வேகத்தில்தான் நகர்ந்து கொண்டிருந்தது. வரலாற்றுப் பல்லக்கை விரைவான ஓட்டத்தில் செலுத்திடப் பலமாகத் தடிபோட்டு எழுப்ப வேண்டியிருந்தது. பாரதியின் சிறப்பு – அவர் அத்தகைய தடிபோட்டு எழுப்பும் பணியில் ஈடுபட்டதில்தான் இருக்கிறது. மக்களின் கவிஞராக மாறி, மகத்தான முறையில் அவர் அப்பணியைச் செய்தார்.

## சீர்திருத்த – வானின் விடிவெள்ளி

பாரதி வெறும் தேசியக் கவிஞர் அல்லர்; சீர்திருத்த வானில் மின்னிய விடி வெள்ளி அவர்!

அந்நியன் மீது அவருக்கு ஆத்திரம். நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினார் அவர். அதுமட்டுமே அவரது இலட்சியமாக, தீர்க்கமான முடிவாக இருந்துவிடவில்லை. அதுதான் அவரது இலட்சியத்தின் தொடக்கம்.

அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதுடன் நாட்டு மக்கள், தங்களைப் பிணைந்து இறுக்கும் தளைகள் அத்தனையையும் தகர்த்து எறிந்து, உண்மையான விடுதலை வீரர்களாக விளங்க வேண்டும் என்று விரும்பினார் அவர். உலக மக்களின் முன்னிலையில் அவர்கள் உன்னத உயர்வு பெற்றுத் திகழ வேண்டும் என்று அவாவினார். புதிய விழிப்பு பெற்று, புதுமை ஆண்களாகவும்,

பெண்களாகவும் நாட்டு மக்கள் நடமாடும் காட்சியைக்காண ஆசைப்பட்டார்.

மக்களைப் பீதி போர்வை, முக்காடாகக் கவிழ்ந்து மறைத்திருப்பது அவரது பார்வையில் பட்டது. அச்சம் அணி செய்யும் முகத்தினராகக் கண்டார் மக்களை, தொட்டதற்கெல்லாம் – எடுத்ததற்கெல்லாம் – நாட்டு மக்கள் அஞ்சிச் செத்தனர். அந்நியனையும் அவனது துப்பாக்கித் தோட்டாக்களையும் கண்டு மட்டும் அஞ்சி ஒடுங்கி நடக்கவில்லை அவர்கள்; உடன் உள்ள மனிதர் சிலர் முணுமுணுக்கும் மந்திரங்கள், சுலோகங்கள் முன்பும் பணிந்து மரியாதை செய்து வாழ்ந்தார்கள்; பிசாசுகள், பூதங்கள் என்று எவையெவையோ அவர்களை எவ்வளவோ குலை நடுங்கச் செய்தன!

'இத்தகைய மனிதர்கள், விடுதலைக் கொடியை உயர்த்தும் வீரமக்களாக விளங்க முடியாது. இத்தகையோர் வாழும் நாடு தலைநிமிர்ந்து, உலகத்தின் ஏனைய நாடுகளுக்குச் சரிசமமான பார்வை எறிய முடியாது; அந்நிய ஆதிக்கத்தை அகற்றியபிறகு கூட இது நிறைவேறக்கூடியது இல்லை' என்பதை உணர்ந்தார்.

அதனால், நாட்டு மக்கள், முதலில் தங்கள் அச்சத்தை அடித்துத் துரத்த வேண்டும் என்று அவாவினார். தாழ்வு மனப்பான்மையைத் தூவென்று உதறித் தள்ள வேண்டும் என்று தூண்டினார். மக்கள் மனத்திலே நம்பிக்கையையும் துணிச்சலையும் விதைத்தார். அவர்களுள் மறைந்து கிடக்கும் மாபெரும் ஆற்றலைப் புலப்படுத்தினார். அந்த மாப்புகழ் வலிமை எவ்வாறு வீணாகிறது – மக்களின் தூங்குமூஞ்சித் தன்மை, அறியாமை, மூட நம்பிக்கைகள், தாழ்வு மனப்பான்மை, சாதி வெறி ஆகியவற்றின் காரணமாக எவ்வளவு தீமை விளைகிறது – என்பதை விளக்கினார்.



"வாழ்க்கை வசதிகள் அனைத்தும் பெற்று, மக்கள் வாழ வேண்டும். வணிகம் வளமுடன் நடைபெற வேண்டும். இயந்திரத் தொழில்கள் பெருகிட வேண்டும். புதுமைக் காலத்தின் நலன்கள் எல்லாம் நாட்டிலே பொங்கிக் குவிய வேண்டும்!" – என்றெல்லாம் அவர் விரும்புகிறார்.

### மக்கள் கவிஞரின் மாபெரும் வேலைகள்

சிந்தனைத் தெளிவுடன் பாரதி நிலைமையை ஆராய்ந்தார். நாட்டில் நடமாடும் தீமைகளை வேரோடு கிள்ளி எறிய முனைந்தார். மக்கள் நலனில் அக்கறை கொண்ட 'மக்கள் கவிஞரை'த் தவிர, யாரும் அவ்வளவு முயற்சி எடுத்திருக்க முடியாது.

பாரதியாருக்குத் தெரியும் – மக்கள் சக்தி ஆட்சி செய்யத் தொடங்கும் யுகம், இந்த யுகம் என்பது. மக்களே மன்னர்களாக மாறும் காலம் இது என்பதை அவர் அறிவார். எனவே, அத்தகைய விடுதலைக்காகப் போராடும்படி பொதுமக்களை அவர் தூண்டினார்.

கடவுளர்களுக்குப் பாமாலை, பதிகங்கள் பாடுவதோடு நின்றுவிடவில்லை பாரதி; மண் ஆளும் மன்னர்களுக்கும் விண்ணப்பப் பாக்கள் விடுக்கவில்லை.

மக்கள் கவிஞனை எதிர்நோக்கி நிற்கும் சிக்கல்கள்

அந்நியன் மீது அவருக்கு ஆத்திரம். நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினார் அவர். அதுமட்டுமே அவரது இலட்சியமாக, தீர்க்கமான முடிவாக இருந்துவிடவில்லை. அதுதான் அவரது இலட்சியத்தின் தொடக்கம்.



எண்ணற்றவை; மிகக் கடினமானவை. புதிய உண்மைகளை மக்கள் உணரும்படி செய்வது – புதுப்பாதையிலே அவர்கள் நடைபோடத் தூண்டுவது – புதிய நோக்கிலே விளைவுகளை எடைபோட அவர்கள் முயலும்படி செய்வது – எல்லாம் மக்கள் கவிஞனின் வேலைகள்!

சோதிடனது பிணைப்பிலிருந்து விடுவித்து நாட்டு மக்களை வானியல் வல்லுநர் பக்கம் திருப்புவது – இரசவாதியை அவர்கள் மத்தியிலிருந்து துரத்திவிட்டு, இரசாயனவாதியைக் கொணர்ந்து நிறுத்துவது – எல்லாம் அவன் வேலைகள்!

மத குருவை விலக்கிவிட்டு, அறிவுக்கண் திறக்க உதவும் ஆசானை நாடச் செய்வதும் அவன் வேலைதான்.

செப்பிடு வித்தைகள், மந்திர தந்திரங்கள் மூலம் நோய்களை ஒட்டுபவனை ஒட்டிவிட்டு, மருந்துகள் மூலம் குணப்படுத்தும் மருத்துவனுக்கு வழி வகுத்துக் கொடுக்க வேண்டியவனும் மக்கள் கவிஞனே!

### மக்கள் கவிஞருக்கு நம் மரியாதை

மூட நம்பிக்கைகள் நிர்மூலம் ஆக்கப்பட வேண்டும் – அறிவியல் ஆக்கம் பெறுவதற்காக! சுருக்கமாகச் சொல்லப் போனால், ஒரு புரட்சிக்காரனாக மக்களின் கவிஞன் இயங்க வேண்டும்.

கொடுங்கோலனை வாழ்விக்க வந்த வானகத் தூதன் என்றும், வாழ்விக்க வந்தவனைக் கொடுங்கோலன் என்றும் மக்கள் எளிதாக நம்பி விடுவார்கள். ஆதலால் மக்கள் கவிஞனின் வேலை, தொல்லைமிக்கதாக ஆகிறது.

பாரதியார் அச்சமின்றிப் போராடினார். அவர் நடத்திய போராட்டம் முடியவில்லை. அதற்குள்ளாகவே அவர் மறைந்து விட்டார்.

அவரது சிந்தனைப் படை வலிமையை நமக்கு உதவியுள்ளார். அதனைத் துணைக்கொண்டு போராட்டத்தை நாம் வெற்றிகரமாக முடிக்க முடியும்.

மக்கள் கவிஞர் பாரதியாருக்கு நாம் வழங்கும் மாபெரும் காணிக்கை – மரியாதை – அவர் நடத்திய அறிவுப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டியதுதான். தீவிரமாக – உன்னதமான போக்கில் – மக்கள் விடுதலைக்கான போராட்டம் நடைபெற வேண்டும்! வேண்டிய வீரர்கள் இருக்கிறார்கள் – வெற்றி காண்பது உறுதி!

*– (பேரறிஞர் அண்ணா வானொலியில், 1950ஆம் ஆண்டு, 'People's Poet' என்னும் தலைப்பில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்)*

★ ★ ★

# நிம்மதியான தூக்கம் - ஒன்பது வழிகள்

**– ஆசைத்தம்பி**

### குறிப்பிட்ட நேரத்தில் எழுதல்

நீங்கள் இரவு எத்தனை மணிக்குப் படுக்கச் சென்றாலும் சரி, காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எழுங்கள். சரியான நேரத்தில் தூங்காமல் இருந்தால், அடுத்த நாள் காலையில் அது மற்ற வேலைகளைப் பாதிக்கும்.

### இரவு உணவில் தாமதம் வேண்டாம்

உணவு செரிப்பதற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். இரவு 10, 11 மணிக்கு சாப்பிடுவது உங்களின் தூக்க நேரத்தைச் சீர்குலைக்கும். சரியான நேரத்திற்கு சாப்பிடுவதை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

### காபி மற்றும் மதுவைத் தவிருங்கள்

மது உங்களை தூங்கச் செய்யும். உங்களை முன்னதாக உசுப்பியும் விடும். தூக்க முறையை குழப்பும். காபி மற்றும் தேநீரில் ஆல்கலாயிடு உள்ளது. இவையும் தூக்கத்தை பாதிக்கும். தேவையான நேரத்தில் மட்டும் காபி, டீயை குடியுங்கள்.

### இரவு ஒன்பது மணிக்குப் பின் வேலை வேண்டாம்

நாள் முழுவதும் வேலை பார்த்த உங்களின் சுறுசுறுப்பு சற்று ஓய்வெடுக்க ஏங்கும். எனவே, இரவு 9 மணிக்குப் பின் வேலை செய்வதை தவிர்த்துவிடுங்கள்.

### தூக்க மாத்திரையை தவிர்க்கவும்

தூக்க மாத்திரை இல்லாமல் தூக்கம் இல்லை என்றால் மட்டுமே, தூக்க மாத்திரையை எடுத்துக் கொள்ளுங்கள். அதையே பழக்கப்படுத்திக் கொள்ளாதீர்கள். தூக்கமில்லாத ஒரு இரவு, தூக்க மாத்திரை சாப்பிட்டு, அடுத்த நாள் ஏற்படும் பின்விளைவுகளைவிட மேலானது.

### உண்மையான தூக்கம்

உங்கள் கண்களை தூக்கம் தழுவினால் மட்டுமே படுக்கைக்குச் செல்லுங்கள். இதமான இசையை கேட்பது அல்லது குளிப்பது தூக்கத்தைத் தரும்.

### நன்கு தூக்கம் வராமலிருந்தால்?

அதற்காக படுக்கையை விட்டு எழுந்து ஓடி விடாதீர்கள். சற்று தளர்ந்து ஓய்வு எடுங்கள். ஏதாவது சிந்தனை செய்து, அடுத்த நாள் காலையில் செய்ய வேண்டிய வேலைகளை யோசியுங்கள். அப்படியும் தூக்கம் வரவில்லையா, நல்ல வெளிச்சத்தில் புத்தகத்தை படியுங்கள். தொலைகாட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்.

### கனவுகளைக் கண்டு கலங்காதீர்கள்

ஏதேனும் மோசமான கனவுகள் வந்தால் கவலையடைய வேண்டாம். அது உங்கள் உடலின் அஜீரண கோளாறு அல்லது நீரிழிப்பு பிரச்சினையாக இருக்கலாம்.

### ஆலோசனை பெறுங்கள்

மேற்சொன்ன எல்லா வழிமுறைகளைப் பின்பற்றியும் உங்களை தூக்கம் தழுவவில்லையெனில் கவலைப் படாதீர்கள். நல்ல மனநல மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தேவ. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926 / 5364906

## கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.



உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் | மாதச் சந்தா | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா | கூடுதல் தொகை (3+4) | அரசு தள்ளுபடி * | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டர்ஃபிளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

**பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.**

# தமிழரசு

R.N.I.No.21446/70
Licence No.G/TN/CPMG/190, WPP-130

